REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மார்ச் 1 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 92 இல. 53 | Friday 01, March, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## சுவர் இடிந்து விழுந்ததில் 18 வயது இளைஞன் பலி

**உடப்பு குறூப் நிருபர்**

உடப்பு, பெரியகொலனி ஆண்டிமுனை பகுதியில் பழைய வீட்டு சுவர் பகுதியை உடைத்த நேரம் சீமெந்து கல் விழுந்து ஒருவர் இறந்த சம்பவம் வியாழக்கிழமை (29) மாலை வேளை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கணபதி பாக்கியம் என்பவரின் வீட்டுச் சுவரை

06

# "அஸ்வெசும" பெறத் தகுதியுடைய அனைவருக்கும் துரித நிவாரணம்



மாத்தளை, வில்கமுவ பிரதேச செயலகத்தில் நேற்று (29) நடைபெற்ற "அஸ்வெசும" வேலைத் திட்டத்தின் அமுலாக்கம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சென்று ஆராய்ந்த போது..

### 02ஆம் கட்டத்தில் 35,920 விண்ணப்பங்கள்

### " அஸ்வெசும" – " உறுமய" திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல அரச அதிகாரிகளின் ஆதரவு அவசியமென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டு மக்களை வாழ வைப்பதில் "அஸ்வெசும" மற்றும் "உறுமய" வேலைத் திட்டங்கள் பெரும் பங்காற்றுவதாகவும், நிவாரணம் கிடைக்க வேண்டிய அனைவருக்கும் துரிதமாக நிவாரணம் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"அஸ்வெசும" மற்றும் "உறுமய" திட்டங்களை முறையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு தேவை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாத்தளை, வில்கமுவ பிரதேச செயலகத்தில் நேற்று (29) நடைபெற்ற "அஸ்வெசும" வேலைத் திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக வில்கமுவ கிராம அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதி முன்னிலையில் அறிவித்தமையும் விசேட அம்சமாகும்.

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் கடந்த பெப்ரவரி (15) ஆரம்பமாகின. நேற்று

06

## புதிய பொலிஸ் மாஅதிபர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



புதிய பொலிஸ் மாஅதிபராக நியமனம் பெற்றிருக்கும் தேசபந்து தென்னகோன் நேற்று (29) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார். நாட்டின் 36 ஆவது பொலிஸ் மாஅதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் ஜனாதிபதியை மரியாதை நிமித்தம் சந்தித்தார். புதிய பொலிஸ் மாஅதிபர் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கினார்.

## தாமரைத் தடாக வளாகத்தில் ஸ்ரீமத் பகவத்கீதை மாநாடு

### இன்று ஆரம்பமாகி ஞாயிறு வரை தொடரும்



**கொழும்பு தினகரன் நிருபர்**

சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதை (2024) மாநாடு இன்று (01) தாமரைத் தடாக அரங்கில் ஆரம்பமாகிறது. இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் இம்மாநாடு ஞாயிற்றுக் கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெறும்.

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தின் குருக்ஷேத்ரா அபிவிருத்தி சபையால் வருடாந்தம் பகவத்கீதை மாநாடு நடத்தப்பட்டு வருகிறது. இந்தவகையில், இம் மாநாடு புத்தசாசன, மத மற்றும் கலாசார

06

## மோட்டார் போக்குவரத்து திணைக்கள சேவைகளைப் பெற நாள், நேரம் கட்டாயம்

### மார்ச் 04 முதல் நடைமுறை www.dmtappointments.dmt.gov.lk

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகங்களில் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்வது எதிர்வரும் மார்ச் 04 முதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதற்காக தானியங்கி தொலைபேசி இலக்கம்

06

## ரூபா. 2,000 கோடியில் 1,500 கி.மீ வீதிகளை புனரமைக்கும் திட்டம்

### நாடளாவிய ரீதியில் நேற்று முதல் ஆரம்பம்



நாடளாவிய ரீதியில் 1,500 கிலோ மீற்றர் வீதிகளை 2,000 கோடி ரூபா செலவில் புனரமைக்கும் திட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுசன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமானது.

கடுமையாகச் சேதமடைந்துள்ள வீதிகள், மண்சரிவுக்கு உள்ளான வீதிகள் மற்றும் அழிவுற்ற வீதிகளை புனரமைக்கும் நோக்கிலே, இத்திட்டம் ஆரம்பிக்கப் பட உள்ளது. இதை ஆரம்பித்து வைக்கும் வேலைகள், கஹதுடுவ, வெனிவேல்கொல

06

## தேசிய சைபர் பாதுகாப்பு சட்டம் வருட இறுதிக்குள் கொண்டுவரப்படும்

### டிஜிட்டல் பொருளாதார மாநாடு ஜூலை இறுதியில்



தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை (National Cyber Security Act) இவ்வருடத்துக்குள் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னர் சைபர் பாதுகாப்பு அதிகார சபையை நிறுவவுள்ளதாகவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், டிஜிட்டல் பொருளாதார மாநாட்டை ஜூலை மாத இறுதியில், நாட்டில் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (29) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"கடந்த காலத்தில் 4.73% ஆக காணப்பட்ட டிஜிட்டல் பொருளாதாரம் இன்று 5% வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. அதனால் பொருளாதாரமும் வலுவடைந்திருக்கிறது. இதனை மேலும்

06

## தோட்ட நிர்வாகத்தின் தலையீடுகளின்றி மலையகத்தவர் NIC பெற ஆவன செய்யவும்

### அமைச்சர் ஜீவன் ஆணையாளருக்கு கடிதம்



தேசிய அடையாள அட்டை பெறும் விடயத்தில் தோட்ட நிர்வாகத்தின் தலையீடின்றி ஏனைய சமூகம் போன்று கிராமசேவகரின் உறுதிப் படுத்தலுடன் வழங்குவதற்கு, ஆவன

06

## காஸா சிறுவர் நிதியம்; நிதிகளை ஏப்ரல் 11 க்கு முன்னர் வழங்கவும்



காஸா சிறுவர் நிதியத்துக்காக சேர்க்கப்படும் நன்கொடை எதிர்வரும் ஏப்ரல் 11 இல், கையளிக்கப்படவுள்ளதால் நன்கொடை செய்ய விரும்புவோர் விரைவில் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசிய கட்சி இவ்வாறு அறிவித்துள்ளது.

கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார இந்த

06

## மறைந்த ரொனி டி மெலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி



சிறந்த அரசியல்வாதியும் தலைசிறந்த பொருளாதார நிபுணருமான மறைந்த

06



## 03 உத்திக பிரேமரத்னவின் வெற்றிடத்திற்கு எஸ்.சி. முதுகுமாரண தெரிவாகிறார்

### தேர்தல் ஆணைக்குழு அறிக்கை

## நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிரான சுமந்திரன் எம்பியின் மனு நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பி ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது. நிகழ்நிலை காப்புச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானதென தீர்ப்பளிக்குமாறு கோரி, சுமந்திரன் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவையே விசாரணையின்றி நிராகரிக்க உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளான பிரியந்த ஜயவர்த்தன, ஷிரான் குணரட்ண, அச்சல வெங்கப்புலி

06

## முஷரப் எம்.பி.யை நீக்கியமை சட்டத்துக்கு முரணானது

### உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷரப்பை, கட்சியிலிருந்து நீக்குவதற்கு மேற்கொண்ட தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தம்மைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக முஷரப்

06

## சதுப்பு நிலங்களை மறுசீரமைப்பதில் முன்னணி நாடாக இலங்கை

### ஐ.நாவின் விருது சுற்றாடல் அமைச்சின் செயலரிடம்



ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வில் (UNEA6), சதுப்பு நிலங்களை மறுசீரமைப்பதில் உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னணி நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

கென்யாவின் நைரோபி நகரில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வேலைத் திட்டத்தின் (UNEP) தலைமையகத்தில் நடைபெற்ற மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, காலநிலை மாற்றம்

06

## கட்டட சுத்திகரிப்புத் துறையில் ஜப்பானில் வேலைவாய்ப்புகள்

### ஜூன் மாதம் தேர்வு பரீட்சை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜப்பானில் வேலைவாய்ப்புக்கள் வழங்குவதற்கான தேர்வுப்பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளதாக தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜப்பானில் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ள இலங்கையருக்கு, அங்கு கட்டட

06

## எச்.ஐ.வி நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

### எட்டு வருடங்களின் பின்னரே அறிகுறிகள் தென்படும்

**புதிதாக எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டம் தெரிவித்துள்ளது.**

**2022 ஐ, விடவும் 2023இல், புதிய எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை 14.3 சதவீதம் அதிகரித்துள்ளதாக சமூக மருத்துவ நிபுணர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார். கடந்த வருடம் கண்டறியப்பட்ட 694 புதிய எச்.ஐ.வி நோயாளர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாக அடையாளம் காணப்பட்டனர். 694 பேரில், 611 ஆண்கள் தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்டனர். இது,**

06

## மொனராகலையில் பஸ் விபத்து மாணவருட்பட 36 பேர் காயம்




மொனராகலையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 36 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று (29) வியாழக்கிழமை இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றே புத்தம பகுதியிலிருந்து மொனராகலை நோக்கி பயணித்த போது விபத்திற்குள்ளானது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற இந்த பஸ்வண்டி சியம்பலாண்டுவ பிரதேசத்தில்

06

# நகர்வலம்



நீர் வழங்கல் துறை மறுசீரமைப்பு

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ரூ. 200 மில். அமெரிக்கன் டொலர்கள்

அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நீர் வழங்கல் துறை மறுசீரமைப்பு திட்டங்களுக்காக 200 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை கடனாக பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அந்த நிதி முதலாவது உப வேலைத் திட்டத்திற்கான கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கடனாக பெற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன் இரண்டாவது உப வேலைத் திட்டத்தின் கீழ் மேலும் 100 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் துறை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 75 வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் மீதமானவற்றை முன்னெடுப்பதற்கு மேற்படி நிதி உறுதுணையாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பிலான ஆய்வரங்கம் நாளை

எம்.ஐ.எம். முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம் இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பிலான ஆய்வரங்கமொன்றை(Annual Symposium) நாளை இரண்டாம் திகதி மாலை மூன்று மணிக்கு கொழும்பு தபால் திணைக்கள தலைமையக கேட்போர் கூடத்தில் நடத்துகிறது.

நிலையத்தின் ஆளுநர்சபைத் தலைவர் பொறியியலாளர் ஜௌபர் இஸ்மாயில் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில் நோக்க உரையை வரலாற்றுத்துறைப்பேராசிரியரும் புருணை தாருஸ்ஸலாம் பல்கலைக்கழக ஓய்வு நிலைப்பேராசிரியருமான எஸ்.ஏ ஹுசைன்மியா நிகழ்த்தவுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம் ஏ .நுஹ்மான், பேராதனைப் பல்கலக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், களனிப்பல்கலைக்கழக தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிறுவன சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, கொழும்பு பல்கலைக்கழக பொதுக்கொள்கை மற்றும் அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ், எழுத்தாளர், பன்னூலாசிரியர் வரலாற்றுத்துறையில் முதுமாணி, வரலாற்றுத்துறை ஆய்வாளர் கலாநிதி றவூப் செயின், எழுத்தாளர், ஆய்வாளர், தொல்லியல்துறை பட்டபின்படிப்பு மேற்கொண்டுள்ள ஆசிப் ஹுசைன், ஆய்வாளர் தொல்லியல் துறையில் கலாநிதி ஜெஸ்மில் அப்துல் ரகீம், எழுத்தாளர், ஆய்வாளர் சிராஜ் மஷூர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன செய்தி ஆசிரியர்,வரலாற்று ஆர்வலர் பர்ஹான் நவாஸ், சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் லறீன் அப்துல் ஹக் போன்றோர் தமது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.




மர்ஹூம் எம்.ஐ எம்.மொஹிடீன்

இவ்வாய்வரங்கம் தொடர்பாக எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சிராஜ் மஷூர் கருத்துத் தெரிவிக்கையில் "சித்திலெப்பையின் சகாவான I.L.M.அப்துல் அஸீஸ், 1907 இல் எழுதிய 'A Criticism of Mr.Ramanathan's Ethnology of the Moors of Ceylon'' என்ற நூல்தான் இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பாக முஸ்லிம் தரப்பு சார்பில் வெளிவந்த முதல் நூல். அது வெளிவந்து சுமார் 115 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், நமது வரலாற்று அறிவின் நிலைவரம், திசைவழி எப்படி உள்ளது என்று அலசி ஆராய்வது முக்கியமாகும்" என்றார்.

இலங்கையின் சிறந்த ஆய்வாளராக,முற்போக்கு சிந்தனையாளராக, எழுத்தாளராக வாழ்ந்து மறைந்த அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக்கொண்ட மர்ஹூம் எம்.ஐ எம்.மொஹிடீனை நினைவு கூரும் வகையில் அக்கரைப்பற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மர்ஹூம் 'மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்' வைபவரீதியாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது. மேலும் அன்னாரை கௌரவிக்குமுகமாக அவரின் பிறந்த இடமான அக்கரைப்பற்று இரண்டாம் மூன்றாம் குறிச்சி பொதுவீதி அக்கரைப்பற்று மாநகரசபையால் சூட்டப்பட்ட மொஹிடீன் வீதி என்ற பெயர்ப்பலகையும் மாநகரசபை உத்தியோகஸ்தர்கள் முன்னிலையில் மர்ஹூம் எம்.ஐ.எம். மொஹிடீன் ஆய்வு மற்றும்ஆவணப்படுத்தல் நிலைய ஆளுநர் சபையின் தலைவர் ஜௌபர் இஸ்மாயிலால் திரைநீக்கம் செய்யப்பட்டதும் இங்கு குறிப்படத்தக்கது.

அக்கரைப்பற்று பட்டினப்பள்ளி வீதியில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீனின் ஆய்வுக்கட்டுரைகள், தகவல் கணிப்பீடுகள், அவரது சிந்தனையில் உருவான கட்டட தொழில்நுட்பங்கள், கருத்துக்கணிப்பீடுகள், அன்னார் கலந்து கொண்ட தேசிய, சர்வதேச ரீதியிலான பேச்சுவார்த்தைகள் பற்றிய துணுக்குகள், சமாதான பேச்சுவார்த்தையின்போது அவர் கூறிய கருத்துகள் ஆகியன சம்பத்தப்பட்ட நூல்கள், பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு அவை இறுவட்டு வடிவத்திலும் வைக்கப்பட்டுள்ளன. விரும்பியோர், ஆய்வாளர்கள் மற்றும் ஆவலர்கள் இங்கு வருகை தந்து தமக்குத் தேவையானவற்றைப் பார்வையிடலாம், வாசிக்கலாம், பிரதிகள் பண்ணலாம்.

அதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி சிராஜ் மசூர் தெரிவித்தார்.

எம்.ஏ. பகுர்டீன்
(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## சர்வதேச ஊடக தினம்; இரத்ததான முகாம்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு மாத்தளை மாவட்ட பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 8 மணிக்கு மாத்தளை பௌத்த மந்திர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பத்திரிகை சங்கத்தின் 4வது வருடமாக இடம்பெறும் இந்த இரத்த தான முகாமில் விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டகொட மற்றும் மாவட்ட செயலாளர், மாத்தளை மாநகர சபை ஆணையாளர் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர்.

## இலங்கை சட்டக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு

முத்திரை வெளியீடு இன்று




இலங்கை சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு அதன் 150ஆவது ஆண்டு நிறைவு இன்று கொண்டாடுகிறது. இதனையிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இதன் முதல் நாள் நிகழ்வு இன்று (01) பிற்பகல் 2.30 மணிக்கு சட்டக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய கலந்துகொள்வார்.

அத்துடன் நிகழ்வில் நீதியமைச்சர், சட்ட மாஅதிபர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் ஏனைய நீதிமன்ற நீதிபதிகள், சட்ட மாஅதிபர் திணைக்கள அதிகாரிகள், சட்டக் கல்லூரி தலைவர் மற்றும் அதிகாரிகள், சட்டக் கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொள்வர். இலங்கையில் 1874ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் பாஹிமட் அல் அஸீஸ் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியை கொழும்பிலுள்ள தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.



கலாநிதி எஸ். ஸ்ரீபிருந்திரனின் "இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி" எனும் நூலின் வெளியீட்டு விழா, மஹரகம, தேசிய கல்வி நிறுவகத்தின் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நூலின் முதற்பிரதியை உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவனிடமிருந்து புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதையும் நூலாசிரியர் கலாநிதி எஸ். ஸ்ரீபிருந்திரன் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

படம் : எம். நசார்

## ஜாமிஆ நளீமிய்யா கலாபீட உள்ளக வீதிக்கு காபட் இடும் பணி ஆரம்பம்

அமைச்சர் பந்துல குணவர்தன, மர்ஜான் பளீல் எம்.பி ஆகியோருக்கு கலாபீட முதல்வர் பாராட்டு

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் உள்நுழைவு பாதை மற்றும் உள்ளக வீதியை காபட் இடும் பணிகள் நேற்று (29) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்த வேண்டுகோளின்பேரில், நெடுஞ்சாலைகள் அமைச்சின் 1500 கிலோ மீற்றர் பாதைகள் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் இப்பாதைக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு நேற்றைய தினம் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் முக்கிய தேவையாக வெளிநாடு சென்றுள்ளதால் அவரின் பிரதிநிதியாக அவரது சகோதரர் அஸாம் பளீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டு காபட் இடும் பணிகளை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ் ஷெய்க் ஏ.ஸீ. அகார் மொஹமட், நெடுஞ்சாலைகள் அமைச்சின் உயரதிகாரிகள் உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்; நளீமிய்யா கலாபீட வீதியை காபட் இடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை பாக்கியமாக கருதுகிறேன்.





இதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு முதல் நன்றி தெரிவிப்பதோடு வெகுவிரைவில் இவ்வீதியை அமைச்சரின் பங்குபற்றலுடன் திறந்து வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி ஆயத்த நடவடிக்கை குறித்து ஆராய்வு

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன் ஆயத்த நடவடிக்கை தொடர்பான இறுதி கலந்துரையாடல் நேற்று திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவர் இராமகிருஷ்ணன், திணைக்கள தலைவர்கள், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டிருந்தனர்.



இக்கலந்துரையாடலின் போது எதிர்வரும் 8 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழா தொடர்பாகவும் அதன்பின்னர் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர், உணவு தங்குமிட ஏற்பாடுகள், பாதுகாப்பு உள்ளடங்கலாக முன்னெடுக்க வேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

## பொலநறுவையில் இன்று நீர் வெட்டு

பொலநறுவை, பெதிவெவ மற்றும் சேவகம நீர் வழங்கல் திட்டங்களில் அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று (01) வெள்ளிக்கிழமை மு.ப. 8 மணி முதல் பி.ப. 6 மணி வரையிலான 10 மணிநேர நீர்வெட்டு பின்வரும் பகுதிகளில் தடைப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பெதிவெவ நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படும் பிரதேசங்கள், ஜயந்திபுர, இரிதல, லக்ஷஉயன, உனகல வெஹர, சிங்க உதாகம, தல் பொத்த, பெதிவெவ, BOP16, சேவாகம நீர் வழங்கல் திட்டத்தினால் நீர் விநியோகிக்கப்படும் பகுதிகள், சேவாகம, தம்பாலை, நிசங்க மல்லபுர, பரக்கும்உயன, ஓனகம, வீரபுர ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

## லைப்பொண்ட் நிறுவனத்தின் நிகழ்நிலை பயிற்சி நெறி அங்குரார்ப்பணம்

கிண்ணியா தினகரன் நிருபர்

திருமண பந்தத்தில் இணைய இருப்பவர்களுக்கான நிகழ்நிலை பயிற்சி நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு வட்டதெனிய கம்பளையில் அமைந்துள்ள கதீஜத்துல் குப்ரா மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (28) இடம்பெற்றது.

லைப்பொண்ட் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.சறூக்கின் வழிகாட்டலின் கீழ் ஜே.ஜே நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறும் இக்கற்கைநெறி துறைசார் வளவாளர்களின் பங்குபற்றுதலுடன் நடத்தப்படுகிறது. இந்நிகழ்வில் லைப்பொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி அஷ்ஷெய்க் பகீஹுத்தீன், நிறுவனத்தின் கலைத்திட்ட நெறியாளர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத், நிறுவன முகாமையாளர் இர்ஷாத் முஹமட், கதீஜத்துல் குப்ரா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அல் ஹாபிழ் ஏ.எஸ்.எம். பாறூக் (அல் அஸ்ஹரி), கல்லூரியின் முன்னாள் அதிபர் அஷ்ஷெய்க் நிஹால் ஆகியோர்களுடன் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இக்கற்கை நெறி நேரடியாகவும் நிகழ்நிலை ஊடாகவும் லைப்பொண்ட் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்படி நிறுவனம் திருமணம் முடிக்க காத்திருப்போர்களுக்கான கற்கை நெறி, திருமணத்திற்கு பின்னரான கற்கைநெறி, குடும்ப பிணக்குத் தொடர்பான சட்ட ஆலோசனை, மகிழ்ச்சியான குடும்ப உருவாக்கம், கொண்டு செயற்படும் ஒரு சமூக நிறுவனமாகும்.

## எல்பிட்டி பிரதேச சபை வரவு செலவுத் திட்டம்

நான்காவது தடவையாகவும் தோல்வி

லோரன்ஸ் செல்வநாயகம்

எல்பிட்டி பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நான்காவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக 14 வாக்குகளும் ஆதரவாக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் அவற்றின் ஆட்சிக் காலம் நிறைவடைந்து கலைக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை கலைக்கப்படாத ஒரே யொரு உள்ளூராட்சி நிறுவனமாக எல்பிட்டிய பிரதேச சபை மட்டுமே காணப்படுகிறது. பொதுஜன பெரமுனவின் அதிகாரத்திலுள்ள மேற்படி பிரதேச சபையில் வரவு செலவு திட்டத்தின்போது அந்த கட்சியின் அங்கத்தவர்கள் ஏழு பேர் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 1 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.08
ளுஹர் - 12.24
அஸர் - 03.42
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோப கிருது வருடம் மாசி 18
ராகுகாலம் : பகல் : 8.57 - 12.27வரை
சுபநேரம் : காலை : 6.27 - 7.57 வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# இந்து சமுத்திர கப்பல் போக்குவரத்து பாதுகாப்பை இலங்கை உறுதிப்படுத்தும்

## இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டில் ஜனாதிபதி

இந்து சமுத்திர கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பிராந்திய நாடுகளிடையில் அதிகார மோதலைத் தவிர்த்தல் உள்ளிட்ட விடயங்களில் இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடல்சார் செயற்பாடுகளின் சுதந்திரத்துக்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாலேயே செங்கடல் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகார மோதல்கள் இன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்துச் செயற்பாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலான மூலோபாய நிலைப்பாடுகளை பேணுவதில்




இலங்கை அர்பணிப்புடன் இருக்குமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாத் பைண்டர் மன்றம் ஏற்பாடு செய்த இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டின் மூன்றாம் கட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் (28) நடைபெற்றது. இரு நாள் மாநாட்டில் பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதில் உரையாற்றிய ஜனாதிபதி, ஆறு நாள் யுத்தத்தின் விளைவாக சுயஸ் கால்வாய் மூடப்பட்டதால் கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகள் பாதிப்புற்றன. 06



புதிய பொலிஸ் மாஅதிபராக பதவியேற்ற தேசபந்து தென்னகோன் நேற்று (29) மரியாதை நிமித்தம் பிரதமர் தினேஷ் குணவர்தனவை அலரி மாளிகையில் சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

# சிலாபம் மறைமாவட்டத்துக்கு புதிய ஆயர்: பாப்பரசரால் நியமிப்பு

## நாளை திருநிலை திருப்பலி



சிலாபம் மறைமாவட்ட புதிய ஆயராக கலாநிதி பேரருட்திரு தொன் ஜயசூரிய ஆண்டகை பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது ஆயர்த்துவ திருநிலை அபிஷேக திருப்பலி பூஜை வழிபாடுகள் நாளைய தினம் (02) காலை 9.00 மணிக்கு சிலாபம் புனித கார்மேல் மாதா பேராலயத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

சிலாபம் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, கண்டி மறைமாவட்டத்துக்கு மாற்றலாகி சென்றதையடுத்து வெற்றிடத்துக்கு புதிய ஆயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தவக்கால சிந்தனை



## கடவுளின் கருணை நிறைந்த காலம்

திரு அவையாக தவக்காலம், 'வசந்தகாலத்தின்' அழைப்பாயின், குறிப்பாக திருமுழுக்குத் தயாரிப்போருக்கான இறுதிக் கட்டத் தயாரிப்பின் காலமாக அமைவதோடு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு புகுமுக அருளடையாளங்களாகிய திருமுழுக்கு, நற்கருணை, உறுதிப்பூசுதல் வாயிலாக திருஅவையின் முழு உறுப்பினர்களாக மாற்றம் பெறுகின்றனர்.

மேலும், இக் காலத்தின் இறை வார்த்தைகள் நமக்கு விடுக்கும் அழைப்பானது, நமது திருமுழுக்கின் அடையாளமாகிய கிறிஸ்துவின் சீடர்கள் என்கிற நிலையில் ஆழமாக வளரவேண்டுமென்பதாகும்.

தவக்காலப் புதுப்பித்தலின் இரண்டாம் வாரத்தின் நிறைவினை நோக்கி நகரும் போது, விவிலியத்தில் நன்கு அறியப்பட்ட, பன்னெடுங்காலமாக சொல்லப்படுகின்ற கதையாகிய யோசேப்பும் அவரது சகோதரர்களும் பற்றிய கதை நாம் அனைவரும் அறிந்ததே. தொடக்க நூல் 37ஆவது பிரிவிலும் தொடர்ந்து வருகின்ற பகுதிகளிலும் யோசேப்பின் வாழ்வில் வியக்கத்தக்க மற்றும் சூழ்ச்சியான முறையில் இறைவன் செயலாற்றிய விதமும் எகிப்தின் அதிபதியாகிய பாரவோனின் முன்னிலையில் அவரை உயர்வடையச் செய்தமையையும் வாசிக்கின்றோம்.

இன்றைய நாளின் முதல் வார்த்தையில் கனவு காண்பவராகிய யோசேப்பு தந்தையின் விருப்பத்திற்குரியவராகவும் தமது சகோதரர்களின் வெறுப்புக்குரியவராகவும் சித்தரிக்கப்படுகின்றார். அதனால், குற்றமற்ற யோசேப்பு தமது சகோதரர்களால் முதலில் பாழ் கிணற்றில் போடப்பட்டு பின்னர் எகிப்திற்கு செல்கின்ற இஸ்ரவேலிய வர்த்தகர்களுக்கு விற்கப்படுகிறார்.

சந்தேகத்திற்கு இடமின்றி கிறிஸ்துவை பிரசன்னப்படுத்துகின்ற யோசேப்பு எகிப்தில் தமது சகோதரர்கள் மட்டில் பெருந்தன்மையும் தமது தந்தை மட்டில் பாசத்தையும் காண்பிக்கின்றார்.

யோசேப்பு பழிவாங்குதல் மற்றும் பழிவாங்கும் தீமைக்கெதிராக உயர்ந்துநின்று தவக்காலத்தின் இதயமாகிய கடவுளின் நம்பமுடியாத கருணை மற்றும் மன்னிக்கும் ஒப்புரவினைக் காண்பித்து அனைவருக்கும் விருப்பமானவராக மாறுகிறார்.

கடவுள் எப்போதும் நம்மை தமது உயிர்கொடுக்கும் கருணையால் நிறைத்து கிறிஸ்துவின் சீடர்களாக நாமும் அதனை அடுத்தவர்களுக்கு செய்ய அழைக்கின்றார். இதனைச் செய்யவே நம் திருத்தந்தை பிரான்சிஸ் அனைவரையும் அழைக்கின்றார். தவக்காலம் என்பது கடவுளின் கருணை வாழுமிடமாக, ஆழமாக வசிக்குமிடமாக திருஅவை திகழ அனைவரையும் அழைக்கும் காலமாகும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# உத்திக பிரேமரத்னவின் வெற்றிடத்திற்கு எஸ்.சி.முதுகுமாரண தெரிவாகிறார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தமது எம். பி. பதவியை ராஜினாமா செய்ததையடுத்து, அவரது இடத்துக்கு எஸ்.சி.முதுகுமாரண நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன அண்மையில் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். 06

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நகர அபிவிருத்தி அதிகாரசபை

முதலீட்டு முன்மொழிவு அழைப்பு

"கபூர்" ஹோட்டல் அபிவிருத்தித் திட்டம் கொழும்பு கோட்டை
காணி அளவு : 117 பர்ச்சஸ்
குத்தகைக் காலம் : 50 ஆண்டுகள்
குத்தகை தொகை : ரூபா 3,592,800,000/-

மனை மற்றும் கலப்பு அபிருத்தித் திட்டம் கொழும்பு 07
(ஒடர்ஸ் எக்வடிக் விடுதி அமைந்துள்ள வளவின் பாகம்)
காணி அளவு : 158.15 பர்ச்சஸ்
குத்தகை காலம் : 99 ஆண்டுகள்
குத்தகை தொகை : ரூபா 2,268,700,000/-

நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் சிறந்த முதலீட்டு வாய்ப்பு

ஓய்வு விடுதி மேம்பாட்டுத் திட்டம்
களுத்துறை களிடோ கடற்கரை
காணி அளவு : 96.00 பர்ச்சஸ்
குத்தகை காலம் : 30 ஆண்டு குத்தகை அடிப்படை
குத்தகை தொகை : ரூபா 40,000,000/-

கலப்பு அபிவிருத்தித் திட்டம்
மாகும்புர, கொட்டாவை
காணி அளவு : 187.59 பர்ச்சஸ்
குத்தகை காலம் : 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை
குத்தகை தொகை : ரூபா 558,600,000/-

காலி கோட்டை, பழைய தபால் அலுவலக கட்டிட பாதுகாப்பு மேம்படுத்தல்
காணி அளவு : 87.40 பர்ச்சஸ்
குத்தகை காலம் : 50 ஆண்டு குத்தகை அடிப்படை
குத்தகை தொகை : ரூபா 1,035,000,000/-

அதிக உயரம் கொண்ட கலப்பு அபிவிருத்தித் திட்டம்
செத்தம் வீதி, கொழும்பு 01
காணி அளவு : 94.76 பர்ச்சஸ்
குத்தகைக் காலம் : 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை
குத்தகை தொகை : ரூபா 1,755,000,000/-

கேள்வி
கலப்பு அபிவிருத்தி
வரக்காபொலை நகர மத்தி

மேலதிக விபரங்களுக்கு : பகிரங்கப்படுத்தப்பட்ட விளம்பரம்
21/01/2024 : மௌபிம, சண்டே ஒப்சவர், சண்டே டைம்ஸ் மற்றும் தி. வாரமஞ்சரி
11/02/2024 : மௌபிம, சண்டே ஒப்சவர் மற்றும் தி. வாரமஞ்சரி

## செயற்பாடு மற்றும் முகாமைத்துவம்

நகர அபிவிருத்தி அதிகாரசபை வசமுள்ள தொல்பொருள் பெறுமதி கொண்ட ஆதனங்களை வருடாந்த குத்தகை/ வாடகை அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுதல்

காலி கோட்டையில் அமைந்துள்ள பழைய டச்சு வைத்தியசாலை கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள கடைத் தொகுதி
அடிப்படை வருடாந்த குத்தகை வாடகை ரூபா 36,000,000/-
பிணை முறி - ரூபா 4,000,000/-
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு - 2024.04.25 மு.ப. 10.00
விலைமனு கோரல் நிறைவு - 2024.06.05 பி.ப. 2.00

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள டச்சு வைத்தியசாலை கடைத் தொகுதி கட்டிடம் மற்றும் விற்பனை திணைக்கள கட்டிடம்
அடிப்படை வருடாந்த குத்தகை வாடகை ரூபா 75,000,000/-
பிணை முறி - ரூபா 8,000,000/-
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு - 2024.04.25 பி.ப. 2.00
விலைமனு கோரல் நிறைவு - 2024.06.05 பி.ப. 2.30

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்புகள் குறித்த தகவல்கள் அடங்கிய முதலீட்டு முன்மொழிவு அழைப்பு ஆவணத்தை மீளளிக்கப்படாத 25,000 ரூபா தொகை மற்றும் குறித்த அரச வரித் தொகையுடன் பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் I, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி, 8அவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பிரிவிடம் இருந்து 2024 மார்ச் மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் 2024 மே மாதம் 08 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

முதலீட்டு முன்மொழிவு ஏற்பது நிறைவடைவது மற்றும் கிடைத்துள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகளை அப்போதே திறப்பது பத்தரமுல்லை, "செத்சிறிபாய கட்டம் I", 02ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு கேட்போர் கூடத்தில் மேல் குறிப்பிடப்பட்ட நாட்கள் மற்றும் நேரங்களில் மேற்கொள்ளப்படும். விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அதற்காக பங்கேற்க முடியும்.

பணிப்பாளர் (ஆதன மேம்பாடுகள்), ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, செத்சிறிபாய முதல் கட்டம், பத்தரமுல்லை.
தொலைபேசி: 011 2875921, 011-3611950 அல்லது 011-2875916-20 நீடிப்பு: 2960-2968 தொலைநகல்: 011-2875900 மின்னஞ்சல்: directorred@uda.gov.lk இணையதளம்: www.uda.gov.lk

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணக்கக் குழு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, செத்சிறிபாய கட்டம் II, 12ஆவது மாடி, பத்தரமுல்லை

தினகரன்
THINAKARAN திනකරන්

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 19

### குறள் தரும் சிந்தனை

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

ஐம்புலன்களின் இயல்பை உணர்ந்து
அவற்றை அடக்கியாளும் திறன்
கொண்டவனையே உலகம் போற்றும்.

## மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துவது நியாயமல்ல!

சிறியதொரு பிரச்சினை எதிர்கொள்ளப்பட்டாலும், ஊழியர்கள் உடனடியாகவே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது இலங்கையில் வழமையாக நாம் காண்கின்ற காட்சியாகும். ஊழியர்கள் தாமாகவே முன்வந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஒருபோதும் ஈடுபடுவதில்லை. அவ்வாறான போராட்ட நடவடிக்கையின் பின்னணியில் தொழிற்சங்கங்களே இருப்பதுண்டு.

தொழிற்சங்கங்களின் தூண்டுதலின் பேரில்தான் பணிப்பகிஷ்கரிப்பு, சட்டப்படி வேலை இயக்கம் போன்ற போராட்ட நடவடிக்கைகளில் ஊழியர்கள் ஈடுபடுவதுண்டு. தங்கள் கோரிக்கைகள் நியாயமானவையா அல்லது நியாயமற்றவையா என்ற ஆய்விலும் தொழிற்சங்கங்கள் ஈடுபடுவதில்லை. எதையுமே ஆராய்ந்து பார்க்காமல் எடுத்த எடுப்பிலேயே வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது இலங்கையில் வழமையான ஒரு செயற்பாடாகும்.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான உரிமை தொழிற்சங்கங்களுக்கு உண்டென்பதை மறுப்பதற்கில்லை. ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டாலோ அல்லது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டிய தேவை இருந்தாலோ முதலில் அப்பிரச்சினைகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதே முறையாகும். அதன் பின்னரே தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதையிட்டு சிந்திக்க வேண்டும்.

ஆனால் இலங்கையில் நிலைமை அவ்வாறில்லை. வேலைநிறுத்தமும், போராட்டமும் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே, தொழிலாளர்களின் கோரிக்கை என்னவென்பது வெளியே தெரியவருவதுண்டு. வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்து, பொதுமக்களை சிரமங்களுக்கு உள்ளாக்கிய பின்னரே ஊழியர்களின் கோரிக்கை என்னவென்பது தெரியவருகின்றது. ஆகவேதான் ஊழியர்களின் போராட்டங்கள் சந்தேகக்கண் கொண்டு நோக்கப்படுகின்றன.

இப்போராட்டங்களின் உண்மையான நோக்கம் என்ன? கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை பலவந்தமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு தொழிற்சங்கங்கள் முற்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது. அல்லது பொதுமக்களை சிரமங்களுக்கு உள்ளாக்கி அதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தொழிற்சங்கங்கள் முற்படுகின்றனவா என்ற சந்தேகமும் வருகின்றது.

பொதுமக்களை சிரமத்துக்கு உள்ளாக்கினால் அவர்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொள்ளக் கூடும். அதன் மூலம் பொதுமக்களை தங்களது பக்கம் வசீகரித்துக் கொள்ள முடியுமென்று எதிரணிகள் எதிர்பார்க்கவும் கூடும்.

நாட்டில் அவ்வப்போது இடம்பெறுகின்ற பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் போராட்டங்களைப் பார்க்கின்ற போது, மற்றொரு சந்தேகம் தவிர்க்க முடியாமலேயே எழுகின்றது. அரசின் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கிலேயே இவ்வாறான போராட்டங்களை எதிரணியினர் திட்டமிடுவதாக சந்தேகிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் ஆசிரிய தொழிற்சங்கப் போராட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அது சம்பந்தமான ஊடக சந்திப்பில் அரசியல் சாயமே காணப்படுகின்றது.

அரசியல்வாதிகள் மீது வசைபாடுவது தொழிற்சங்கங்களுக்கு உரிய விடயமல்ல. ஒரு தொழிற்சங்கத்தின் பணியானது தங்களது ஊழியர்களின் நலனுக்காகப் போராடுவது மட்டுமென்று எண்ணுவதும் தவறு. மக்களின் நலன் மீது கரிசனை செலுத்துவதும் தொழிற்சங்கங்களின் கடமையாகின்றது. மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கே ஊழியர்கள் நியமிக்கப்படுகின்றனர். அந்த ஊழியர்களின் நலன்களைக் கவனிப்பதற்கே தொழிற்சங்கங்கள் உள்ளன. ஆகவே மக்களின் நலனை மறந்து தொழிற்சங்கங்கள் செயற்படுமாக இருந்தால் அதில் அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

ஆகவே மக்களின் நலன்தான் இங்கு முன்னுரிமை பெறுகின்றது. மக்களை சிரமத்துக்கு உள்ளாக்குவதை சாதாரண விடயமாக தொழிற்சங்கங்கள் எடுத்துக் கொள்ளுமாக இருந்தால், அது பெரும் அநீதி ஆகும். வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் இவ்விடயத்தை நன்கு புரிந்து கொள்வது அவசியம்.

பொருட்களுக்கும் சேவைகளுக்கும் இக்காலத்தில் உள்ள விலையேற்றங்களை எடுத்துக் கொள்வோமானால் மக்கள் மீதான வாழ்க்கைச்சுமை அதிகமாக உள்ளதென்பதை மறுக்க முடியாது. அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அது எவருக்கும் புரியாத ஒரு விடயமல்ல.

இவ்விடயத்தை மறுபுறத்தில் நாம் நோக்குவோமானால், இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கம் காரணமல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கடந்தகால ஆட்சியின் போது கடைப்பிடிக்கப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே இலங்கையில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கியது. உள்நாட்டு உற்பத்தியிலும், வரிக்கொள்கையிலும், அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் அன்றைய ஆட்சியாளர்கள் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்ததன் காரணமாகவே நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவெடுத்தது.

அன்றைய ஆட்சிக் காலத்தில் உருவெடுத்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகவே இன்றைய அரசு போராடிக் கொண்டிருக்கின்றது. அப்போராட்டத்தில் இன்றைய அரசு ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீட்சி பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் மக்களுக்கு மென்மேலும் சிரமங்களை உண்டாக்கும் விதத்தில் தொழிற்சங்கங்கள் நடந்து கொள்வது முறையல்ல. அவ்வாறு தொடருமானால் தொழிற்சங்கங்கள் மீதே மக்கள் வெறுப்பு கொள்ளும் நிலைமை உருவாகும்.

editor.tkn@lakehouse.lk

# அச்சுறுத்தல் நிறைந்த இன்றைய உலகில் ஆகாயத்தை பாதுகாப்பது மிக முக்கியம்

'ரோயல் இலங்கை விமானப்படை' என்ற பெயரில் 1951 மார்ச் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்நாட்டு விமானப்படை 1972 இல் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டதும் 'இலங்கை விமானப்படை' என பாராளுமன்றத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரையும் இலங்கையில் கீர்த்திமிக்க விமானப்படையாக விளங்கும் இலங்கை விமானப்படை நாளை (மார்ச்) 02 ஆம் திகதி 73 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இதன் பொருட்டு இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மாஷல் உதேனி ராஜபக்ஷ தினகரனுக்கு விஷேட பேட்டி வழங்கினார்.



## விமானப்படைத் தளபதி எயார் மாஷல் உதேனி ராஜபக்ஷ தினகரனுக்கு விஷேட பேட்டி

***கேள்வி: 73 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இலங்கை விமானப்படையானது நாடு எதிர்கொள்ளும் சவால்களின் போது விஷேட பங்களிப்புக்களை நல்கி வருகிறது. அந்த வகையில் விமானப்படை கடந்து வந்த பாதை குறித்து குறிப்பிட முடியுமா?***

*பதில்: ஆம். இலங்கை விமானப்படையின் 73 வருட வரலாற்றில் கடந்து வந்த பாதை தொடர்பில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ரோயல் விமானப் படையாக ஆரம்பிக்கப்பட்ட எமது விமானப்படை ஆரம்ப உறுப்பினர்களாக 6 உத்தியோகத்தர்களையும் ஏனைய தரத்திலான 24 உத்தியோகத்தர்களையும் கொண்டதாக இருந்தது. ஆரம்பத்தில் சிறிய நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட எமது விமானப்படை, 1972 இல் இலங்கை குடியரசானதும் இலங்கை விமானப்படையானது.*

*எமது பணிகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. தற்போது எமக்கு சுமார் 20 பிராந்தியக் கிளைகள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சுமார் 73 தொழில்வாண்மைப் பிரிவுகளும் உள்ளன. எமது ஒவ்வொரு பிரிவும் தொழில்வாண்மை மட்டத்தில் செயற்படுகின்றன. எமது படைவீரர்களின் எண்ணிக்கை 2009 இல் யுத்தம் முடிவுற்ற போது 35 ஆயிரமாகக் காணப்பட்டது. அது தற்போது 26 ஆயிரமாக உள்ளது.*

*யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் எமது படையினர் முக்கியமான பணிகளை முன்னெடுத்துள்ளனர். அரசாங்கத்தினால் விமானப்படையாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய மட்டத்தை அடைந்துள்ள எமது படையினர் தொழில்வாண்மையைப் பேணி முன்னோக்கிப் பயணிக்கத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.*

*எமது படையினர் தமது விஷேட திறமைகளை பல மட்டங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக அரசாங்க நிறுவனங்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் தேசிய உற்பத்தி திறன் விருது, தர விருது என்பவற்றைப் பல வருடங்கள் நாம் வென்றெடுத்துள்ளோம். அதேபோன்று உலகின் ஏனைய விமானப் படைகளோடு பயிற்சிகளை நடத்துகிறோம். தொழில்நுட்ப படையணியை மாத்திரமல்லாமல் விமானப் படையினரையும் பராமரிப்பதற்காகப் பெருந்தொகை நிதி செலவாகிறது. அதனால் விமானப்படையை உரிய முறையில் பராமரிக்கவென நாம் பல நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளோம். இவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில் நாம் கடந்து வந்த பயணப்பாதை குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். அத்தோடு ஆரம்பம் முதல் இற்றைவரையும் பதவி வகித்த விமானப் படைத்தளபதிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய பதவி நிலைகளினருக்கும் இச்சமயம் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**கேள்வி: விமானப்படையின் 73 ஆவது ஆண்டு விழா நாளை 02 ஆம் திகதியாகும். இதன் நிமித்தம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் எவை?**

*பதில்: கல்வி மற்றும் சமூக சேவை வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து 73 ஆவது ஆண்டு விழாவை கௌரவமான முறையில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். இம்முறை ஆண்டு விழாவை யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் ஊடாக தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொடுப்பதோடு விமானப் படை குறித்த சரியான தெளிவை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணையாக எமது பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.*

*விமானப்படையினர் தினத்திற்கு இணையாக கல்வி மற்றும் சமூக சேவை வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்படவிருக்கின்றன. இவ்வேலைத்திட்டங்களுக்காக 125 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சமூக சேவை வேலைத்திட்டங்களுக்கு 'நட்புறவின் சிறகுகள்' எனப் பெயரிட்டுள்ளோம். கடந்த வருடங்களில் விமானப்படையினர் தினம் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இம்முறை வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் இவ்விழா நடத்தப்படுகிறது.*

*இவ்விழாவை சிறப்பாக நடாத்தவென பெருந்தொகை நிதி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவற்றில் சிறுதொகை நிதியும் அரசிடமிருந்தோ விமானப்படை மூலமோ ஒதுக்கீடு செய்யப்படாது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்விழாவை சிறப்பாகவும் அபிமானமாகவும் நடாத்துவதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளோம். இதற்காக அனுஷரணையாளர்கள் முன்வந்துள்ளனர். நிச்சயம் இவ்விழா மிகவும் வெற்றிகரமாக அமையும்.*

**கேள்வி: இவ்விழாவின் பிரதான வைபவங்கள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுவது குறித்து குறிப்பிடுங்கள்?**

*பதில்: இவ்விழாவுக்காக சர்வமத சமய நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். குறிப்பாக பௌத்த சமய நிகழ்ச்சிகள் களனி ரஜமகா விகாரையில் இடம் பெறும். அதற்கு இணையாக ஏனைய சமய நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படும். விமானப்படைத் தலைமையகத்தில் 02 ஆம் திகதி காலை விமானப்படை ஆண்டு விழா அணிவகுப்பு மரியாதை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வடக்கு தெற்கு ஒத்துழைப்பை இலக்காகக் கொண்ட 'நட்புறவின் சிறகுகள்' வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். யாழ்ப்பாணம், முற்றவெளி விளையாட்டரங்கில் இடம்பெறும் இந்நிகழ்ச்சிகளுக்கு வடக்கு சகோதரர்கள் மற்றும் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், பெருந்தொகையான அரச நிறுவனங்கள் ஒத்துழைப்புக்களை நல்க உள்ளன. இதற்காக பல வேலைத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.*

*அந்த வகையில் கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 73 பாடசாலைகளில் 100 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 'வடக்குக்கு என்னால் புத்தகம்' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 73 ஆயிரம் தமிழ், ஆங்கில மொழிப் புத்தகங்களை பகிர்ந்தளிக்கவென 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் வட மாகாணத்திலுள்ள பல பிரதேசங்களிலும் அப்பிரதேசங்களுக்கு பொருத்தமான 73 ஆயிரம் மரக்கன்றுகளும் நடப்படும்.*



## இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டுவிழா நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்



**கேள்வி: இவ்விழாவின் விஷேட நிகழ்வாக அமைந்துள்ள நிகழ்ச்சி யாது?**

*பதில்: விஷேட நிகழ்வாக விமானப்படை பைசிக்கிள் ஓட்டம் இடம் பெறும். இது 25 ஆவது தடவையாக நடத்தப்படுகிறது. மார்ச் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் இப்போட்டி மார்ச் 07 ஆம் திகதியுடன் நிறைவடையும். கடந்த காலங்களில் இப்போட்டி மூன்று நாட்கள் நிகழ்வாக இடம்பெற்றது. இம்முறை இப்போட்டி ஐந்து நாட்கள் நிகழ்வாக இடம்பெறுகிறது. ஆண்களுக்கான பைசிக்கிள் ஓட்டப் போட்டியில் 100 பேரை இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். மகளிருக்கான பைசிக்கிள் ஓட்டப் போட்டியில் 30, 40 பேர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கிறோம்.*

*காலிமுகத்திடலில் (ஜனாதிபதி அலுவலகம்) ஆரம்பமாகும் இப்போட்டிகள் கண்டி, ஹபரணை, பொலன்னறுவை, திருகோணமலை, வவுனியா ஊடாக ஐந்து நாட்களில் யாழ்ப்பாணத்தை அடைய உள்ளது. ஆண்களுக்கான பைசிக்கிள் ஓட்டப் போட்டி சுமார் 700 கிலோ மீற்றர் தூரத்தையும் மகளிருக்கான போட்டி 100 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாகும்.*

*மேலும் பொலன்னறுவை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இசைக்கச்சேரிகளை நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அதேபோன்று நான்கு மாவட்டங்களை இணைத்து விமானப்படை தளபதி கிண்ணத்திற்கான சிநேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டியை நடாத்த உள்ளோம். இப்போட்டிகளில் 11 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்ற உள்ளன. வடக்கில் பெரும்பாலான மக்கள் கரப்பந்தாட்டப் போட்டிக்கு அதிக விருப்பம் கொண்டவர்களாவர். இதன் இறுதிப்போட்டி மார்ச் 06 ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும்.*

*அதேநேரம் யாழ்ப்பாணத்தில் எயார் டெட்டு 2024 இல் கல்வி மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி முற்றவெளி விளையாட்டரங்கில் நடாத்தப்படும். பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்கு நாம் அழைப்பு விடுத்துள்ளோம். அதே நேரம் யாழப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விமானத்தின் கேஸ் டேர்பைன் என்ஜின் ஒன்றை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம்.*

*இவ்விழாவின் பிரதான வைபவங்கள் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்றாலும் நாடெங்கிலும் அமைந்துள்ள விமானப்படை முகாம்களிலும் விஷேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாரம்பரிய முறைப்படி அணிவகுப்புக்கள், விளையாட்டுப் போட்டிகள், மாகாணத்துடன் சம்பந்தப்பட்ட சமூக சேவைகள், மருத்துவ முகாம்கள், இரத்ததானம் போன்ற நிழ்ச்சிகளும் இடம்பெறும்.*

**கேள்வி: 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் யுத்தத்திற்கு நேரடி பங்களிப்பு நல்கிய விமானப்படையினர், அதன் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு பங்களிக்கின்றனர் என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்?**

*பதில்: யுத்தம் நிலவும் போது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவது எமது பொறுப்பாகும். அனைத்து படையினரதும் இறுதி இலக்கு நிலைபேறான சமாதானமாகும். அதனால் யுத்தம் நிலவும் போது அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கி யுத்தத்தை வெற்றி கொள்வோம். அதன் பின்னர் ஏற்பட்ட சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.*

*அந்த வகையில் கடந்த காலத்தில் வடமாகாணத்தில் பல புனரமைப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக நாம் எங்களது சக்தியைப் பயன்படுத்துகிறோம். மக்களின் அறிவையும் கல்வி ஞானத்தையும் மேம்படுத்தவும் நாம் பங்களிப்புக்களை நல்குகின்றோம். பிரிவினைகளுடன் நாம் முன்னோக்கிப் பயணிக்க முடியாது. அதனால் இந்நாட்டிலுள்ள அனைத்து இனமக்களும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். அதன் உடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.*

**கேள்வி: 73 ஆவது ஆண்டு விழா நடைபெறவிருக்கும் இந்தச் சூழலில் நீங்கள் கூற விரும்புவதென்ன?**

*பதில்: விமானப் படையினரான எமது முதல் பணிதான் விண்ணைப் பாதுகாப்பதாகும். காலத்திற்கு காலம் அதனை வழங்கும் முறைமையில் மாற்றங்கள் ஏற்படலாம். நாடென்ற வகையில் வேறு நாடுகளின் அச்சுறுத்தல்கள் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக இன்று முழு உலகிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதன் விளைவாக ட்ரோன் தொழில்நுட்பம், ஆளில்லா விமானங்கள் என்பவற்றினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து முழுஉலகும் கவனம் செலுத்தியுள்ளது. ஏனெனில் ஆகாயத்தைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். அதுவே எங்களது முதல் பணி. இதற்காக எமது கே 8 விமானத்தைப் பயன்படுத்துகிறோம். எங்களுக்கென எதிரி நாடுகள் கிடையாது. அனைத்து நாடுகளோடும் ஒற்றுமையோடு பணியாற்றுகிறோம். இந்து சமுத்திரத்தின் அமைதி நிலையைப் பேணுவதற்கு அது மிகவும் முக்கியமானது.*

*நாடென்ற வகையில் எம்மால் தனியாக வாழ முடியாது. எமக்கு சர்வதேச சமூகத்தினர் அவசியமானவர்கள். இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது முதலில் ஸ்தலத்திற்கு விரைபவர்கள் நாமே. எம்மிடம் அனர்த்த முகாமைத்துவம் குறித்த கற்கைகளுக்கான பாடசாலையொன்று உள்ளது. அங்கு பலர் கற்று வெளியாகின்றனர். அத்தோடு அரசின் முக்கிய நிறுவனங்களின் இணைய தளங்களின் பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்துகிறோம். இதன் நிமித்தம் 24 மணித்தியாலங்களும் கண்காணிப்புக்களை மேற்கொண்டுள்ளோம். தொழில்நுட்பங்களை முழுமையாகப் பயன்படுத்தும் இலங்கை விமானப்படை டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

பேட்டி கண்டவர்:
மர்லின் மரிக்கார்...

படங்கள்:
வாசித பட்டபெந்திகே

# ரமழானுக்காக ஷஃபானிலே தயாராவோம்!

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

**'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பது போன்று வேறு எந்த மாதத்திலும் நோன்பு நோற்பதை நான் காணவில்லை என்று கூறியபோது, நபியவர்கள், 'இது ரஜப் மற்றும் ரமழான் மாதத்துக்கு இடைப்பட்ட மனிதர்கள் அசிரத்தையாக இருக்கின்ற ஒரு மாதமாகும். ஆனால் அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கு மனிதர்களின் செயல்பாடுகள் (அமல்கள்) சமர்ப்பிக்கப்படுகின்ற மாதமிது. நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் எனது செயல்பாடுகள் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று ஆசிக்கிறேன்' என்றார்கள்.**

(ஆதாரம்: அபூதாவூத், நஸாஈ, இப்னு ஹுஸைமா)

ரஜப் மாதம் என்பது சங்கையான நான்கு மாதங்களில் ஒன்று என்ற வகையில் மனிதர்கள் அம்மாதத்தில் அதிகமான நன்மைகளை செய்யவும் பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் முயற்சி செய்வார்கள். ரமழானின் மகத்துவம் காரணமாகவும் நன்மையான காரியங்களை முன்னெடுப்பதற்கான தடைகள் குறைவாக இருப்பதனாலும் ரமழானில் அதிக நன்மைகளை செய்வார்கள். ஆனால் ஷஃபானில் கவனயீனமாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே நபியவர்கள் இப்படி கூறினார்கள் என்று எங்களால் புரிந்துகொள்ள முடியும்.

செயல்பாடுகள் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்படல் என்பது நான்கு வடிவங்களில் அமைய முடியும் என்று இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நாளாந்தம், வாராந்தம், வருடாந்தம், மரணத்தின் பின்னர் இறுதியாக அல்லாஹ்விடம் உயர்த்தப்படுகிறது. நாளாந்த செயற்பாடுகள் பகலின் இறுதிப்பகுதியிலும் இருளின் கடைசி நேரத்திலும் உயர்த்தப்படுகிறது. வாராந்த செயற்பாடுகள் திங்கள், வியாழன் தினங்களிலும் வருடாந்த செயற்பாடுகள் ஷஃபான் மாதத்திலும் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்டுகிறது. கடைசியாக ஒருவன் மரணமடைந்த பின்னர் முழுமையாக அல்லாஹ்விடம் ஒப்புவிக்கப்படுகிறது. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களை நாம் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.



திங்கள், வியாழன் தினங்களில் நோன்பு நோற்பதற்கான காரணம் குறித்து நபிகளாரிடம் கேட்கப்பட்டபோது **'அவ்விரு தினங்களிலும் செயல்பாடுகள் ஒப்புவிக்கப்படுகின்றன. நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு எனது அமல்கள் காட்டப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்' என்றார்கள்.**

(ஆதாரம்: ஸுனன் திர்மிதி)

நபியவர்கள் ஷஃபானில் அதிகமாக நோன்பு நோற்றார்கள். திங்கள் வியாழன் தினங்களில் நோன்பிருந்தார்கள். காலை மாலை திக்ருகளை ஓதினார்கள். அஸர், ஸுபஹ் தொழுகைகளை ஊக்குவித்தார்கள். மலக்குகள் அதிகமாக உலகில் சஞ்சரிக்கும் சந்தர்ப்பமாக இந்நேரங்களை கருத முடியும். இந்த மலக்குகள்தான் மனிதர்களின் பதிவுகளை சமர்ப்பிக்கவுள்ளார்கள்.

இரவு நேர மலக்குகளும் பகல் நேர மலக்குகளும் உங்களை பின்தொடர்ந்துகொண்டே இருப்பார்கள். ஸுபஹ், அஸர் நேர தொழுகைகளில் உங்களோடு அவர்கள் இணைந்து கொள்வார்கள். பின்னர் அவர்கள் அல்லாஹ்வை நோக்கி சென்றுவிடுவார்கள். எனது அடியார்கள் எப்படி இருந்தார்கள் என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு மலக்குகள் நாம் அவர்களை விட்டு வரும்போது அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்களை நாம் அடைந்த சந்தர்ப்பத்திலும் அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள் என்பார்களெனக் குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இத்தகைய சிறப்புகள் ஷஃபான் மாதத்துக்கு காணப்பட்டமையால் நபியவர்கள் நல்லரங்களை இம்மாதத்தில் அதிகமாக செய்துள்ளார்கள். 'ரமழான் மாதம் தவிர்த்து வேறு எந்த மாதத்திலும் நபியவர்கள் முழுமையாக நோன்பு நோற்கவில்லை. ஷஃபான் மாதத்தில்தான் நபியவர்கள் மிக அதிகமாக நோன்பு நோற்றார்கள்' என்று ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இவ்வகையில் நாமும் இம்மாதத்தை சிறப்பாகப் பயன்படுத்தி நன்மைகளை அதிகமாக சேர்த்துக்கொள்ள முனைய வேண்டும். அல்லாஹ்வுடன் தொடர்பான விடயங்களுடன் மாத்திரம் சுருங்காது மனிதனுக்கு பயனுள்ள காரியங்களிலும் நாம் ஈடுபாடு காட்ட வேண்டும். செயல்படும்போது மனத்தூய்மை என்பது மிக முக்கியமானதாகும். இஃலாஸ் அற்ற செயல்பாடுகள் பயனற்றவையாக மாறிவிடும். உலக விடயமாக கருதப்படும் விடயங்களைகூட நன்மை தரக்கூடிய விடயமாக இஃலாஸ் மூலம் மாற்றியமைக்க முடியும். சண்டை, சச்சரவுகள், முரண்பாடுகள், பிளவுகளை களைந்து ஒற்றுமை, ஐக்கியம், மனிதம் மிகைக்கும் விதமாக நடந்துகொள்ள வேண்டும். அல்லாஹ்விடம் அதிகமாக கையேந்தி பிரார்த்தனைகளில் ஈடுபடுவதுடன் பாவங்களுக்கான மன்னிப்பையும் கோரவும் தவறக்கூடாது.

மேலும் ரமழானை வரவேற்கும் மரபு நீண்ட காலமாக முஸ்லிம்களிடம் காணப்படுகிறது. ரமழானின் வருகை பற்றி அதிகம் பேசிக்கொள்வார்கள். ரமழானின் சிறப்புகளையும் அது தொடர்பான சட்டதிட்டங்களையும் அறிந்துகொள்வதுதான் நோன்பை வரவேற்பதற்கான சிறந்த வழியாகும்.

அல்குர்ஆன் ஹஜ் தொடர்பாக கூறும்போது 'பிரயாணத்துக்கான கட்டுசாதத்தை தயார்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தயார்படுத்துகின்ற மிக சிறந்த பயண ஏற்பாடு தக்வா என்ற இறையச்சமாகும்' (பகரா 197) என்று குறிப்பிடுகிறது. இது போன்றே ரமழானின் நோக்கமான இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளும் விதமாக ரமழானை வரவேற்பதே சாலச்சிறந்தது.

இவ்வகையில்தான் நபி(ஸல்) அவர்களும் தனது தோழர்களை ஷஃபானின் இறுதிப்பகுதியில் திரட்டி ரமழானின் சிறப்புகளை நினைவுபடுத்தி அதனை பயன்படுத்திக்கொள்வதற்கு ஆர்வமூட்டியுள்ளார்கள்.

'இதோ ரமழான் வந்துவிட்டது. இது அருள் நிறைந்த மாதமாகும். இம்மாதத்தில் நோன்பு நோற்பது உங்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தில் சுவன வாயில்கள் திறக்கப்படும். நரக வாயில்கள் மூடப்படும். அட்டூழியம் புரியக்கூடிய ஷைத்தான்கள் விலங்கிடப்படும். இதிலே ஆயிரம் மாதங்களைவிட சிறப்பான ஒரு இரவு உண்டு. யார் அதன் சிறப்புகளை அடையத் தவறி விடுகிறாரோ அவர்தான் தவறவிட்டவராவார்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: நஸாஇ, ஸஹீஹுல் ஜாமிஃ அல்பானி)

மேலும் ரமழானை பயன்படுத்தும் நோக்கில் ஷஃபானிலிருந்து நபி(ஸல்) அவர்கள் தயாராகியுள்ளார்கள். நாமும் அவ்வாறே ரமழானை பயன்படுத்த எம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக திட்டமிட்டுக் கொள்வது அவசியம். குறிப்பாக தனிப்பட்ட முறையில் அல்குர்ஆனுடன் தொடர்பினை ஏற்படுத்தல், தொழுகைகளை ஜமாஅத்தோடு தொழுதல், ஸுன்னத்தான வணக்கங்களில் ஈடுபடுதல் போன்றவற்றுடன் குடும்பமாக மனைவி பிள்ளைகளுடன் இணைந்தும் இவற்றை பேணிக்கொள்ளலாம். ஸஹர் உணவுக்காக எழும்பியது முதல் மீண்டும் தூங்க செல்வது வரையான நாளாந்த வாழ்வை திட்டமிட்டு பயன்படுத்திக்கொள்ள முடியும்.

ரமழானில், அல்குர்ஆன் அருளப்பட்டது என்றவகையில்தான் நோன்புக்கு இத்தகைய சிறப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் நோன்பில் அல்குர்ஆனுடனான தொடர்பை மேம்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். அல்குர்ஆனை இராகமாக ஓதி அதில் லயித்துப்போவதும் அதனை மனனமிடுவதுடன் அதன் கருத்துகளை உணர்ந்து பின்பற்றுவதும் அல்குர்ஆனுக்கு நாம் நிறைவேற்றவேண்டிய கடமைகளாகும். எனவே ரமழானுக்காக ஷஃபானிலே தயாராவோம்.


அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# அருள்கள் நிறைந்த ரமழான்

இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களுள் ஒன்றாக நோன்பு திகழ்கிறது. இந்நோன்பானது ஹிஜ்ரி 02ஆம் ஆண்டு கடமையாக்கப்பட்டது. இதனை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். இஸ்லாமிய நாட்காட்டியின் படி ஒன்பதாவது மாதமே ரமழான் ஆகும். ஸஹாபாக்கள் ரமழானை ஆவலுடன் எதிர்பார்த்து அதனை அடையும் பாக்கியத்தை தருமாறு அல்லாஹ்விடம் அதிகம் பிரார்த்தனை செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ரமழானில் நோன்பு நோற்பது முஸ்லிமான, வயது வந்த, புத்தி சுவாதீனமுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். இப்புனிதமான ரமழான் மாதமானது ஏனைய மாதங்களை விடவும் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள், **"ரமழான் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன, நரகத்தின் வாசல்கள் மூடப்படுகின்றன, ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி )** அதுமட்டுமன்றி **அல்குர்ஆனை அல்லாஹ் புனித ரமழான் மாதத்திலேயே இறக்கியருளினான். இம்மாதத்தில் "லைலதுல் கத்ர்" எனும் புனிதமான ஓர் இரவு இருக்கிறது. இது ஆயிரம் மாதங்களை விட சிறந்ததோர் இரவாகும். இந்த இரவில் தான் அல்குர்ஆன் இறக்கப்பட்டது.**



**நோன்பாளிகள் சுவர்க்கத்தில் "ரய்யான்" என்று சொல்லப்படும் வாசலினூடாக நுழைவார்கள். இது நோன்பாளிகள் மாத்திரம் நுழையும் விசேட வாசலாகும். இம்மாதத்தில் செய்கின்ற அமல்கள் பல மடங்கு நன்மைகளைப் பெற்றுத்தரக்கூடியனவாகும். அதுமட்டுமல்லாமல் ரமழானுடைய ஒவ்வொரு இரவிலும் பகலிலும் நரகத்திற்குரியவர்கள் விடுதலைச் செய்யப்படுகின்றனர். இன்னும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பிரார்த்தனை இருக்கிறது' என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

(ஆதாரம்: அஹ்மத்).

இவ்வாறு அருள் நிறைந்த மாதம் எம்மை நோக்கி நெருங்கி வருகிறது.

இம்மாதத்தில் நல்ல முறையில் நோன்பு நோற்பதற்கு நாம் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் எம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். ஷஃபானுடைய சுன்னாத்தான நோன்புகளை நோற்பதன் மூலம் ரமழானுடைய பர்ளான நோன்பை நோற்பதற்கு உடல் ரீதியாக நம்மை தயார்படுத்திக்கொள்ளும் ஒரு சிறந்த வழிமுறையாகும். வருகின்ற ரமழானை பிரயோசனமான முறையில் கழிக்க முயற்சிசெய்ய வேண்டும். அதற்கான திட்டத்தை நாம் இப்போதே வகுத்துக்கொள்ள வேண்டும்.

இம்மாதத்தில் அல்குர்ஆனை அதிகமாக ஓத வேண்டும். அதன் கருத்துக்களை விளங்க முற்பட வேண்டும். நபி (ஸல்) அவர்கள், "நாம் நோற்ற நோன்பும், நாம் ஓதிய குர்ஆனும் மறுமையில் பரிந்து பேசும்" என்று கூறினார்கள். மேலும் இம்மாதத்தில் ஐவேளை தொழுகைகளை ஐமாஅத்தோடு தொழ முயற்சி செய்தல், அதிகமாக பிரார்த்தனைகளில் ஈடுபடல், நல்ல வார்த்தைகளைப் பேசுதல், மற்றவர்களுடைய மனம் புண்படாமல் நடத்தல், ஏழைகளுக்கு உதவுதல், அதிகமாக திக்ர் செய்தல், சண்டைகள், முரண்பாடுகளை தவிர்த்தல், ஸதகாக்கள் கொடுத்தல் போன்ற இன்னும் பல நற்காரியங்களை செய்வதற்கு இப்போதே திட்டமிட்டு அதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

நம்மிடமுள்ள தீய பழக்கங்களையும், தவறான செயற்பாடுகளையும் தவிர்த்து எம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். **"எவன் பொய் சொல்வதையும், அதன் படி நடப்பதையும், விட்டு விடவில்லையோ அவன் பசியோடும், தாகத்தோடும் இருப்பதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை, எவ்விதப் பயனுமில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்** (ஆதாரம்: புஹாரி).

பொறாமை கொள்ளல், புறம் பேசுதல், கோள் சொல்லல், அநியாயம் செய்தல், பெற்றோருக்கு நோவினை செய்தல் போன்ற தீய குணங்களை மாற்றி நற்குணங்களை வளர்த்துக்கொள்ள இந்த ரமழானை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்துவோம். நேரத்தை வீணான காரியங்களில் செலவழிக்காமல் பிரயோசனமான காரியங்களில் நேரத்தைசெலவிட முயற்சிக்க வேண்டும்.

ரமழான் எம்மில் நல்ல பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். **ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், "ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து, எவர் ரமழான் மாதத்தை அடைந்து அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படாமல் நரகம் புகுவாரோ அவரை அல்லாஹ் (தன் அருளிலிருந்து) தூரமாக்கட்டும்' என்று கூறி, 'ஆமீன் என்று சொல்லுங்கள்' என்றார்கள் நான் 'ஆமீன்' என்றேன்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

(ஆதாரம்: முஸ்னத்).

எத்தனையோ ரமழான்கள் எங்களை விட்டு கடந்து சென்றுவிட்டது. எம்மில் எந்த மாற்றம் வந்திருக்கிறது? நாம் எத்தகைய முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம்? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரமழானை அடைந்தும் எம்மில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையாயின் நாம் தான் உண்மையான நஷ்டவாளிகள்.

கடந்த வருடத்தில் எங்களோடு வாழ்ந்தவர்கள், எங்களோடு நோன்பு நோற்றவர்கள் இன்று அவர்கள் மரணித்து மண்ணறைக்குச் சென்றுவிட்டார்கள். இன்னும் பலர் நோயாளிகளாகி விட்டார்கள். இந்த ஆண்டின் ரமழானை அடைந்துகொள்ளாமல் மரணித்துவிட்ட முஸ்லிம்கள் அனைவருக்குமாக நாம் பிரார்த்தனை செய்துகொள்வோம். அடுத்த ரமழானில் நாம் உயிரோடு இருப்போமா? என்பதை நாம் அறிய முடியாது. எனவே அருள் நிறைந்த ரமழானை அதற்குரிய முறையில் பயன்படுத்தி இம்மையிலும், மறுமையிலும் வெற்றி பெற்றிடுவோம்.

எம். இஹ்ஸான் ஹலீம்...
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம், மூன்றாம் வருடம்



# எல்லையில்லா கருணையாளன்

அல்லாஹ் மாபெரும் கருணையாளன். அவனது கருணையின் காரணமாகவே மனிதர்களாகிய நாம் செய்யும் பாவங்களுக்காக அவன் உடனடியாகத் தண்டிப்பதில்லை. மனிதன் தவறு செய்யக்கூடிய பண்பை இயல்பாகக் கொண்டுள்ளான். இதனை அல்குர்ஆன், 'உங்கள் மீது இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் அன்பும், கருணையும் பொழிந்திருக்காவிட்டால், எந்த விஷயங்களில் நீங்கள் மூழ்கியிருந்தீர்களோ அதன் விளைவாக உங்களுக்குப் பெரும் வேதனை ஏற்பட்டிருக்கும்' (24:14) என்று குறிப்பிட்டிருக்கிறது.

உலகில் ஒரு இறைநம்பிக்கையாளனுக்கு அல்லாஹ் கொடுக்கும் சோதனைகள் கூட அவனின் கருணையேயாகும். ஏனெனில், சோதனைகள் ஊடாகத் திருந்தி வாழ்வதற்கு அல்லாஹ் வாய்ப்பளிக்கிறான், அல்லது அந்த சோதனைகளையே அவனது பாவத்திற்கு தண்டனையாக்கி விடுகிறான். அதன் ஊடாக மறுமையில் எந்தக் குற்றமும் அற்றவனாக அவனைச் சுவனத்தில் நுழையச்செய்வான்.

**'இறுதி விளைவு, நீங்கள் ஆசைப்படுவது போன்றோ, வேதம் அருளப்பட்டவர்கள் ஆசைப்படுவது போன்றோ ஏற்படப்போவதில்லை. எவன் தீமை செய்தாலும் அவன் அதற்குரிய விளைவை அடைவான்' (4:123)** என்ற அல் குர்ஆன் வசனம் இறங்கியபோது, அபூபக்கர் (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் பயந்த வண்ணமே கேட்டார். 'அல்லாஹ்வின் தூதரே! இந்த இறை வசனத்தைப் பார்த்தால் மறுமை வெற்றி என்பது கடினமாக இருக்கும் என்றல்லவா தோன்றுகிறது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'இறை நம்பிக்கையாளர்களுக்கான தீமையின் விளைவு, உலகில் ஏற்படும் இந்தச் சோதனைகள் தான். ஏனெனில் மறுமையில் பாவமற்றவனாக அல்லாஹ்வை சந்திப்பதற்காக ஒருவர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அதற்குரிய கூலியை பல மடங்காக அல்லாஹ் கொடுக்கின்றான். இதுவும் அவனது கருணையேயாகும்.

ஒரு தடவை மதீனாவில் நபித்தோழர் ஒருவர் மரணமடைந்தபோது அவரைப்பற்றி மக்கள் பலரும் பலவாறாகக் கதைத்தனர். இவர் ஒரு பாவி... நன்மையே செய்யாதவர்... அநியாயக்காரர்... என்றெல்லாம் மக்கள் பேசிக் கொண்டிருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் அவ்விடம் வந்தார்கள். அம்மக்களிடம் நபிகளார் கேட்டார்கள், 'ஏன் இவ்வாறு கூறுகிறீர்கள்? இவர் நன்மையே செய்யவில்லை என்று எப்படி நீங்கள் கூறுகின்றீர்கள். அதற்கு மக்கள், 'எங்களுக்கு தெரிந்த இவர் எந்த நன்மையும் செய்யவில்லை' என்றனர். அச்சமயம் அக்கூட்டத்தில் இருந்த ஒரு முதியவர் எழுந்து 'எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. ஒரு சமயம் மதீனாவை எதிரிகள் சூழ்ந்து கொண்ட போது நகருக்குள் எதிரிகள் வராமல் இருக்க நாங்கள் காவல் புரிந்தோம். ஆனால் எதிரிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்த வடக்கு எல்லையை மட்டும் காவல் காக்க எல்லாரும் தயங்கினார்கள். இவர் மட்டும்தான் 'நான் போகின்றேன்' என்று கூறி இரவு முழுவதும் காவல் புரிந்தார். இது ஒன்றுதான் நான் அறிந்த வகையில் இவர் செய்த நன்மை' என்றார் அந்த முதியவர்.

நபி(ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சி பொறுக்க முடியவில்லை. அச்சமயம் நபி (ஸல்) அவர்கள், **'இது சுவனவாசிகளின் செயல், இவர் தமது சமூகத்தை காக்க உயிரையே கொடுக்கவும் தயாராக இருந்துள்ளார். இவர் சுவனவாசி. இறந்தவர்கள் குறித்து நீங்கள் எப்போதும் நல்லவற்றையே பேசுங்கள். மனிதன் செய்த நற்செயலை அல்லாஹ் மட்டுமே அறிவான்' என்று கூறினார்கள்.** (நபிமொழி)

இந்நபிமொழியின் ஊடாக, ஒருவர் செய்த ஒரே ஒரு செயலைக் கூட அல்லாஹ் வீணாக்குவதில்லை என்பது தெளிவாகிறது. அதற்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குகிறான் என்றால் அவன் எவ்வளவு கருணையாளன் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

'ஒரு இறை நம்பிக்கையாளன் உலகை பிரிந்து மறுமையை நோக்கிய பயணத்தின் போது உயிர் பறிக்கப்படும் வேளையில் வெள்ளை ஆடையில் பிரகாசமான முகத் தோற்றத்துடன், நல்ல நறுமணத்துடன் கண்ணுக்கு எட்டிய தொலைதூரம் வரை வானவர்கள் நிறைந்து நிற்பதைக் காண்பான். குவளையிலிருந்து நீர் எப்படி வேகமாக சிதறுமோ அவ்வளவு எளிதாக அவனது உயிர் கைப்பற்றப்படும். உயிர் கைப்பற்றப்பட்டால் 'மலகுல்மௌத்' எனும் வானவரிமிருந்து அந்த உயிரை மற்ற வானவர்கள் வாங்கி விண்ணுலகிற்கு எடுத்துச் சொல்வார்கள். வானுலகெங்கும் இவ்வுயிர் நறுமணம் வீசும். அங்கிருக்கும் மற்ற வானவர்கள் வியப்புடன் யாருடைய உயிர் இது? என்று கேட்பார்கள். அதற்கு 'இன்னாருடைய மகன் இன்னாரின் உயிர்' என்று பதில் கூறப்படும். அப்போது கருணையாளன் அல்லாஹ், 'நல்லடியார்களின் வினைப்பட்டியலில் எனது அடியாரின் பெயரையும் சேருங்கள். இவரை பூமிக்கு எடுத்துச் செல்லுங்கள்' என்பான்.

பின்னர் வானவர்களின் கேள்வி பதில் மண்ணறையில் இடம்பெறும். அக்கேள்விகளுக்கு (மரணித்த) இவன் சரியாகப் பதில் கூறுவான். அப்போது அவனது மண்ணறையில் ஒரு வாசல் ஏற்படுத்தப்படும். அவ்வாசல் வழியாக சுவனத்தில் தனக்கான தங்குமிடத்தை அவன் காண்பான். பின்னர் திடீரென ஒரு உருவம் அங்கு தோன்றும். அழகிய தோற்றத்தில் நல்ல நறுமணத்துடன் அவர் இருப்பார். நீர் யார்? என்று (மரணித்த மனிதர் கேட்பார். அதற்கு அவர், 'நான் தான் உனது நற்செயல்கள். மறுமை நிகழும் வரை உனக்கு துணையாக இருப்பேன்' அப்போது அந்த (மரணித்த) அடியான், 'என் ரப்பே! மறுமையை (விரைவாக) கொண்டுவா... மறுமையைக் கொண்டுவா...! என்மீது எவ்வளவு கருணை புரிந்துள்ளாய் என்பதை எனது பெற்றோரிடமும் குடும்பத்தாரிடமும் நான் கூறவேண்டும்' என்பான் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

அல்லாஹ்வின் கருணைவாசல் அவ்வளவு விசாலமானது, **'அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழக்க வேண்டாம்' (39:53)** என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது. அல்லாஹ்வின் கருணையை அதிகளவில் பெற்றுக்கொள்வதற்கான வழிகளாவன, **'பிறர் மீது கருணை காட்டுங்கள், திண்ணமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்பவர்களுக்கு அருகில் இருக்கிறது (7:56)** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், **'பூமியில் உள்ளவர்கள் மீது நீங்கள் கருணை காட்டினால் வானில் உள்ளவன் உங்கள் மீது கருணை காட்டுவான்'**

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இரண்டு ரக்அத்கள் என்றாலும் உபரியான வணக்கங்களை வீட்டில் தொழுங்கள், முடிந்தால் அந்த தொழுகையையே கூட்டாகத் தொழுங்கள். **ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'பள்ளிவாசலில் நீங்கள் தொழுதால் உங்கள் வீடுகளில் தொழுவதற்கும் ஒரு பகுதியை மீதி வையுங்கள். உங்கள் குடும்பத்திற்கு அது நன்மையாக இருக்கும்' என்று குறிப்பிட்டார்கள்.**

(ஆதாரம்: முஸ்லிம்)

மேலும் **'உறவுகளைப் பேணுங்கள். ஏனெனில், உறவுகளை வெட்டி வாழ்பவர்கள் இருக்கும் இடத்தில் அல்லாஹ்வின் கருணை இறங்காது என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.**

(ஆதாரம்: திர்மிதி, அபூதாவூத்)

அதேநேரம் பெற்றோருடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள். இது தொடர்பில் அல் குர்ஆன், **'மேலும் பண்புடனும் கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்ளுவீராக. மேலும் நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக! 'என் ரப்பே! சிறு வயதில் என்னை எவ்வாறு இவர்கள் கருணையுடனும் பாசத்துடனும் வளர்த்தார்களோ... அவ்வாறு இவர்கள் மீதும் நீ கருணை புரிவாயாக! (17:24)** என்றுள்ளது.

அல்குர்ஆனை அதிகமதிகம் பொருள் விளங்கி ஓதுங்கள். **'இறை நம்பிக்கையாளருக்கு நிவாரணமாகவும் அருளாகவும் உள்ளவற்றை நாம் இறக்கியருளிக் கொண்டிருக்கிறோம்' (17:82)**

**'மேலும் குர்ஆன் ஓதப்படும்போது அதனை கவனமாகக் கேளுங்கள். மௌனமாகவும் இருங்கள்! உங்கள் மீது அல்லாஹ்வின் கருணை பொழியப்படலாம் (7:284)**

ஆகவே அல்லாஹ்வின் எல்லையில்லாக் கருணையை அடைந்து கொள்வதற்கு ஏற்ப வாழ்வொழுங்கை அமைத்திடுவோம்.

தொகுப்பு:
ஜத்து தல்ஹா முஸாதிக்...

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றிய ஆடற்கலைப் போட்டி

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் ஆடற்கலைப் போட்டி



நாளை 2024.03.02ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு 07, விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் உள்ள குளிரூட்டப்பட்ட கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். பேராசிரியர் மௌனகுருவும் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவில் கௌரவ அதிதியாக அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கலந்து கொள்ள விருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஒன்றியம் நாடு முழுவதிலும் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே மாவட்ட ரீதியில் நடத்திய ஆடற்கலைப் போட்டியில் வெற்றி பெற்ற அறநெறிப் பாடசாலைகள் இந்த இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. நாடு முழுவதிலும் உள்ள 13 அறநெறிப் பாடசாலைப் பாடசாலைகள் இந்த இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. இந்த இறுதிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு ஐம்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். மூன்றாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு முப்பது



ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட போட்டியிலிருந்து இறுதிப் போட்டி வரை பங்குபற்றிய அனைத்து அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளும் நடனம் கற்பித்த அறநெறிப் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

## "அஸ்வெசும" பெறத் தகுதியுடைய...

*(29) வரை 35,920 புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 14,537 விண்ணப்பங்கள் பிரதேச செயலாளர் ஊடாகவும், 21,383 விண்ணப்பங்கள் இணையத்தளத்தின் ஊடாகவும் கிடைத்துள்ளன.*

*இன்று வரை அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கான அதிகளவான விண்ணப்பங்கள் நுவரெலியா மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளன. அந்த எண்ணிக்கை 4,892 என்பதோடு கண்டி மாவட்டத்திலிருந்து 4,708 விண்ணப்பங்களும் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 2,971 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில், 2,243 விண்ணப்பங்களும், கொழும்பு மாவட்டத்தில் 2,099 விண்ணப்பங்களும், மொனராகலை மாவட்டத்தில் 2,017 விண்ணப்பங்களும், கம்பஹா மாவட்டத்தில் 1,887 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.*

*குருநாகல் மாவட்டத்தில் இருந்து இதுவரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,633 ஆகும். புத்தளம் மாவட்டத்திலிருந்து 1,632 விண்ணப்பங்கள் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 1,408 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 1,405 விண்ணப்பங்களும், பதுளை மாவட்டத்தில் இருந்து 1,289 விண்ணப்பங்களும், களுத்துறை மாவட்டத்தில் இருந்து 1,166 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. காலி மாவட்டத்தில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 981 என்பதோடு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து 954 விண்ணப்பங்களும், அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்து 782 விண்ணப்பங்களும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 687 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் இருந்து 570 புதிய விண்ணப்பங்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 525 புதிய விண்ணப்பங்களும், மாத்தறை மாவட்டத்தில் இருந்து 472 விண்ணப்பங்களும் வந்துள்ளன.*

*கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 451 விண்ணப்பங்களும், மாத்தளை மாவட்டத்தில் இருந்து 421 விண்ணப்பங்களும், வவுனியா மாவட்டத்தில் இருந்து 389 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 183 புதிய விண்ணப்பங்களும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 155 புதிய விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.*

*முதல் கட்டத்தின் கீழ், சுமார் 02 மில்லியன் மக்கள் ஏற்கனவே நிவாரணங்களைப் பெற்று வருகின்றனர். இரண்டாவது கட்டத்தின் கீழ், புதிய விண்ணப்பதாரர்களுடன் 2.4 மில்லியன் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஜனாதிபதி ஒருவர் வில்கமுவ பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்த முதல் தடவை என்பதைக் குறிக்கும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிர்வாகப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகியவற்றுக்குச் சென்று பணிகளை பார்வையிட்டார்.*

## தேசிய சைபர் பாதுகாப்பு சட்டம்...

*பலப்படுத்தும் வகையிலேயே டிஜிட்டல் பொருளாதார மாநாடு ஜூலை மாத இறுதியில் இலங்கையில் நடத்தப்படவுள்ளது. அதனூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகளை வெளிநாட்டு தூதரகங்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.*

*கடந்த வருடத்தில் SLSI நிறுவனம் 50 மில்லியன் ரூபா இலாபத்தை திறைசேரிக்கு வழங்கியிருந்தது. அதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய, நாட்டின் பொருளாதாரத்திற்கு 52% பங்களிப்பை வழங்கும் சிறு மற்றும் மத்திய தர தொழில்துறையைப் பலப்படுத்த புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறு மற்றும் மத்திய தரத் தொழிலாளர்களை, தொழில்நுட்ப ரீதியாகப் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன் போதுதொழில்முனைவோருக்குGMP மற்றும் SLSI சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஊடாக குறைந்த வட்டியில் கடன் உதவிகளை வழங்கவும் எதிர்பார்க்கிறோம். சிறிய மற்றும் மத்திய தரத் தொழிலாளர்களை, தொழில் சந்தையை நோக்கி நகர்த்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.*

*அதேபோல் இலங்கை சர்ட் நிறுவனத்தின் (Sri Lanka Cert Institute) ஊடாக தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டம் (National Cyber Security Act) இவ்வருடத்திற்குள் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதனையடுத்து சைபர் பாதுகாப்பு அதிகார சபையும் விரைவில் நிறுவப்படும். தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கல்வி அமைச்சின் உதவியுடன் தொழில்நுட்ப வசதிகள் அற்ற 1000 பாடசாலைகளில் 700 பாடசாலைகளுக்கு இணைய வசதிகளைப் பெற்றுக்கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் இரண்டாம் கட்டமாக பாடசாலைகள் மட்டத்தில் AI எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.*

## ரூபா. 2,000 கோடியில் 1,500 கி.மீ...

*பாடசாலை மாவத்தை யில் இடம் பெற்றது. மூன்று கட்டங்களாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. முதற் கட்டமாக 500 கிலோமீற்றர் வீதிக் புனரமைக்கப்படுகிறது. இரண்டாம் கட்டம் மார்ச் 16 இல், ஆரம்பமாகி 500 கிலோ மீற்றர் தூரமும் மூன்றாம் கட்டம் ஏப்பரல் 02 இல், 500 கிலோ மீற்றர் தூரமும் காபர்ட் இடப்படவுள்ளது. நிகழ்வை ஆரம்பித்து வைத்துப் பேசிய அமைச்சர்:*

*1,500 கிலோமீற்றர் வீதிகளை மீள் புனரமைப்பு செய்வது மிக முக்கியமான சந்தர்ப்பமாகும்.பருத்தித் துறையிலி ருந்து தேவேந்திரமுனை வரை ஒவ்வொரு பகுதியிலும் இத் திட்டம் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப் படுகிறது. மக்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். பெற்ற கடன்கள் மறுசீரமைக்கப்படும் வரை ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி அல்லது எந்தவொரு நாடும் எமக்கு மீண்டும் கடன் வழங்காது. இதையுணர்ந்த அரசாங்கம் கடனை மீளச்செலுத்துவது குறித்த உடன்படிக்கையின் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.*

*இதன்படி, சுமார் 36 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை 25 வருட காலத்திற்குள் பல கட்டங்களின் கீழ் செலுத்துவதற்கான முறையான வேலைத்திட்டத்திற்கு இலங்கை இணங்கியுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் மீறப்பட்டால், எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் போன்றவற்றை நாட்டுக்கு கொண்டு வர முடியாது. உலகில் எந்த நாடும் எம்மை ஏற்றுக்கொள்ளாது.*

## மறைந்த ரொனி டி மெலுக்கு...

*முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெலுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தினார். அவரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள கொள்ளுப்பிட்டி சார்ள்ஸ் டிரைவில் அமைந்துள்ள இல்லத்துக்கு நேற்று முன்தினம் (28) பிற்பகல் சென்ற ஜனாதிபதி, அன்னாரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதோடு குடும்ப உறுப்பினர்களுக்கு தனது அனுதாபங்களையும் தெரிவித்தார்.*

## முஷரப் எம்.பி.யை நீக்கியமை...

*எம்.பி. நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றது.*

*இதன்போது, பிரியந்த ஜயவர்தன தலைமையிலான உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது.*

*கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்திற்காக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பி. முஷாரப்பின் கட்சி அங்கத்துவத்தை ரத்துச் செய்வதற்கு, கட்சியின் தலைவர் ரிஷார்ட் பதியுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் தீர்மானித்தனர் . அந்தத் தீர்மானம் சட்டவிரோமானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*துறைமுக நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக மேற்படி ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அந்த சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிப்பதற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானித்திருந்தது. எனினும், அந்த வாக்களிப்பின்போது மனுதாரரான எஸ்.எம்.எம். முஷாரப் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். அவ்வாறு வாக்களித்திருந்தமை தமது கட்சியின் ஏகமனதான தீர்மானத்தை மீறும் செயலென்றும் அந்தவகையில் முஷாரப் எம்.பி ஒழுங்கை மீறி செயற்பட்டதாகவும் அவரை கட்சியிலிருந்து விலக்குவதற்கு கட்சியின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் தீர்மானித்திருந்தனர்.*

## நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிரான...

*ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது நிராகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது.*

*இச்சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் அதில் உள்ளடக்கப்படாமையினால் சட்டமூலம், சட்டப்பூர்வமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லையென தீர்ப்பளிக்குமாறு கோரி சுமந்திரன் எம்.பி இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## சுவர் இடிந்து விழுந்ததில்...

உடைப்பதில் ஈடுபட்டு வந்த முத்து செல்வம் தனுஜன் (வயது18)என்பவர், சுவரின் கல் விழுந்து பாரிய காயத்துடன் உடப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் மரணமடைந்துள்ளார்.

## தாமரைத் தடாக வளாகத்தில்...

*அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் நடைபெறுகிறது. நிகழ்வை கலாசார அமைச்சு, இந்து சமய, இந்து கலாசார திணைக்களம், இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.*

*இதன்போது ரங்கொலி கோலம் போடுதல், ஓவியம் வரைதல், உடைப்போட்டி, கலாசார நிகழ்ச்சிகள், மஹாபாரத கதாபாத்திரங்களைச் சித்தரிக்கும் கலை நிகழ்சிகள், புத்தாக்க கண்காட்சிகள், கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சி என்பனவற்றுடன் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன.*

*பெருந்திரளான மக்கள் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.*

*2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஸ்ரீமத் பகவத் கீதை மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் வழங்கியிருந்தது.*

*இந்துக்களின் மிகவும் புனித நூலாக கருதப்படும் ஸ்ரீமத் பகவத் கீதை தொடர்பான சமயச் செயற்பாடுகளுடன், புனித பகவத் கீதைக்கு பக்தர்கள்.அஞ்சலி செலுத்துவதற்காக, இந்தியாவின் ஹரியானா மாநிலத்திலுள்ள குருக்ஷேத்ரா அபிவிருத்தி சபையால் ஆண்டுதோறும் பகவத் கீதை விழா நடத்தப்படுகிறது.*

*அண்மைய ஆண்டுகளில், இந்த விழா வெளிநாடுகளிலும் நடத்தப்பட்டது, இதன் காரணமாக 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச புனித பகவத் கீதை மாநாட்டை இலங்கையில் நடத்த முன்மொழியப்பட்டது.*

*இதன்படி, விழாவை இலங்கையில் நடத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.*

## தோட்ட நிர்வாகத்தின் தலையீடுகளின்றி...

*செய்யுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆட்பதிவு திணைக்கள் ஆணையாளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்கள் தேசிய அடையாள அட்டையை பெறுவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இந்நடவடிக்கையை எடுத்து வருகிறார்.*

*ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் பிரதீப் சபுதந்திரிக்கு இது தொடர்பில் அவசர கடிதத்தை அமைச்சர் ஜீவன் அனுப்பி வைத்துள்ளார். மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்கள் தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது தோட்ட முகாமைத்துவத்தின் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.*

## கட்டட சுத்திகரிப்புத் துறையில்...

*சுத்திகரிப்புத் துறையில் வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப் படவுள்ளதா கவும் அமைச்சர் தெரிவித்தார். தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் ஜப்பான் கட்டடத் துப்புரவுப் பணியாளர் சங்கத்தினர் அண்மையில் அமைசரைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.*

*இச்சந்திப்பில் இதுபற்றிப் பேசப்பட்டது.இதையடுத்தே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.*

*இத்தொழில் வாய்ப்புகளை இலங்கை தொழிலாளருக்கு வழங்கியமைக்காக ஜப்பான் அரசுக்கும் அந்நாட்டின் நீதி அமைச்சருக்கும் அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். ஜப்பானிய மொழி புலமை மட்டம் விசா பிரிவில் விண்ணப்பிக்க முடியும். இதற்கென தகுதிகான் தேர்வு எழுத்து மற்றும் செயன்முறையில் நடத்தப்படவுள்ளது.*

*இது நிரந்தர வதிவிடத்துக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பையும் வழங்குமென இந்த பேச்சு வார்த்தையின் போது ஜப்பானிய பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.*

## மோட்டார் போக்குவரத்து திணைக்கள..

*மற்றும் இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் இதுபற்றித் தெரிவித்துள்ள அவர், மார்ச் 04 முதல் நாட்டிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கத்தின் அனைத்து அலுவலகங்களிலும் சேவை பெற்றுக்கொள்ள விரும்புவோர் கட்டிப்பாக தமக்கான திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். அதற்காக தானியக்க தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

*இதன்படி 02117116 என்ற தொலைபேசி இலக்கத்தில் தமக்குத் தேவைப்படும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக அழைப்பை ஏற்படுத்தமுடியும். தமக்கான சேவையை தெரிவுசெய்த பின்னர் தமது தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் வழங்கவேண்டும். அதனையடுத்து விண்ணப்பதாரரின் தொலைபேசி இலக்கத்துக்கு உரிய அலுவலகத்திலிருந்து குறுஞ்செய்தி அனுப்பப்படும். அந்த குறுஞ்செய்தியில் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய திகதியும் நேரமும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக www.dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

# இன்றைய பலன்கள்

(01.03.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
*புதிய தொழில் தொடங்க ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அது கைகூடும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த காரியம் இப்போது நடைபெறும்.*

**ரிஷபம் :**
*உடன்பிறப்புகளின் திருமணம் சிறப்பாக நடைபெறும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.*

**மிதுனம்:**
*சொன்ன சொல்லை காப்பாற்ற முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இனி கொடுத்த வாக்கை காப்பாற்றுவார்கள்.*

**கடகம்:**
*மாற்றங்கள் பல நடைபெறும். தன வரவும் தேவைக்கு ஏற்ப வந்து சேரும். விரயத்திற்கேற்ற தொகை வந்து சேரும்.*

**சிம்மம்:**
*தொழில் முன்னேற்றம் காணப்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. வருமான பற்றாக்குறை ஏற்படும். திட்டமிட்ட காரியங்களை செய்வதில் சில தடுமாற்றங்கள் சந்திப்பீர்கள்.*

**கன்னி:**
*குடியிருக்கும் வீட்டில் பிரச்சனைகள் உருவாகலாம். குரு வழிபாடு வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க வழிவகுத்து கொடுக்கும்.*

**துலாம்:**
*எதையும் திட்டமிட்டு செய்து வெற்றி காண இயலும். எடுக்கும் புது முயற்சி அனுகூலம் உண்டு. கூட்டுத் தொழிலில் இருந்து பிரிந்து தனித்து இயங்கலாமா என்று சிந்திப்பீர்கள்.*

**விருச்சிகம்:**
*உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.*

**தனுசு:**
*பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும். கல்யாணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும்.*

**மகரம்:**
*தொழில், உத்தியோகம் ,குடும்ப உறவு போன்றவற்றில் கூடுதல் கவனம் தேவை. புதியவர்களை நம்பி செயல்படுவதால் சில பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும்.*

**கும்பம்:**
*தொழிலில் முன்னேற்றம் காணப்படும். ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வரலாம்.*

**மீனம்:**
*குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுப காரியங்கள் இப்பொழுது நடைபெறும். ஒரு சிலருக்கு இனிமை தரும் விதத்தில் இடமாற்றம் ஏற்படும்*

## உத்திக பிரேமரத்னவின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதனால், அநுராதபுரம் மாவட்ட பட்டியலில் அவருக்கு அடுத்து அதிகளவு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட எஸ். சி.முதுகுமாரண அந்த வெற்றிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இந்து சமுத்திர கப்பல்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதனால், வரையறையின்றிய கப்பல் போக்குவரத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டியது அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த அமர்வை ஏற்பாடு செய்தமைக்கும் வலயத்தின் பாதுகாப்பு தொடர்பில் காண்பிக்கும் தொடர்ச்சியான அக்கறைக்கும் மிலிந்த மொரகொடவுக்கும் பாராட்டு தெரிவிக்க வேண்டும். ஒரே தடம் ஒரே பாதை வேலைத்திட்டம் அல்லது இந்து பசுபிக் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்து சமுத்திரத்தை பார்க்க முடியாது. இந்து சமுத்திரம் தற்காலத்தில் உலக மூலோபாய அரசியல் வலயமாக மாறியுள்ளது. கடந்த 5 6 வருடங்களிலேயே இது நிகழ்ந்துள்ளது. இதுவரையான நிகழ்வுகளில் அதனை நாம் உறுதிப்படுத்த முடியும்.

அதேபோல் இந்தியா உலகின் மிகப் பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக உருவெடுக்கப்போகிறது. 21 ஆவது நூற்றாண்டின் இறுதி வரையிலும் இந்தியாவின் வர்த்தக சந்தை விரிவடையும்.

இந்துனேசியாவும் மிகப்பெரிய பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது. இதன்படி இந்து சமுத்திர வலயம் தற்போது எழுச்சி காணும் பொருளாதார வலயமாக மாறியுள்ளது. இந்த நிலைமைக்கு மத்தியில் அதிகார மோதல்கள் அற்ற இந்து சமுத்திரத்தின் கப்பல் செயற்பாடுகளின் சுதந்திரத்தை மூலோபாய நிலைப்பாட்டிற்காக இலங்கை அர்பணிப்புடன் செயற்படும் என்றார்.

## மொனராகலையில் பஸ் விபத்து...

*கவிழ்ந்தது. விபத்தில், மாணவர்கள் 24 பேர் உள்ளிட்ட 36 பேர் காயமடைந்துள்ளனர்.விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.*

## எச்.ஐ.வி நோயாளர்களின்...

*தொற்றுக்குள்ளான ஆண்களின் 88 வீதத்தைக் காட்டுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.மேலும் இக்காலப் பகுதியில் 81 பெண்கள் தொற்றுக்குள்ளாகினர். இது, 11.7 வீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் புதிதாக எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளாவோர் வீதம் 88 வீதம் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.*

*இதன்படி, சமூகத்தில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர் களின் எண்ணிக்கை சுமார் 4,100 என மதிப்பிடப்பட்டுள்ள து.எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவரின் ,அறிகுறிகள் தென்பட சுமார் எட்டு வருடங்கள் ஆகும் என வைத்திய நிபுணர் ஜானகி விதானபத்திரன சுட்டிக்காட்டியுள்ளார்.*

## சதுப்பு நிலங்களை மறுசீரமைப்பதில்...

*தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்த்தன கலந்துகொண்டார். இதன் போது இலங்கைக்கான விருதை, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க பெற்றுக் கொண்டார்.*

## காஸா சிறுவர் நிதியம்; நிதிகளை...

*வேண்டுகோளை விடுத்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், காஸாவில் போரில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை கருத்திற்கொண்டு காஸா சிறுவர்களுக்கான நிதியம் அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். எதிர்வரும் ரமழான் பண்டிகையின் போது காஸா சிறுவர்களுக்கு நிதி உதவி வழங்குவதை இலக்காக கொண்டே இந்நிதியம் அமைக்கப்பட்டுள்ளது. இந் நிதியத்துக்கு பங்களிப்பு செய்யும் வகையில் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் எதிர்வரும் ரமழானில் இப்தார் நிகழ்ச்சிகளை நிறுத்தி, நிதியை காஸா சிறுவர் நிதியத்துக்கு பங்களிப்பு செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.*

*அத்துடன் இந்த நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும். ஒரு மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.*

*எனவே, காஸா சிறுவர் நிதியத்துக்குப் பங்களிப்பு செய்ய விரும்புபவர்கள் ஏபரல் 11க்கு முன்னர், நன்கொடைகளை வழங்குமாறு அவர் கேட்டுள்ளார்.*



1925-2024

# கௌரவ ரொனி டி மெல்

**முன்னைநாள் நிதி அமைச்சர் 1977 - 1988 மற்றும்**
**முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் 1967 - 2003**

கௌரவ ரொனி டி மெல் அவர்கள் 27.02.2024 அன்று காலமானார் என்பதை
ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் முன்னாள் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற திருமதி. மல்லிகா டி
மெல் அவர்களின் அன்புக் கணவரும் திருமதி. சுனாலினி ஜயதிலக்க, தாரா டி பொன்சேக்கா, திருமதி.
ரேணுகா தொஸ்ஸா ஆகியோரின் அன்புத் தந்தையாரும்.
Dr. அயல் ஜயதிலக்க, Dr. கமல் டி பொன்சேக்கா, திரு. ஃபுர்கான் தொஸ்ஸா
ஆகியோரின் மாமனாரும் அருஷி டி பொன்சேக்கா, ஜெஹான் டி பொன்சோக்கா, சுவீனி ஜயதிலக்க
மற்றும் அலீஷா தொஸ்ஸா ஆகியோரின் அன்பு பாட்டனுமாவார்

அன்னாரின் பூதவுடல், இல. 05, சார்ல்ஸ் டிரைவ், கொழும்பு 3 இல்லத்தில் அஞ்சலிக்காக
28 & 29.02.2024 இரு நாட்களும் வைக்கப்பட்டு 29.02.2024 பி.பகல் 2 மணிக்கு
மாத்தறை ருஹுணு பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

---

**01.03.2024 இன்று மாலை 4:30 மணிக்கு ருஹுணு பல்கலைக்கழக மைதானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.**

**அன்னாரின் தூய ஆத்மா இறை பாதங்களில் நித்திய சாந்தி பெறட்டும்.**

# பன்முக ஆளுமை நிறைந்த ஏ.எம். நஹியா –ஒரு பார்வை



**சஹீம் எம். ரிஸ்மியின் பார்வையும் பதிவும்**

நஹியாவுடனான சந்திப்பானது இலங்கையில் தமிழ் முஸ்லிம் உறவுக்கான வழிகாட்டுதல்களையும் மதிப்பீடுகளையும் பதிவு செய்கிறது. அது இதுவரையில் பழகிவரும் மனோநிலையிலுள்ள அனைவரையும் பரபஸ்பரம் நட்புறவுடன் பழக வேண்டிய பண்பாடுகள் அதன் முன் முக்கிய கருவாக இருக்கிறது.

சிறுபான்மையின சமூகங்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டி நல்ல சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. பல நூறு வருடங்கள் கவனிக்கப்படாமல் இருந்த விடயங்கள் பேசப்பட்டன. இவை நீண்ட கால வரலாற்றுக்குரியவை.

ஏ.எம். நஹியா ஓர் ஆய்வுத்திறன்மிக்க ஒருவர். கல்விப் புலமை சார்ந்தவர். நிர்வாகத் திறன்மிக்கவர். அவரது நிர்வாகத் திறன் எப்பொழுதும் வரலாற்றில் பேசப்படக் கூடியவை. பல்லின மக்கள் மத்தியில் மிகுந்த நேசத்துக்குரியவர். சிறந்து வரலாற்றுத் துறை ஆய்வாளர். 2019 செப்டம்பர் 16 ஆம் திகதியில் நிகழ்ந்த இலங்கை அரசின் தேசிய சாஹித்திய விருது வழங்கும் விழாவில் அவர் 2018 ஆம் ஆண்டில் எழுதிய 'இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்' எனும் நூலுக்கு சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் என்ற பகுதியில் தேசிய சாஹித்திய விருதைப் பெற்று புகழ்பெற்றவர்.

ஆ. சதாசிவம், க. கைலாசபதி, பொன். பூபாலசிங்கம், கா. குலரத்தினம், ப. சந்திரசேகரம் போன்ற பேராசிரியர் பலரின் நண்பரும் மற்றும் எஸ். எம். கமால்தீன், எம். எம். எம். மஹ்ரூப், ஏ. எம்.சமீம், கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி , பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா, டொக்டர் உபனந்த விதான பத்திரன, ஓய்வு நிலைப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லியனகமே மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ போன்ற கல்விமான்களின் அன்புக்குரிய நெருக்கமான நண்பராக ஏ.எம். நஹியா காணப்படுகிறார்.

கொழும்பு சாஹிராக் கல்லூரி உப அதிபராகவும் பதில் அதிபராகவும் இருந்து பெரும் பங்களிப்புச் செய்தவர் அவர். கல்வித் துறை என்று வரும் போது நஹியா, டி. பி. ஜாயா, ஷாபி மரைக்கார் ஆகியோர் அமர்ந்த கதிரையில் அமர்ந்திருந்து கல்விப் பணியாற்றினார்.

2018 இல் அரசியலமைப்பு உயர் சபையின் அங்கத்தவராக அவரது பெயரை அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை பரிந்துரை செய்தது. அப்பொழுது அதன் தலைவராக என். எம். நபீலும் செயலாளராக நானும் இருந்தேன். அந்த உறவுக்குப் பின்னர் அடிக்கடி அவருடன் தொடர்பு கொண்டு உறவை வலுப்படுத்திக் கொண்டேன். அதே வேளையில், சட்டத்தரணி ஜாவிட் யூசுபை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி பரிந்துரை செய்திருந்தது. இதற்குப் பல பேர் விண்ணப்பம் செய்திருந்தார்கள். ஆனால் நஹியாவின் கடிதம் அங்கு தாமதமாகித்தான் சென்றது. இக்கடிதம் தொடர்பில் முன்னாள் சாபாநாகர் கரு ஜயசூரிய, நஹியாவுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய கடிதம் கிடைத்தது. ஆனால் அது தாமதமாகித்தான் கிடைத்தது. முன்கூட்டியே அதற்கான நியமனங்கள் தயார்படுத்தி விட்டோம். எனினும் அன்று பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றுள்ளார். எனினும் இது தொடர்பில் நான் தொடர்பு கொள்கின்றேன் என்று சபாநாயகர் கருஜயசூரிய நஹியாவிடம் தெரிவித்தார். அதன் பின்பு சபாநாயகர் கரு ஜயசூரிய நஹியாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமனம் செய்யவுள்ளோம் அதற்கு சம்மதமா என்று வினவினார். அதற்கு அவர் நியமனம் செய்தார். 11.3.2019, 11.12.2020 வரையிலும் பணிபுரிந்தார். 1997.10.1, 1.1.2002 கலை கழகத்தின் நாடகக் குழுவின் உறுப்பினர்.

12.05.2011, 14.10.2015 பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராக இவர் சேவையாற்றினார். 12.9.2022 இற்றை வரையிலும் தகவல் அறியும் உரிமைகள் சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர். தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்ப் பாட மறுசீரமைப்புக் குழுவில் பங்காற்றியவர். முன்னாள் அமைச்சர் பி. பி. தேவராஜின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் சீர்திருத்தத்தின் ஆணிவேராக அமைந்து செயற்பட்டவர் ஏ. எம். நஹியா என்பதை யாவரும் நன்கு அறிவர்.

எனினும், இந்த நியமனம் அவர் விண்ணப்பம் கோரவில்லை. தானாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனமுவந்து வழங்கியதாகும். அந்தப் பதவியில் ஏற்கனவே மறைந்த அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃபின் மைத்துனர் நீதிபதி சலாம் இருந்தார். அதன் பிறகு செல்வி திருச்சந்திரன் இருந்தார். அமைச்சர் டக்லஸ் தேவானந்தா அவருடைய நியமனம் குறித்து பாராட்டுத் தெரிவித்திருந்தார். அதற்கு நஹியா பொருத்தமானவர் என்று. அவருக்கான நியமனத்தை ஜனாதிபதி வழங்கினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃபுடைய மிக நெருக்கமான நண்பர். தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றவர்கள் அவரைச் சந்திக்க வருகின்றார்கள் என்று கூறி நஹியாவை அரசியலுக்குள் இணைத்துக் கொள்வதற்கு அழைப்பு விடுத்திருந்தார். அவர் அன்று இன்று வரையிலும் அரசியலுக்குள் நுழையவில்லை. முன்னாள் இராஜாங்க அமைச்சர் முஸ்பா கூட மிக நெருக்கமான உறவினர்.

கல்வித்துறை என்று வரும்போது நஹியா, டி. பி. ஜாயா, கலாநிதி ஏ.எம். ஏ. அஸீஸ், ஷாபி மரைக்கார் ஆகியோர் அமர்ந்த கதிரையில் பாடசாலை மாணவர்கள் ஒன்று சேர்ந்து அவரைத் தூக்கிச் சென்று பெரு மதிப்புக்குரிய அதிபரின் கதிரையில் பலவந்தமாக அமர்ந்தினார்கள். ஆனால் தற்காலிக அதிபராக கல்விப் பணியாற்றினார். அவர் தற்காலிக அதிபராக இருப்பதனால் அந்த கதிரையில் அமர்ந்து பணிபுரிய விரும்பவில்லை. ஆதலால் அக்கதிரைக்கு அருகிலுள்ள கதிரையில் அமர்ந்து அவர் புரிந்த பணிகளின் மகிமையை கல்வியுலகம் நன்கறியும்.

11.02.2019 இல் அவர், இலங்கை கல்வி சகாய நிதியின் நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினர். கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி உள்ளிட்டவர்கள் இதில் அங்கம் வகித்தனர். 1991 அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நஹியாவும் ஜாவிட் யூசுப் ஆகிய இருவரும் உதவிச் செயலாளராக அங்கம் வகித்தனர் .டொக்டர் அஸீஸ் பவுண்டேசன் முதல் நீதிபதி உஸைன், செயலாளர் எஸ். எம். கமால்தீன் இடம்பெறுகின்றனர். அதன் பிறகு பேராசிரியர் எம். டி. ஏ. புர்கான் தலைவராகவும் செயலாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றினர். அதன் நிர்வாக சபை அங்கத்தவராக இப்போதும் சேவையாற்றி வருகின்றார். குறிப்பாக நானும் இணைந்துள்ளேன். இதில் என்னையும் இணைத்துக் கொள்வதற்கு கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸின் மகன் அலி அஸீஸும் நஹியாயும் விரும்பி பரிந்துரை செய்தார்கள் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

பல சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார். 2003.7.1ஆம் திகதி முதல் 17 திகதி வரையிலும் இஸ்ரேல் ஜெரூசலத்தில் அஹரன் ஒப்ரீத் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டவர். 18.10.2001 கொழும்பு சிலோன் இன்டர் கொண்டினல் ஹோட்டலில் நடைபெற்ற மனித வளர் அபிவிருத்தி தொடர்பிலான சர்வதேச சாக் மாநாட்டிலும் இலங்கையின் முக்கிய பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். 2001.4.10, 12 புதுடில்லியில் நடைபெற்ற உற்பத்தி திறன் தொடர்பில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டிலும் 2002.10.22, 23, 24 ஆகிய திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டிலும் 1995.12.31 , 1996.01.05 ஆம் திகதிகளில் இந்தியா திருச்சியில் நடைபெற்ற உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் கலந்து கொண்டார். அவர் மொத்தமாக ஏழு சர்வதேச மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி கூட ஏ. எம். நஹியாவின் பெயரில் அவருடைய வாழ்க்கை வரலாறு எழுதப்பட வேண்டும் என்று பல தடவைகள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். அதற்கான பொருளடக்கம் ஒழுங்கு முறைகள் இவ்வாறுதான் அமைய வேண்டும் என்று இருவரும் திட்டம் வகுத்துக் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். நூலின் பொருளடக்கம் பற்றி ஏ. எம். நஹியா எழுதி அனுப்பியதைப் பார்த்த கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி, 'மிக அருமையான முறையில் எழுதி அனுப்பி இருக்கின்றீர்கள்' என்று வியந்து பாராட்டினார். அவர்கள் இருவரும் ஒரு நாளை தீர்மானித்து விட்டு சர்வதேச ஊடகவியலாளர் லத்திப் பாரூக் இல்லத்தில் ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தார்கள். குறித்த நாளில் சந்திப்பதற்கு ஏ. எம் நஹியாவுக்கு முடியவில்லை. அதில் இருந்து நான்கு நாளைக்கு பிறகு சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அத்தினத்தில் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி அவர்கள் சுகயீனம் காரணமாக டெல்மன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்பு அவரை நிரந்தரமாகச் சந்திக்க முடியவில்லை.

பேராசிரியர் புர்க்கான் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு எம். ஏ. நஹியாவினால் எழுதப்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தவர். அவர் அதற்கான மனம் திறந்து எம். ஏ. நஹியாவிடம் வினவியுள்ளார். அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 75 விகிதம் நிறைவு பெறும் தருணத்தில் அவர் மரணம் எய்து விட்டார். அதே போன்றுதான் முன்னாள் அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், ஏ. எம். நஹியாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வார். இப்பொழுது சுதந்திரமாகத்தானே இருக்கின்றீர்கள் என்று கூறி பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார். அவர் ஒரு பண்பாடான மனிதர். அவர் என்ன சொல்ல வருகிறார் என்று ஏ. எம். நஹியாவுக்கு ஆரம்பத்தில் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவர் பற்றிய புத்தகம் சமீபத்தில் பிறர் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இப்படி பல ஆளுமைகளின் வாழ்க்கை ஏ. எம். நஹியாவினால் எழுதப்பட வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தார்கள் என்பது உண்மையே. அதற்குச் சாட்சியாக இன்றும் லத்தீப் பாரூக் உயிருடன் இருக்கின்றார்.



**ஏ.எம் நஹியா நான் நேசிக்கின்ற பெருமகன் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸூடைய வாழ்வியல் பற்றிய வரலாற்று நூலை எழுதியவர். அதன் காரணமாக அவர் மீது அதிக பற்றும் உயர்ந்த மதிப்பும் எனக்கு இருக்கிறது. என்னைப் பற்றி இக்பால் அலி எழுதிய நூலுக்கு கருத்தாளமிக்க அணிந்துரையினை வழங்கியவர். நான் அங்கம் வகிக்கும் அஸீஸ் பவுண்டேசனிலும் அவர் அங்கத்துவம் வகிப்பவர்.**

1991இல் இவர் அஸீஸும் தமிழும் என்ற முதல் நூலை வெளிக்கொணர்ந்தார். கொழும்பு தமிழ் சங்கம் இந்நூலுக்கு சிறந்த ஆய்வு நூலுக்கான விருது வழங்கியது. இந்த நூல் இரண்டாவது பதிப்பாக 2018இல் வெளிவந்தது. 1994 இல் முஸ்லிம் நேசன் சுவாமி விபுலானந்தர், 2012 இல் யான் அறிந்த பேராசான் கார்த்திக்கேசு சிவத்தம்பி, 2018 இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும் 2019 இந்நூலுக்கு இலங்கை அரச சாஹித்திய விழாவில் சிங்கள, தமிழ், ஆங்கில ஆகிய மும்மொழிவுக்கான சிறந்த ஆய்வு நூலுக்கான விருதும் 1,50,000 ரூபா பெறுமதியான பணத்தொகையும் வழங்கப்பட்டமை குறிப்பிட்டத்தக்கது. 13 நூல்களின் வெளியீடுகளுக்குப் ஆசிரியராக இருந்துள்ளார். 1977 கொழும்பு சாஹிராக் கல்லூரியின் 85 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட வளர்பிறை சிறப்பு மலரின் ஆசிரியர். பல நூற்றுக்கணக்கான ஆய்வு கட்டுரைகள் எழுதியுள்ளார். இலங்கை தொலைக்காட்சி மற்றும் வானொலியில் 50 மேற்பட்ட சிறப்பு உரைகளை நிகழ்த்தியுள்ளார்.

2018 அஸீஸ் பவுண்டேசனால் வெளியிடப்பட்ட அஸீஸின் சொற்பொழிவுகள் நூலின் இணையாசிரியர். 1999 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் காலத்தில் 50 ஆவது ஆண்டு தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு வடகிழக்கு மாகாண சபையினால் வெளியிடப்பட்ட விசேட சிறப்பு மலரின் ஆசிரியர். 1991, 1992,1993 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட தமிழ் சாஹித்திய விழாக்களுடைய சிறப்பு மலர்களின் ஆசிரியர், 1994 தமிழ் கலை விழா மலரின் ஆசிரியர். 1994 நாடக விழா மலரின் ஆசிரியர், 1996 இல் யுத்தத்தால் இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்காக புத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்ட 29 பாடசாலைகளுக்கான கட்டிடங்களின் திறப்பு விழா சிறப்பு மலரின் ஆசிரியர், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கல்விச் சுபீட்ச சகாய நிதி அங்குரார்ப்பண நிகழ்வின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் ஆசிரியர், 1998, 1999 களில் நடைபெற்ற தமிழ் நாடக விழாக்களில் வெளியிடப்பட்ட மலர்களின் ஆசிரியர். 1991 இல் ஸ்ரீலங்கன் கல்ச்சர்ஸ் ஆசிரியர்.

1994 இல் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் தமிழ் மாமணி பட்டம் வழங்கி கௌரவித்தனர். இதில் பேராசிரியர் சுனில் ஆரியரட்ண, பேராசிரியர் பேட்ராம் பஸ்தியாம்பிள்ளை, ஊவா மாகாண சபை சாஹித்திய விழாவில் இரு தடவை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2002 இல் நடைபெற்ற 7 வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2005 இல் அக்கரைப்பற்று (கருங்குடியூர்) நடைபெற்ற பெரு விழாவில் தங்கம் மோதிரம் அணிவிக்கப்பட்டு சமூக ஜோதி எனும் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். 2018 இல் கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்கள் ஒன்று கூடல் நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2019 இல் இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும் என்ற நூலான தேசிய சாஹித்திய விருது. 2020 இல் கம்பன் கழகம் நடத்தும் விருது வழங்கும் பெருவிழாவில் மாவித்துவான் சி கணேஸ்ஐயர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். இதன் போது மறைந்த தென்னிந்தியப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம், பாரளுமன்ற உறுப்பினர் எம். எ. சுமந்திரன், உச்ச நீதி மன்ற நீதிபதி துரைராசா, ஆ. முத்துலிங்கம், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்கக்கார உள்ளிட்டவர்களுடன் ஏ. எம். நஹியா அவர்களும் சிறப்புமிகு விருதைப் பெற்றுக் கொண்டவர்.

அவருடைய ஆளுமை விருத்தியில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் புரூடி விடுதிக் காலம் பெரும் பங்களிப்பு செய்துள்ளது. இலங்கை பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் ஒரு முஸ்லிம் முதன் முதலில் ஒருவர் தமிழ் சங்கத்தின் தலைவராக இருந்த பெருமை ஏ. எம். நஹியா அவர்களையே சாரும். தனக்குப் பின்னர் வித்தியலங்கார பல்லைக்கழகத்தில் அ. ஸ. அப்துஸ் ஸமது தலைவராக வந்தார். குறிப்பாக நஹியாவின் ஏ. எம். ஆளுமை விருத்தியில் கூடுதலான பங்களிப்பை கொழும்பு பல்கலைக் கழகமும் மற்றும் புரூடி விடுதிக் காலமும்தான் பெரும் வகிபாகத்தைக் கொண்டுள்ளன. இன்று கூட அவர் உயர்ந்து நிற்பதற்குக் காரணம் தமிழ் சங்கம் ஆகும். அந்த வகையில் அவருடைய வளர்ச்சியில் பல்கலைக் கழகம் பெரும் பங்காற்றியுள்ளமை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதே போன்று பிரதேச அபிவிருத்தி இந்து சமய சமய கலாசார மற்றும் தமிழ் விவகார அமைச்சின் தமிழ் விவகாரத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளராக1990 களில் இருந்து கடமையாற்றினார். அந்த இடத்தில் முஸ்லிம் ஒருவர் இருந்து சேவையாற்றியமையானது வியந்து பாராட்டக் கூடிய ஒரு முக்கியமான அம்சமாகும்.

அப்பொழுது இந்து சமய கலாசார அமைச்சராக செல்லையா இராசதுரை மற்றும் அமைச்சர் பி. பி. தேவராஜ் ஆகிய இருவருடைய பதவிக் காலங்களிலேயே அவர் கடமை புரிந்தார். அக்கால கட்டத்தில் தமிழ் சாஹித்திய விழாக்களை தனியாக முன்நின்று நடத்தினார். அவர் அந்த இடத்தில்தமிழ் ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய வகையில் அமைத்துக் கொண்டார். கண்டி, வவுனியா, கொழும்பு, கல்முனை போன்ற பல இடங்களில் தமிழ் சாஹித்திய விழாக்களை மிகப் பிரமாண்டமான முறையில் நடத்திய அனுபவம் ஆற்றலும் அதிகம் வாய்க்கப் பெற்றவர். கண்டி சாஹித்திய விழா கண்டி புனித திரித்துவக் கல்லூரியில் இடம்பெற்றது. யானைகள் தமிழ் ஏடுகளைச் சுமந்து ஊர்வலம் சென்றன. கல்முனையின் சாஹித்திய விழா கார்மேல் பற்றிமா கல்லூரியில் இடம்பெற்றது.

2014 யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வியல் துறையில் முதுகலை தத்துவமாணிப் பட்டத்தை மேற்கொள்வதற்காக இலங்கை முஸ்லிம் களுடைய கல்வி மேம்பாட்டில் சுவாமி விபுலானந்தர் பங்களிப்பு என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு முது கலை தத்துவ மாணிப் பட்டத்தைப் பெற்றவர். 1982 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்வதற்காக எம் சி. சித்திலெப்பையினுடைய கல்விச் சிந்தனையும் பங்களிப்பும் என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு சமர்ப்பித்துள்ளார். பொது நிர்வாகத் துறையிலும் கற்கை நெறியைப் பயின்று தகுதி பெற்றவர். கலாநிதி பட்டப் படிப்பை மேற்கொள்ள பல்கலைக் கழகம் பதிவு செய்த போதிலும் அவருக்கு கொரோனா மற்றும் காலங்கள் இடம்கொடுக்கவில்லை.

இவ்வாறு அரச நிர்வாகத் துறை சார்ந்த விடயங்களிலும் இலக்கியச் செயற்பாடுகளிலும் மேலெழுந்து பரபரப்பாக பேசப்படும் ஏ. எம். நஹியாவின் ஆளுமையின் அடையாளம் இலக்கிய உலகத்திலும் அரச நிர்வாகத் துறையிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மறைத்து விட முடியாததொன்றாக இருக்கிறது.



**இக்பால் அலி...**



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

ஒருநாள் மாலை நேரம் நானும் எனது செல்லப்பிராணி ஜிம்மியும் கடற்கரையில் காற்று வாங்கச் சென்றிருந்தோம். கடற்கரை எங்கும் அங்குமிங்குமாக மக்கள் கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர். சிறுவர்கள் சிப்பிசோகி பொறுக்கி விளையாடுகின்றனர். இதமான கடற்காற்று அங்குள்ளோரைத் தழுவிச் சென்றது. கடல் அமைதியாகக் காணப்படுகிறது. ஆதவன் மேற்கு வானில் முற்றாக மறைந்து விட்டான். நிலவு மங்கை மெல்ல எட்டிப் பார்க்கிறாள். நட்சத்திரக் கூட்டமான அவள் தோழிகள் மத்தாப்புச் சிதறல் போல பரவிக் காணப்படுகின்றன. தூரத்தே குடிசைகளில் விளக்குகளின் ஒளி தெரியத் தொடங்கிவிட்டன. மல்லிகையின் மணம் கமகமவெனக் காற்றோடு கலந்து ஊரெங்கும் பரவுகிறது.

01. பந்தியில் உள்ள அடைமொழியை எழுதுக. ..................................................

02. உவமைத் தொடரை இனங்கண்டு எழுதுக. ..................................................

03. பந்தியிலுள்ள இணைமொழி எது? ..................................................

04. அஃறிணை ஒருமை ஒன்றன்பால் நிகழ்கால வினைச்சொல் எது? ..............................

05. பந்தியில் 'மங்கை' எனக்குறிப்பிட்டது எதனை? ..................................................

06. அடுக்குமொழியை எழுதுக. ..................................................

07. ஓதாமல் ஒருநாளும் .................................. வேண்டாம்.

08. **பின்வரும்** வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுங்கள்

நான் நாய் வளர்த்தேன் - ..................................................

09. சிறுவர் இணையத் தளத்தை பார்வையிடுவதன் மூலம் கிடைக்கும் நன்மை என்ன?

..................................................

10. பழமொழியை பூர்த்தி செய்யுங்கள்.

i. இளமையில் .................................. சிலையில் ..................................

11. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுங்கள்
நல்லது / மீன்களை / நலத்திற்கு / வளர்ப்பது / அலங்கார / உள

..................................................

12. கமலா வீட்டிற்கு நடந்து வந்தாள். எனும் வாக்கியத்தில் **விரைவாக** என்ற அடைமொழியை சேர்த்து மீண்டும் எழுதுங்கள்.

..................................................

13. விடுகதையை வாசித்து விடை எழுதுங்கள். முட்டையிடும் அடைகாக்கத் தெரியாது. கூட்டிலே குடியிருக்கும் கூடு கட்டத் தெரியாது அது எது? ..................................

**II.**

14. பெண்பால் சொற்களுக்குரிய ஆண்பால் சொற்களை எழுதுங்கள்

i. தோழி - .................................. ii. சிறுமி - ..................................

iii. குறத்தி - ..................................

15. பன்மைச் சொற்களுக்கு உரிய ஒருமைச் சொற்களை எழுதுங்கள்

i. வீடுகள் - .................................. ii. பென்சில்கள் - ..................................

iii. புத்தகங்கள் - ..........................

16. அடைப்புக்குள் இருக்கும் சரியான இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுங்கள்.
i. தங்கை புத்தகம் .................................. (வாசித்தாள் / வாசித்தான்)
ii. அப்பா வேலைக்குச் .................................. (சென்றான் / சென்றார்)
iii. நாங்கள் ..................................(விளையாடினோம்/ விளையாடுகின்றேன்)

17. பொருத்தமான தனிச்சொல்லை எழுதுங்கள்


i. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் ..................................

ii. எண்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா ..................................

18. i. ஆங்கில சொற்களுக்குரிய தமிழ் சொற்களை எழுதுங்கள்

i. Post Office - .................................. ii. Tiger - ..................................

ii. படத்திற்குப் பொருத்தமான பெயரை ஆங்கில எழுத்துக்களால் எழுதுங்கள்





i. .................................. ii. ..................................

19. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமொன்றை எழுதுங்கள்
i. many / do / how / you / sisters / have

..................................................

ii. கீழே தரப்பட்ட சிங்களச் சொற்களுக்குரிய கருத்தை தமிழ் எழுத்துக்களால் எழுதுங்கள்
i. தஹதுன - .................................. ii. ம(ட்)ட - ..................................

20. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை சிங்களத்தில் கூறும் முறையை தமிழ் எழுத்துக்களால் எழுதுங்கள்
உங்களுக்கு தண்ணீர் வேண்டுமா?

..................................................

21. 2, 1, 8 ஆகிய மூவிலக்கங்களால் ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

..................................................

22. கம்பி ஒன்றில் கட்டப்பட்டிருந்த கொடிகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளன.

| வெள்ளை நிற கொடிகள் | மஞ்சள் நிற கொடிகள் |
|---|---|
| 55 | 45 |

i. கம்பியில் கட்டப்பட்டிருந்த கொடிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


..................................................

ii. வெள்ளை நிறக்கொடிகளை விட மஞ்சள் நிறக் கொடிகள் எத்தனை குறைவாக காணப்படுகின்றன?

..................................................

23. ஒரு ஈருருளியில் இருவர் பயணஞ் செய்யலாம் எனின் 10 ஈருருளிகளில் எத்தனை பேர் பயணஞ் செய்யலாம்?

..................................................

24. 






A பாத்திரத்தை நிரப்புவதற்கு B பாத்திரத்தினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

..................................................

25. ஆசிரியையிடம் 44 பயிற்சிக் கொப்பிகள் உள்ளன. ஒரு பிள்ளைக்கு 2 பயிற்சிக் கொப்பிகள் வீதம் வழங்கப்படுவதாயின் எத்தனை பிள்ளைகளுக்கு அப்பயிற்சிப் புத்தகங்கள் போதுமானதாகும்?


..................................................

26. அரைவாசியை காட்டும் உருக்களைத் தெரிந்து அதன் இலக்கங்களை முன்னால் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.





................

27. கீழே காணப்படும் உருவத்தினை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.




i. முக்கோணத்திற்கும் செவ்வகத்திற்கும் மாத்திரம் அடங்கக் கூடிய எண் யாது?
i. 6 ii. 4 iii. 2


ii. வட்டம், முக்கோணம், செவ்வகம் ஆகியவற்றுள் அடங்கியுள்ள இலக்கம் எது?
i. 2 ii. 8 iii. 4

28. 

கடிகார முகம் பிற்பகல் நேரத்தைக் காட்டுகிறது. இதை டிஜிட்டல் நேரத்தில் எழுதுங்கள்

..................................................

29. பூக்களை விரும்பும் மாணவர்கள் பற்றிய தகவல்கள் கீழுள்ள உரு வரைபில் தரப்பட்டுள்ளது.




i. சம எண்ணிக்கையில் மாணவர்கள் விரும்பும் பூ வகைகளைத் தருக.

..................................................

ii. அரலி பூக்களை விடவும் ரோசாப் பூக்களை அதிகமாக விரும்புவோர் எத்தனை பேர்?

..................................................

**III.**

30. வித்துக்களை நீக்கிய பின் உணவாக பயன்படுத்தும் காய்
i. கத்தரிக்காய் ii. வட்டுக்கத்தரி iii. பயற்றங்காய்

31. ஊனுண்ணும் பறவை
i. மைனா ii. மீன்கொத்தி iii. கிளி

32. வருடத்தின் குறித்த காலத்தில் மட்டும் பூக்கும் தாவரங்கள்
i. தென்னை, வாழை ii. கொன்றை, இறப்பர் iii. கொன்றை, வாழை

33. விலங்குணவுக் கூட்டத்தைச் சேர்ந்தவை
i. மீன், பால், முட்டை ii. பாசிப்பயறு, உழுந்து, கடலை
iii. பாண், பிட்டு, சோறு

34. தேசிய கொடியில் சிவப்பு நிறப் பின்னணியினால் பிரதிபலிப்பது
i. சிங்கள மக்கள் ii. ஒற்றுமை iii. தேசிய மகத்துவம்

35. இலங்கைக்கே உரித்தான பறவைகள்
i. சபன் கோழி, அன்னம் ii. மல்புலுட்டா, காட்டுக்கோழி iii. லயார்ட் கிளி, நீலக்குருவி

36. தண்டு மூலம் புதிய தாவரங்களைப் பெறுவது பின்வருவனவற்றுள் எவை?
i. பப்பாசி, மிளகாய் ii. கங்குன், வற்றாளை iii. எலுமிச்சை, தோடை

37. அடிப்படை வர்ணம் ஒன்றல்லாதது
i. நீலம் ii. மஞ்சள் iii. பச்சை

38. தூபாராம விகாரையை கட்டுவித்த மன்னன்
i. தேவநம்பிய தீசன் ii. எல்லாளன் iii. **துட்டகைமுனு**

39. **பிளாஸ்டிக்,** பொலித்தீன் என்பவற்றை எரிப்பதனால் ஏற்படுவது?
i. வளிமண்டலத்திலுள்ள அவசியமான வாயுக்கள் அழிந்து விடுகின்றன.
ii. ஓசோன் படலம் பாதுகாப்பு அடைகிறது.
iii. புற்று நோயை ஏற்படுத்தும் வாயுக்கள் தோன்றும்.

40. காற்றின் வலுவினை பயன்படுத்தும் சந்தர்ப்பம் அல்லாதது
i. அரிவி வெட்டுதல் ii. பட்டம் விடுதல் iii. மின் உற்பத்தி செய்தல்

41. முகமூடிகளுக்குப் பிரசித்திபெற்ற இடம்
i. களுத்துறை ii. அம்பாந்தோட்டை iii. அம்பலாங்கொடை

42. மிண்டிவேர்களைக் கொண்ட தாவரம்
i. ஆலமரம் ii. வெற்றிலை iii. தாழை

43. காற்றுமூலம் பரம்பலடையும் வித்து அல்லாதது
i. வேங்கை ii. எருக்கலை iii. புன்னை

44. சூழலைக் கண்காணிக்க கூர்மையான பார்வையைக் கொண்ட பிராணி எது?
i. கழுகு ii. ஆமை iii. மட்டி

45. எமது உடலிலிருந்து நீர் அகற்றப்படும் சந்தர்ப்பம் எது?
i. வெளிச்சுவாசம் ii. சமிபாடு iii. உட்சுவாசம்

46. விவசாயியின் **தோழனாக** உள்ள பிராணி
i. மண்புழு ii. ஆந்தை iii. தேனீ

47. மனிதனின் அடிப்படைத் தேவைகளாக கொள்ளப்படுவன
i. கைப்பேசி, வீடு ii. உணவு, நீர் iii. ஆடைகள், கணினி

48. விற்றமின் C அதிகமாகக் கொண்ட உணவு
i. தோடம்பழம் ii. முருங்கையிலை iii. ரம்புட்டான்

49. வீதி சமிக்ஞை விளக்கில் சிவப்பு நிற விளக்கொளியினால் வெளிப்படுத்தும் கருத்து
i. வாகனங்களை நிறுத்துக ii. செல்வதற்கு ஆயத்தமாகுக
iii. செல்லுங்கள்

50. இலங்கையின் தேசிய மரம் எது?
i. அரச மரம் ii. ஆலமரம் iii. நாகமரம்

51. இவ்வுருவில் காணப்படும் முற்காலத்தில் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணம் எது?
i. சிம்மாசனம் ii. பாய்க்கப்பல்
iii. பல்லக்கு



52. உடலுக்குத் தேவையான அளவு புரதம் கிடைக்காவிடின் ஏற்படுவது
i. வளர்ச்சி குன்றும் ii. பல்நோய்கள் ஏற்படும் iii. பார்வை குன்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)




# எடிசன் திரை விருதுகளில் சிறந்த இயக்குனர் யார்?

## பிடித்தமான இயக்குனர்களுக்கு இணையத்தில் வாக்களிக்க முடியும்





கடந்த ஆண்டு ரஜினி, விஜய், அஜித், ஷாருக்கான், தனுஷ், சிம்பு, விஷால் போன்ற நடிகர்களை வைத்து இயக்கிய இயக்குனர்கள் வரிசையில் மணிரத்தினம், லோகேஷ் கனகராஜ், வெற்றிமாறன், நெல்சன், திலிப்குமார், மாரி செல்வராஜ், அட்லி, கார்த்திக் சுப்புராஜ், வினோத்குமார் போன்ற இயக்குனர்கள் எடிசன் திரை விருது தேர்வுப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பல்வேறு நாடுகளில் தினசரி நாளிதழ், பண்பலைகள், தொலைக் காட்சிகள், சமூக ஊடகங்கள் மூலம் வாக்கு பெற்று வரும் இயக்குனர்கள் வாக்கு நாளுக்கு நாள் போட்டிகள் அதிகமாக இருந்து வருகிறது.

மேலும் உலகத் தமிழர்கள் நற்சிந் தனையாளர்கள் மட்டுமல்லாமல், சிறந்த இயக்குனர்களை தேர்ந்தெடுப்பதில் வல்லவர்கள் என்பதில் எந்த ஒரு ஐயமில்லை என எடிசன் விருது குழு தெரிவித்துள்ளது.

தங்களுக்குப் பிடித்தமான இயக்குனர்களுக்கு இணையத்தில் வாக்களிக்க edisonawards.in என்ற இணையத்தில் வாக்குகளை செலுத்தலாம் என எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

+60166167708 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னையில் நாளைமறுதினம் சாதனைப் பெண்கள் விருது விழா

## நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் விமரிசையான வைபவம்

மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும் என்றார் கவிமணி தேசி கவிநாயகம்பிள்ளை. மங்கையரைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதியன்று உலகமகளிர் தினத்தைக் கொண்டாடி வருகிறோம்.

தாய், மனைவி, தங்கை, தோழி, மகள் என்று நம் உறவின் அனைத்துப் பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறப்படுவது இதனால்தான்.

இன்றைய காலத்தில் பெண்கள் பல துறைகளில் சாதித்து வருகிறார்கள். ஒவ்வொரு துறையிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக முன்னேறி வருகிறார்கள்.




பெண்கள் என்றாலே விட்டு வேலை செய்வது, பிள்ளை பெற்றுக் கொள்வது அல்லது ஆசிரியர், செவிலியராகப் பணியாற்றுவது என்ற நிலைனை மாறி இன்றுள்ள அத்தனை துறைகளிலும் பெண்கள் தங்கள் திறமையால் முத்திரை பதித்து வருகிறார்கள்.

பெண்கள் கல்வியில் உயர்ந்துள்ளனர். விமானம் ஓட்டுவது, தொடரியை இயக்குவது, அறிவியல் மற்றும் கணினித் துறையில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வருவது என்று பெண்கள் கால் பதிக்காத துறையே இல்லை.

பெண்கள் பல்துறைகளில் சாதித்து வந்தாலும், அவர்களுக்கான அங்கீகாரத்தை சமூகம் முறையாக வழங்காமலே இருந்து வருகிறது. ஒரு காலத்தில் பெண்களை அடிமைகளாகவே வைத்திருந்தனர். 1908 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி வேலை நேரத்தை குறைக்கவும், கூலியை உயர்த்தவும் வலியுறுத்தி, வாக்களிக்கும் உரிமையையும் கோரி 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் ஒரு பேரணியை நடத்தினர்.

இந்த நாளை அடுத்த ஆண்டு தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது அமரிக்க சோஷியலிஸ்ட் கட்சி. இந்த நாளை சர்வதேச பெண்கள் தினமாக அனுசரிக்க வேண்டும் என்ற யோசனையை முன் வைத்தவர் கிளாரா ஜெட்கின். கோபன் ஹேகனில் 1910 ஆம் ஆண்டு நடந்த உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் இந்த யோசனையை முன்வைத்தார் கிளாரா.

அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்து கொண்டனர். இறையடுத்து 1911 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. 1917 இற்குப் பிறகு உலக மகளிர் அமைப்புகள் ஒன்றுகூடி மகளிர் தினத்தை மார்ச் 8 என்று கட்டமைத்தன.

அதன் பிறகே உலகம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில், சமூகத்தில் திறமை வாய்ந்த பெண்களை அடையாளம் கண்டு கடந்த ஏழு வருடங்களாக தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் நந்தவனம் பவுண்டேசன் 'சாதனைப் பெண்கள்' என்ற விருது வழங்கி கௌரவம் செய்து வருகிறது.

உலகின் எந்த ஒரு நாட்டில் சாதிக்கும் பெண் இருந்தாலும் அவர்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து சாதனைப் பெண் விருது வழங்கி சிறப்பிக்கிறார்கள். 27 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவரும் 'இனிநந்தவனம்' மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான நந்தவனம் சந்திரசேகரன் நந்தவனம் பவுண்டேசனின் தலைவராக உள்ளார். லிம்ரா பேக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் எம். சாதிக்பாட்சா செயலாளராகவும், கவிஞரும், எழுத்தாளரும், பள்ளி ஆசிரியருமான பா. தென்றல் பொருளாளராகவும் இருந்து இந்த அமைப்பை நடத்தி வருகின்றனர்.

லிம்ரா பேக்ஸ் பிரவேட் லிமிடெட் நிறுவனத்தின் அனுசரனையுடன் நடைபெறும் நந்தவனம் பவுண்டேசன் 2024 ஆம் ஆண்டுக்கான சாதனைப் பெண்கள் விருது வழங்கும் விழா 03.03.2024 அன்று சென்னை, அரும்பாக்கம் விஜய்பார்க் விடுதியில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், துபாய் powerflow middie East LLC நிறுவனத்தின் Finance Director முனைவர் ஆ. முகம்மது முகைதீன், இலங்கை தினகரன்/ வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், Tokyo Tamil Sangam Cor Commitee மற்றும் KKCCS நிர்வாக இயக்குநர் கருணாநிதி காசிநாதன், திருச்சிராப்பள்ளி கிராமா லயா தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் பத்மஶ்ரீ எஸ். தாமோதரன், துபாய் Techchip Computer Trading நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அப்துல் வஜீத், லண்டன் தொழிலதிபர் எஸ்.ராஜபார்ச்சம் ஆகியோர் கலந்து கொண்டு சாதனைப் பெண்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கின்றனர்.




விழாவில் சரஸ்வதி பாஸ்கரன் (திருச்சி), திலகவதி பாஸ்கரன் (கும்முடிப்பூண்டி), எஸ்.விஜயலட்சுமி (சென்னை), ஏ. யாஸ்மீன் பேகம் (சென்னை), விஜயலட்சுமி மாசிலாமணி (சென்னை), சுபா பிரபு (திருச்சி), புஷ்பா சுப்பிரமணி (திருச்சி), ரேணுகா தேவி ராமசாமி (திருச்சி), எம். நபிலா பேகம் (புதுக்கோட்டை), அன்புத் தோழி ஜெயஶ்ரீ ( கோயமுத்தூர்), எம்.விஜயசாமுண்டீஸ்வரி (புதுச்சேரி), வினோதினி (பெரம்பலூர்), எஸ்.பகவதி மோதிலால் (திருவனந்தபுரம்), ஜயலெட்சுமி (கோழிக்கோடு கேரளா), பவானி சச்சிதானந்தன் (இலங்கை), விஜி ஆர் .கிருஸ்ணன் (சென்னை), எஸ். சௌமியா (இலங்கை), பிரனீதா கோணேஸ்வரன் (இலங்கை), கவிமகள் ஜெயவதி (இலங்கை), டெயினா மனோஜ் (இலங்கை), ஈவராணி (மலேசியா), பத்மினி சின்னத்தம்பி (மலேசியா), ராக்விந்தர் கவுர் சாது சிங்க் (மலேசியா), சந்திரிகா பூவன் (மலேசியா ), விமலா சூரியதாஸ (சுவிட்சர்லாந்த்) ஆகியோர் 2024 ஆம் ஆண்டுக்கான சாதனைப் பெண் விருது பெறுகின்றனர்.

இதுபோல சமூகத்தில் சாதித்து வரும் பெண்களை அடையாளம் கண்டு விருது வழங்கி கௌரவிப்பதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதோடு மேலும் அவர்கள் பல சாதனைகள் செய்ய உந்து சத்தியாக இருக்கும் என்பதால் நந்தவனம் பவுண்டேசன் சாதனைப் பெண்களுக்கு விருது வழங்குவதை ஒவ்வொரு ஆண்டும் மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

# சர்வதேச கீதை மகோற்சவம் கொழும்பில் இன்று ஆரம்பம்



பாரதத்தில் உதித்த பெருமைமிகு மாபெரும் இரு இதிகாசங்களில் மஹாபாரதம் ஒன்றாகும். இலக்கியவாதிகளுக்கு அமுதசுரபியான இலக்கியக் களஞ்சியமாகவும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு அடிமுடி தெரியாத வரலாற்று ஜோதிப் பொக்கிஷமாகவும், ஆன்மீக சிந்தனையாளர்களுக்கு உத்வேகம் தரும் ஒப்பற்ற சக்தியாகவும் மஹாபாரதம் விளங்குவதுடன், வாழ்வின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வாழ்வியல் பாடம் சொல்லித்தரும் அட்சய பாத்திரமாகவும் திகழ்கிறது.

இவ்வாறு புகழ்பெற்ற மஹாபாரதம் இதிகாசத்தை மக்கள் வாழ்வியலுடன் இணைக்கும் பொருட்டு 'சர்வதேச கீதை மகோற்சவம் 2024' நெலும்பொகுன திரையரங்கில் மார்ச் மாதம் முதலாம்(இன்று), இரண்டாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறுகின்றது. புத்தசாசன சமய கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில், கலாசார அமைச்சு, இந்து கலாசாரத் திணைக்களம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியன இணைந்து சர்வதேச கீதை மகோற்சவத்தை ஏற்பாடு செய்துள்ளன.

சர்வதேச கீதை மகோற்சவம் 2024 மிகவும் பிரமாண்டமான முறையில் இலங்கையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மகாபாரத புராண இதிகாசத்தை அடிப்படையாகக் கொண்டு மகாபாரதம் கூறிய கருத்துக்கள் தற்கால வாழ்வியலோடு எவ்வாறு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பாக சித்தரிக்கும் வகையிலே பல்வேறு கலை கலாசார நிகழ்ச்சிகள் விழாவை அலங்கரிக்கவுள்ளன.

ரங்கோலி கோலப் போட்டிகள், கலாசார நிகழ்ச்சிகள், மகாபாரத கதாபாத்திரங்களை சித்தரிக்கும் கலைநிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சி, கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழா என்பன இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறுவதோடு, மாலை 6 மணிக்கு சிறப்பு ஹோமம் நடைபெற்று, இரவு 8 மணிக்கு மாபெரும் இசைநிகழ்ச்சி இடம்பெறும்.

இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை சர்வமத தலைவர்கள் உள்ளடங்கலாக ஆய்வாளர்கள் மற்றும் புலமையாளர்கள் கலந்து கொள்ளும் மகாபாரத கருத்தரங்குகள் மும்மொழிகளில் மொழிபெயர்ப்பு வசதியுடன் இடம்பெறும். மாலை 5 மணிக்கு அரச உயர் மட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய உயர்ஸ்தானிகர், ஆலய அறங்காவலர் தலைவர்கள் உள்ளடங்கலான முக்கிய பிரமுகர்களின் பங்களிப்புடன் பிரதான வைபவம் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து இரவு ஏழு மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மாணவிகள் வழங்கும் சிறப்பு கலை ஆற்றுகை நிகழ்ச்சி, ஏனைய கலை நிகழ்ச்சிகள் மற்றும் இசைநிகழ்ச்சியுடன் இரண்டாம் நாள் நிகழ்வு நிறைவடையும்.

மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் கைவினை கண்காட்சி, புத்தகக் கண்காட்சி மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்று, மாலை 5 மணி தொடக்கம் யாகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சோபன யாத்திரா இடம்பெறும். சோபன யாத்ராவில் மகாபாரத கதைகளை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கதாபாத்திரங்களை உள்ளடக்கிய ஆற்றுகைகளோடு, கலை நிகழ்ச்சிகள் ஏனைய கண்ணைக் கவரும் கலாசார பண்பாட்டு அம்சங்கள் இடம்பெறும். அர்ஜ்ஜுனனுக்குக் கண்ணன் கூறிய அறிவுரைகளின் தொகுப்பு பகவத்கீதையாகும். இந்நூல் இந்துக்களின் ஒப்பற்ற புனிதநூலாகப் போற்றப்படுகிறது. மனித வாழ்விற்குத் தேவையான ஒப்பற்ற வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நெறிகளைப் பகவத்கீதை கூறுகிறது.

**உமாச்சந்திரா பிரகாஷ்...**

(09 ஆம் பக்கத் தொடர்)


# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

53.  இவ் உருக்காட்டியின் மூலம் வெளிப்படுவது
i. பெண்களுக்கு மட்டும்
ii. விசேட தேவையுடையவர்கள்
iii. மத குருமார்களுக்கானது

54. கடதாசி போன்ற உக்கும் கழிவுகளை இடுவதற்கு பயன்படுத்தும் குப்பை தொட்டியின் நிறம்
i. நீலம் ii. பச்சை iii. மஞ்சள்

55. மேல் மாகாணத்தில் அடங்கியுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை
i. 2 ii. 5 iii. 3

56. இம்மாதிரி உபகரணத்தின் பயன்பாடு
i. மழையை அளவிடுவதற்காக
ii. காற்றின் வேகத்தை அளவிடுவதற்காக
iii. காற்றின் திசையை அறிந்து கொள்வதற்காக



57. சரியான கூற்றைத் தெரிவு செய்யுங்கள்
i. களுகங்கை பென்தோட்டையில் கடலுடன் கலக்கிறது.
ii. மகாவலி கங்கை திருகோணமலையில் கடலுடன் கலக்கிறது.
iii. களனி கங்கை மாத்தறையில் கடலுடன் கலக்கிறது.

58. இவ்வுருவினால் காட்டப்படுவது
i. குழாய்க்கிணறு
ii. துலாக்கிணறு
iii. இரத்தினக்கல் அகழும் இடம்



59. சீகிரியா அமைந்துள்ள மாகாணம்
i. மத்திய மாகாணம் ii. தென் மாகாணம் iii. வட மத்திய மாகாணம்

60. பெருந்தெருவில் பயணிக்கும் போது வீதி விதிகளைப் பின்பற்றினால் நாம் பாதுகாப்பாகப் பயணிக்கலாம். "வீதி விதிகள்" என்னும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக. எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துப் பிழையுமின்றியும் சரியாக எழுதப்படல் வேண்டும்.

.......................................................................

.......................................................................

.......................................................................

## கடந்த வார (23.02.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 2 | 21. 2 | 31. 3 |
| 02. 1 | 12. 2 | 22. 3 | 32. 1 |
| 03. 1 | 13. 3 | 23. 2 | 33. 2 |
| 04. 1 | 14. 2 | 24. 2 | 34. 1 |
| 05. 2 | 15. 2 | 25. 1 | 35. 2 |
| 06. 1 | 16. 1 | 26. 3 | 36. 2 |
| 07. 2 | 17. 1 | 27. 2 | 37. 3 |
| 08. 2 | 18. 2 | 28. 2 | 38. 2 |
| 09. 1 | 19. 1 | 29. 1 | 39. 1 |
| 10. 2 | 20. 2 | 30. 3 | 40. 2 |


INTERNATIONAL
GITA MAHOTSAV | SRI LANKA
1-3 MARCH 2024
COMPETITION
Fancy Dress
MAHABHARAT
CHARACTERS
01 MARCH 2024
Nelum Pokuna Mahinda Rajapaksa Theatre
01.30 PM-03.00 PM
Participation: Open (Individual)
/igmkkr
/InternationalGitaMahotsav
www.internationalgitamahotsav.com


RANGOLI
Competition
01 MARCH 2024
Nelum Pokuna Mahinda Rajapaksa Theatre
09.00 AM - 10.30 AM
Participation: Participation of 20 groups of Students
(Two or three children per group from Hindu schools and Dhamma Schools).
Contest Materials: Participants must bring necessary materials.
/igmkkr
/InternationalGitaMahotsav
www.internationalgitamahotsav.com


INTERNATIONAL
GITA MAHOTSAV | SRI LANKA
1-3 MARCH 2024
COMPETITION
GITA SHLOKA RECITAL
01 MARCH 2024
The 1st, 2nd, and 3rd winners should be presented live at the venue.
Age Groups: 5 – 7 years | 8 – 10 years | 11 – 13 years
4 – 16 years | More than 17
यदा यदा हि धर्मस्य
ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य
/igmkkr
/InternationalGitaMahotsav
www.internationalgitamahotsav.com

# குருக்கள்மடம் ஏத்தாளைக்குளத்தை நோக்கி படையெடுக்கும் வெளிநாட்டுப்பறவைகள்





(புதிய காத்தான்குடி தினகரன்,கல்லடி குறூப் நிருபர்கள்)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் குருக்கள்மடத்தில் அமையப்பெற்றுள்ள ஏத்தாளை குளத்தில் வருடாந்தம் தஞ்சமடையும் வெளிநாட்டுப்பறவைகள் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இக்குளத்தை அண்டிய பகுதியில் சில மாதங்கள் தங்கியிருக்கும் இப்பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்ததும் தனது தாயகம் நோக்கி மீண்டும் திரும்பும் என சொல்லப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் சில தீவுப் பகுதியிலிருந்து பல ஆயிரம் கிலோ மீற்றர்கள் தாண்டி பறந்துவரும் இப்பறவைகள் டிசம்பர் மாதப்பகுதியிலிருந்து ஏப்ரல் மாதம் வரை இங்கு தங்கியிருப்பதாக சூழலியலாளர்களால் சொல்லப்படுகின்றது.

இப்பறவைகள் இங்குள்ள மரங்களில் கூடுகளை கட்டி தங்கியிருக்கும் அதேவேளை இக்குளத்திலுள்ள மீன்களை பிடித்து உணவாக உட்கொள்கின்றது.

மரங்களில் இவை தங்கியிருக்கும் போது வெள்ளை போர்வை போர்த்தியது போல இக்குளத்திலுள்ள மரங்கள் அழகாக காட்சியளிக்கும்.

வருடா வருடம் அழையா விருந்தினர்களாக இப்பகுதிக்கு வருகை தந்து இக்குளத்தில் தங்கியிருந்து செல்லும் இப்பறவைகளும் இக்குளமும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்காலப்பகுதிகளில் அதிக மக்கள் வருகை தந்து பறவைகளை பார்வையிட்டு செல்லும் இடமாக இது மாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை – ஹம்பாந்தோட்டை பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை - ஹம்பாந்தோட்டை இலங்கை போக்குவரத்து பஸ் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகியது.

திருகோணமலையிலிருந்து தினமும் இரவு 08.00 மணிக்கு புறப்படும் பஸ், மூதூர், ஓட்டமாவடி, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, பொத்துவில், மொனராகலை மற்றும் கதிர்காமம் ஊடாக ஹம்பாந்தோட்டையை அதிகாலை 04.30 மணிக்கு சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹம்பாந்தோட்டையிலிருந்து இப்பஸ் தினமும் இரவு 7.00 மணிக்கு புறப்பட்டு கதிர்காமம், மொனராகல, சியம்பலாண்டுவ, பொத்துவில், அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மற்றும் மூதூர் ஊடாக திருகோணமலையை அதிகாலை 05.30 மணிக்கு வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்





திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பிரிவுக்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கள விஜயம் மேற்கொண்டு அந்த நிலவரங்களை பார்வையிட்டார்.

(படம்; அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

# மகாவலி கங்கைக்கு குறுக்காக தடுப்பணை அமைக்க நடவடிக்கை



வெருகலம்பதி ஆலயத்தினுள் வெள்ளநீர் புகுவதை தடுக்கும் முகமாக மகாவலி கங்கைக்கு குறுக்காக தடுப்பணை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் மகாவலி கங்கை பெருக்கெடுப்பதால் ஆலயம் முழுமையாக நீரில் மூழ்கி ஆலயத்தின் நிலப்பரப்பை மகாவலி கங்கை ஆக்கிரமிக்கின்றது. 1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் பெரிய அளவிலான நிலப்பரப்பு நீரில் மூழ்கியது. 2023 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது ஆலயத்தின் அன்னதான மடம், ஆலய பூசகர் வாழும் வீடு, ஆலயத்தின் வெளிவீதி என்பன சேதமடைந்தன.

மொறாவ இந்திராராம விகாரையின் விகாரபதி உபரத்தின தேரர் இவற்றை நேரில் வந்து பார்வையிட்டு ஆலயத்தின் நிலைமையை அவதானித்து ஜனாதிபதிக்கும் இந்திய தூதரகம், கலாசார திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர், திருகோணமலை மாவட்ட மேலதிக உதவி அரசாங்க அதிபர் மற்றும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுவந்தார். அதற்கமைய நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் வருகை தந்து உடைப்பு ஏற்பட்ட பகுதியை பார்வையிட்டதுடன் தடுப்பணை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடினர்.

# பெரியநீலாவணையில் நான்கு வயது சிறுவன் விபத்தில் பலி



(பாண்டிருப்பு தினகரன், பெரிய நீலாவணை நிருபர்கள்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை கிராமத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் பெரியநீலாவணை விஷ்ணு வித்தியாலய வீதியைச் சேர்ந்த அருணா ஹர்ஷான் (4வயது) என்ற சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிவந்த வாகனம் உயிரிழந்த சிறுவனின் சகோதரியை ஏற்றிக் கொண்டு புறப்பட தயாரான போது பின்பக்கமாக நின்ற சிறுவன் மீது மோதியமையால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாஸா அவசர வாகனச்சேவை அம்பாறை மாவட்ட ஒன்றுகூடல்



(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அகில இலங்கை ஜனாஸா மற்றும் அவசர வாகன சேவையின் அம்பாறை மாவட்டத்திற்கான ஒன்று கூடலும், இவ்வேலைத்திட்டத்தை விஸ்தரிக்கும் கூட்டமும் அக்கரைப்பற்று 'கிங்க்ஸ் கார்டன்' கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று தஃவா பள்ளிவாசல் நம்பிக்கை சபையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த ஒன்று கூடலுக்கு அப்பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம்.எம்.எம்.ரியாத் தலைமைதாங்கினார்.

மருதமுனை தொடக்கம் பொத்துவில் வரையிலான பிரதேசங்களைச் சேர்ந்த ஜனாஸா மற்றும் அவசர வாகன சேவை அமைப்புகளின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

"தஃவா"ப்பள்ளிவாசலின் பிரதம கத்தீப் அஷ் ஷெய்க், ஜே எம் ஷியாப் (சஹ்வி) மிகவும் தெளிவான ஆரம்ப உரையை நிகழ்த்தினார். அதனையடுத்து சமுகமளித்த அனைவரினதும் அறிமுக நிகழ்வு நடைபெற்றது..

# 'மண்ணும் மனிதர்களும்' நூல் வெளியீடு திருகோணமலையில்

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

'அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இலக்சுமி பிரசுராலயத்தின் வெளியீட்டில் உருவான யோர்ச் அருளானந்தம் (நியூசிலாந்து) எழுதிய "மண்ணும் மனிதர்களும்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா நாளை (02) மாலை 4.00 மணியளவில் திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும் சிறுகதை நூலானது இலவசமாக வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல்லின் இறுதிக்கிரியை இன்று

## தென் மாகாணம் முழுவதும் துக்கதினம் அனுஷ்டிப்பு

(வெலிகம தினகரன் நிருபர்)



காலம் சென்ற முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல்லின் இறுதிக் கிரியைகள் இன்று (01) வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மாத்தறை றுகுணு பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் தென் மாகாணம் முழுவதும் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளதோடு அரச நிறுவனங்களில் தேசிய கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறும் தென் மாகாண ஆளுநரால் பணிக்கப்பட்டுள்ளது.

அவரது பூதவுடல் நேற்று (29) கொழும்பிலிருந்து பிறபகல் 2 மணியளவில் மாத்தறை வெல்ல மடவுக்கு கொண்டு வரப்பட்டது. பிற்பகல் 4 மணியளவில் றுகுணு பல்கலைக்கழக வேந்தர், உபவேந்தர் மற்றும் றுகுணு பல்கலைக்கழக அலுவலக அதிகாரிகள் பூதவுடலை பொறுப்பேற்றனர். மக்கள் அஞ்சலிக்காக இன்று 3.30 மணி வரை பூதவுடல் றுகுணு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட விசேட மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து விளையாட்டுத்திடலுக்கு இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு மத அனுஷ்டானங்களுடன் இறுதிக்கிரியைகள் இடம் பெறவுள்ளது..

# சடலம் மீட்பு

( ஏறாவூர் நிருபர் )

ஏறாவூர் ஐயங்கேணி ரயில் தண்டவாளப்பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவுநேர கடுகதி ரயிலில் மோதியே இவர் இறந்திருக்கலாம் அல்லது தற்கொலை செய்திருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்தவர் ஐயங்கேணி பாரதிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி சந்திரமோகன் (40) என அவரது மனைவியால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபானம் அருந்தும் பழக்கமுடைய இவர் கடந்த சில வருடகாலமாக குடும்பத்தைவிட்டுப்பிரிந்து வாழ்வதாக தகவல் கிடைத்துள்ளது. திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் மற்றும் ஏறாவூர் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர். கூலித்தொழிலாளியான இவர் கடன் தொல்லையினால் விரக்தியடைந்த நிலையில் இருந்துள்ளார். இதனையடுத்து இவரது மனைவி மத்திய கிழக்கு நாடொன்றுக்கு வீட்டுப்பணிப்பெண்ணாகச் சென்று கடந்த இரண்டு வருடங்கள் பணிபுரிந்து கடன்களைச் சீர்செய்துள்ளார். இருந்தபோதிலும் இவரது மதுப்பழக்கத்தினால் குடும்ப உறவு துண்டிக்கப்பட்டிருந்ததாக மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.


# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## KARACHCHI PRADESHIYA SABHA

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank and grant from the European Union towards the cost of Local Development Support Project, and intends to apply part of the proceeds of this loan/grant to payments under the Contract for Works as described below.
2. The Chairman, Provincial Project Procurement Committee (PPPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the works as described below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost' (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) Bid Security | Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/ KPS/ 2024/ BT4 /01 | Construction of Shopping Complex at Karachchi Pradeshiya Sabha Premises - Stage II | 36.68 | C5 or above Building Construction | 119 | 550,000.00 | 17-Jul-2024 | 14-Aug-2024 |
| 02 | LDSP/ PT2&PT 3/ NP/KN/ KPS/ 2023/01&02 | Construction of Sales Outlets for Selling Local Nutrition Food & Shopping Units at Kilinochchi Service Market | 32.25 | C5 or above Building Construction | 119 | 480,000.00 | 17-Jul-2024 | 14-Aug-2024 |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi Town, Kilinochchi (T.P No: 0212285761, Fax No: 0212285690)** and inspect the bidding documents at Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi Town, Kilinochchi from **1-Mar-2024** until **20-Mar-2024** between 09:00 Hrs and 15:00 Hrs on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi Town, Kilinochchi from 1-Mar-2024** until **20-Mar-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.10,500.00, Rs.9,500.00 respectively**. The method of payment will be by cash.
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14.00 Hrs on 21-Mar-2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex, Kaithady.**
01-Mar-2024



# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/02/29 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/03/21 மற்றும் 2024/03/22 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.02.28
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5404 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 8 9 7 2 9 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3646 — சீட்டிழுப்பு திகதி 2024.02.28 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,481,714.96
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 17 43 47 51 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 69279

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1752 — 2024.02.28 — 57634 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 425,771,210.00
ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 26 54 64 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
Mega Power Lucky Millions ரூ 1 000 000/- அதிர்ஷ்ட இலக்கம் 192818

Lucky 7 VIP — திகதி 2024.02.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0230
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 9 7 1 3 2 6 — L7 எழுத்து E
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.25,923,535.88

ராசி சுப மலன் — திகதி 2024.02.28 — சீட்டிழுப்பு இலக்கம் 713 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,913,624.20
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 08 13 48 55 — தனயோக இலக்கம் 56368 — நாளுக்கான விதி எண் 04

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1434 — 2024.02.28 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,615,454.24
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 20 37 44 60 — விசேட எழுத்து B — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 71612

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

QC-4715 PIAGGIO, 2005, THREE-WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 014514

### பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலக பிரிவின் நுகேகொட, கொஹுவல, பியற்றேர்ஸ் இடம், 19ஏ இலக்கத்தில் வசிக்கும் ஸ்ரீயானி குமாரநாயக்க ஆகிய நான் சன்சலா சுரவீர ஆராய்ச்சிகே என எனது பெயரை பாவிக்கின்றேன். எனவே, இது முதற்கொண்டு எனது பெயரை மேற்குறிப்பிட்டுள்ளவாறு பாவிக்கின்றேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் அதனது பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

சன்சலா சுரவீர ஆராய்ச்சிகே

Repeat Your ad For Better Offers

### மரண சாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் 500/A மாபுல்கொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520016 கண்ட இல. 01 பத்திர இல. 01 துண்ட இல. 006ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 79, ஜுபிலி தூன் மிரிஹான, நுகேகொட எனும் விலாசத்தைக் கொண்ட கிங்தொட்ட விதானலாகே லீலாரத்ன சில்வா எனும் ஆள் 2023.02.01ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 06, ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.01ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம், காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

### த குட்நஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

செயிட் அலி ஸாஹிர் மௌலானா ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் த குட்நஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) பல்கலைக்கழக பட்டப்படிப்பை இச்சட்ட தொடரும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டமொன்றையும் அவர்கள் தொழிற்சந்தைக்கு உகந்த முறையில் தம்மை ஆயத்தம் செய்துகொள்ளத் தக்கதான முறையில் விரிவுரைகள், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்

(ஆ) மூத்த பிரசைகளுக்காக பல்தரப்பட்ட உதவித் திட்டங்களை அமுல் செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்துகொடுத்தல்

(இ) வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர்கள், யுவதிகளை சுயதொழில்களுக்காக ஊக்கமூட்டி அவர்களுக்குத் தேவையான உதவிகள், ஒத்தாசைகள் மற்றும் பயிற்சிகளை அளித்தல்

பிறவும்

செயிட் அலி ஸாஹிர் மௌலானா
பாராளுமன்ற உறுப்பினர்

### மரண சாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**

**பிரிவு 55**

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் வேபடகல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 510618 கண்ட இல. 02-0001 துண்ட இல. 176ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 47, சமகி மாவத்தை, தங்கொல்லவத்த, நிட்டம்புவ எனும் விலாசத்தைக் கொண்ட கனிஹி அச்சி பதிரன்னெஹெலாகே அஸோக ஜயசிரி வீரக்கொடி எனும் ஆள் 2022.11.14ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 47, சமகி மாவத்தை, தங்கொல்லவத்த, நிட்டம்புவ என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.04.01ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல. GCF/ATH/DL/40/LR**
**காணி அமைச்சின்**
**இல.: LD/05/2005/LRB/263**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக் காணித் துண்டு தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள் 2024ஆம் வருடம் மார்ச் மாதம் 13ஆம் திகதி நடைபெறும் மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2024.01.19ஆம் திகதிய 2367/24ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | : மேல் மாகணம் |
| 2. | மாவட்டம் | : கொழும்பு |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | : தெஹிவளை |
| 4. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : அத்திடிய |
| 5. | கிராமம் | : அத்திடிய |
| 6. | வரைபட இல. | ஆரம்ப வரைபட இல. கோ: 9366 |
| 7. | காணியின் பெயர் | : அத்திடிய வயல்வெளி |
| 8. | துண்டு இல. | : துண்டு இல. 1 |
| 9. | முழு விஸ்தீரணம் | : 0.0147 ஹெக்டயார் |

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்**
**பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்**
**தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு.**

**பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை, இராஜகிரிய.**

2024.02.08

# குடியியல் நடைமுறைக்கோவைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றில்

பீல்ட் மார்ஷல் சரத்
பொன்சேக்கா,
இல.160/7/பீ, கிரிமண்டல மாவத்தை,
நாரஹேன்பிட்டிய,
கொழும்பு-05.

**-முறைப்பாட்டாளர்-**

| | |
|---|---|
| வழக்கு இல | : டீஎஸ்பீ93/2024 |
| தன்மை | : சிறப்பு |
| நடைமுறை | : பொது |
| பெறுமதி | : ரூபா 100,000/- |

**எதிர்**

1. சஜித் பிரேமதாச
(தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி)
2003, பியாவே ஒன் த வாட்ரஸ் பிரோன்ட்
101, புத்கமுவ வீதி
ராஜகிரிய.

2. ரஞ்சித் மடுமா பண்டார,
(பொதுச் செயலாளர்,
ஐக்கிய மக்கள் சக்தி)
410/132, பௌத்தலோக
மாவத்தை,
கொழும்பு-07.

3. திஸ்ஸ அட்டநாயகே
(தேசிய ஏற்பாட்டாளர்,
ஐக்கிய மக்கள் சக்தி)
இல.410/132, பௌத்தலோக
மாவத்தை,
கொழும்பு-07.

4. ஹர்ஷ டி சில்வா,
(பொருளாளர், ஐக்கிய
மக்கள் சக்தி) இல.30/90, டி,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு-07

**-பிரதிவாதிகள்-**

கட்டளை பிறப்பிக்கும் மற்றும் / அல்லது ஐக்கிய மக்கள் சக்தி சார்பில், கூட்டுத்தாபனமற்ற நிறுவனம், முறைப்பாட்டாளர் மேற்கூறப்பட்ட இலக்கத்தில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கீழ் குறிப்பிடப்படும் நிவாரணங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**நிவாரணங்கள் பின்வருமாறு**

அ) வழங்கப்பட்ட மற்றும் கட்டளை ஒன்றை 1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் எதிராளிகளுக்கு குடியியல் நடைமுறைக்கோவைச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின் மற்றும் அதன் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டுத்தாபனமற்ற நிறுவனம் பிறப்பிக்கும்படியும்

ஆ) வழங்கப்பட்ட மற்றும் பிரகடனமொன்றை எல்லா எதிராளிகள் கூட்டாகவோ மற்றும் அல்லது பல மற்றும் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது எல்லா செயல்களும் அவர்களுக்கு கீழ் மற்றும் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி வேலை செய்யும் கூட்டணி மற்றும் அல்லது அதன் முதன்மை அமைப்பாளர் மற்றும் அல்லது அதன் தலைவர் மற்றும் அல்லது அதன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது அதன் கீழ் வேலை செய்பவர்களுக்கு எந்தவித சக்தியோ மற்றும் அல்லது சட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை முறைப்பாட்டாளர் மற்றும் அல்லது முறைப்பாட்டாளர் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்புரிமையை இடைநிறுத்தம் செய்ய மற்றும் அல்லது முறைப்பாட்டாளரின் உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேற்ற மற்றும் அல்லது இடைநிறுத்த மற்றும் அல்லது முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக நிலைநாட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றும் அல்லது இடைநிறுத்த மற்றும் அல்லது விலக்க முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் களனிய எனும் பதவியிலிருந்து வெளிக்காட்ட மற்றும் அல்லது கருத்துரைக்க முறைப்பாட்டாளரால் தயா ரத்னாயக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சேர்ப்பு தொடர்பில் உத்தரவு பிறப்பிக்கும்படியும்

இ) வழங்கப்பட்ட மற்றும் நிரந்தர விதிப்பணையாக கட்டுப்படுத்தும் படியாக எல்லா எதிராளிகள் கூட்டாக மற்றும் அல்லது பல மற்றும் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது எல்லா செயல்களும் அவர்களுக்கு கீழ் மற்றும் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி வேலை செய்யும் கூட்டணி மற்றும் அல்லது அதன் முதன்மை அமைப்பாளர் மற்றும் அல்லது அதன் தலைவர் மற்றும் அல்லது அதன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது அதன் கீழ் வேலை செய்பவர்களுக்கு எந்தவித சக்தியோ மற்றும் அல்லது சட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை முறைப்பாட்டாளர் மற்றும் முறைப்பாட்டாளர் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்புரிமையை இடைநிறுத்தம் செய்ய மற்றும் அல்லது முறைப்பாட்டாளரின் உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேற்ற மற்றும் அல்லது இடைநிறுத்த மற்றும் அல்லது முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக நிலைநாட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றும் அல்லது இடைநிறுத்த மற்றும் அல்லது விலக்க முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் களனிய எனும் பதவியிலிருந்து வெளிக்காட்ட மற்றும் அல்லது கருத்துரைக்க முறைப்பாட்டாளரால் தயா ரத்னாயக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சேர்ப்பு தொடர்பில் உத்தரவு பிறப்பிக்கும்படியும்

ஈ) வழங்கப்பட்ட மற்றும் இடைக்கால விதிப்பணையாக இவ் வழக்கு விசாரித்து முடிவடையும் வரை கட்டுப்படுத்தும் படியாக எல்லா எதிராளிகள் கூட்டாக மற்றும் அல்லது பல மற்றும் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது எல்லா செயல்களும் அவர்களுக்கு கீழ் மற்றும் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி வேலை செய்யும் கூட்டணி மற்றும் அல்லது அதன் முதன்மை அமைப்பாளர் மற்றும் அல்லது அதன் தலைவர் மற்றும் அல்லது அதன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது அதன் கீழ் வேலை செய்பவர்களுக்கு எந்தவித சக்தியோ மற்றும் அல்லது சட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை முறைப்பாட்டாளர் மற்றும் அல்லது முறைப்பாட்டாளர் ஐக்கிய மக்கள் சக்தி செய்ய இடைநிறுத்தம் உறுப்புரிமையை மற்றும் அல்லது முறைப்பாட்டாளரின் உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேற்ற மற்றும் அல்லது அல்லது இடைநிறுத்த மற்றும் முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக நிலைநாட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றும் அல்லது இடைநிறுத்த மற்றும் அல்லது விலக்க முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் களனிய எனும் பதவியிலிருந்து வெளிக்காட்ட மற்றும் அல்லது கருத்துரைக்க முறைப்பாட்டாளரால் தயா ரத்னாயக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சேர்ப்பு தொடர்பில் உத்தரவு பிறப்பிக்கும்படியும்

உ) வழங்கப்பட்ட மற்றும் தடை உத்தரவொன்றை முறைப்பாட்டாளர்களின் விண்ணப்பத்தை விசாரித்து முடிவடையும் வரை இடைக்கால தடை உத்தரவொன்றை கட்டுப்படுத்தும் படியாக எல்லா எதிராளிகள் கூட்டாக மற்றும் அல்லது பல மற்றும் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது எல்லா செயல்களும் அவர்களுக்கு கீழ் மற்றும் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி வேலை செய்யும் கூட்டணி மற்றும் அல்லது அதன் முதன்மை அமைப்பாளர் மற்றும் அல்லது அதன் தலைவர் மற்றும் அல்லது அதன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் மற்றும் அல்லது வேலையாட்கள் மற்றும் அல்லது அதன் கீழ் வேலை செய்பவர்களுக்கு எந்தவித சக்தியோ மற்றும் அல்லது சட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை முறைப்பாட்டாளர் மற்றும் அல்லது முறைப்பாட்டாளர் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது மற்றும் உறுப்புரிமையை இடைநிறுத்தம் முறைப்பாட்டாளரின் உறுப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேற்ற மற்றும் இடைநிறுத்த மற்றும் அல்லது முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக நிலைநாட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றும் அல்லது இடைநிறுத்த மற்றும் அல்லது விலக்க முறைப்பாட்டாளரை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் களனிய எனும் பதவியிலிருந்து வெளிக்காட்ட மற்றும் அல்லது கருத்துரைக்க முறைப்பாட்டாளரால் தயா ரத்னாயக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சேர்ப்பு தொடர்பில் உத்தரவு பிறப்பிக்கும்படியும்

மேற்கூறப்பட்ட முறைப்பாட்டாளர் மேற்கூறப்பட்ட வழக்கை பிரதிநிதித்துவம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில், கூட்டுத்தாபனமற்ற உடல், அது தொடர்பில் ஆர்வமுடைய சகலரும் தெரிந்து கொள்வதற்காக குறித்த வழக்குத் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில், அதன் அங்கத்தவர்களின் தகவலுக்காக இவ்வழக்குத் தொடர்பில் பொது அறிவித்தலொன்றை செய்வதற்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. அது ஓர் கூட்டுத்தாபனமற்ற நிறுவனம்.

குறிப்பிட்ட கட்டளையின்படி, இவ் அறிவிப்பானது ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவம் செய்ய பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனமற்ற நிறுவனம் மற்றும் அதன் சார்பிலான கட்சி மற்றும் உறுப்பினர்களின் தலைவராகும் மேலும், இவ் வழக்கின் அடுத்த விசாரணை 4.3.2024 என தெரியப்படுத்தப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டு மாசி மாதம் ஆம் திகதி.

நீதிமன்ற கட்டளைக்கிணங்க

**பதிவாளர்/ பிரதி பிஸ்கல்**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்.**
**கொழும்பு 12**

## கல்வி அமைச்சு

### திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு

### இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்

# வெற்றிடங்கள்

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவின் கீழ் உள்ள இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பிரதிப் பிரதான பொறியியலாளர் - தர உத்தரவாதம் - (MM 1-1) - 01 பதவி**

**தகைமைகள் :**

**வெளிவாரி :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மோட்டார் பொறிமுறை / இயந்திரவியல் / மின்சாரப் பொறியியலாளர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதவிக்கு இயைபான பாடத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப /தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி :**

(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) பதவிக்கு இயைபான விடயத்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

| | |
|---|---|
| **சம்பள அளவு** | : முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், MM 1-1 – ரூபா 53,175 - 1375x10-1910x15-95,575.00 (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உரித்தாகும்) |
| **ஆட்சேர்க்கப்படும் முறை** | : எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் |
| **வயதெல்லை** | : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**02. பயிலுநர் பொறியியலாளர் - (JM 1-1) - 01 பதவி**

**தகைமை :**

**வெளிவாரி :**

(அ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப /தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ)) 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் பத்து (10) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி :**

அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (MA 2-2) சேவை வகுதி IIஆந் தர பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

| | |
|---|---|
| **சம்பள அளவு** | : முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், JM 1-1 – ரூபா 42,600 - 755x10 - 1135x18 - 70,580.00 (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உரித்தாகும்) |
| **ஆட்சேர்க்கப்படும் முறை** | : எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் |
| **வயதெல்லை** | : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**03. பணிப்பாளர் / அதிபரின் செயலாளர் - (JM 1-1) - 01 பதவி**

**தகைமை :**

**வெளிவாரி :**

(அ) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் பொலிடெக்னிகல் /தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையில் (NAITA) / தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM) போன்ற நிறுவனங்களில் செயலாளர் பரிச்சயம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியுடன் குறைந்தபட்சம் பத்து (10) வருடகாலம் செயலாளர் வேலை தொடர்பான அனுபவத்தைப் பெற்றிருத்தல். அதன் பின் மூன்று (03) வருட காலம் பிரத்தியேக உதவியாளர் / இரகசிய செயலாளராக அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் சேவையாற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆங்கில மொழியில் எழுதுதல் மற்றும் கதைத்தல் தொடர்பில் சிறந்த ஆற்றலைக் கொண்டிருத்தல் மற்றும் கணனி ஆற்றல் கட்டாயமாகும்.

(இ) தமிழ் மொழியை வாசித்தல், எழுதுதல் மற்றும் புரிந்துகொள்ளலில் உள்ள தேர்ச்சி மேலதிக தகைமையாகும்.

**உள்வாரி :**

அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1-2) சேவை வகுதி IIஆந் தர பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் செயலாளர் பரிச்சயம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி மற்றும் ஆங்கில மொழியில் எழுதுதல், கதைத்தல் மற்றும் கணனி ஆற்றல் இருத்தல் கட்டாயமாகும்.

| | |
|---|---|
| **சம்பள அளவு** | : முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், JM 1-1 – ரூபா 42,600 - 755x10 - 1135x18 - 70,580.00 (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உரித்தாகும்) |
| **ஆட்சேர்க்கப்படும் முறை** | : எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் |
| **வயதெல்லை** | : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**மேற்கூறிய பதவிகளுக்கான பொது நிபந்தனைகள் :**

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- உள மற்றும் உடல் ரீதியாக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றும் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் 03 வருட தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவர்/ அவள் அந்தக் காலப்பகுதியின் இறுதியில் காட்டும் திருப்திகரமான வினைத்திறன் மற்றும் நடத்தையின் பிரகாரம் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உள்வாரி விண்ணப்பதாரர்கள் 01 வருட கால பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
- மேற்கூறிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் இயைபுடைய பதவிகளின் ஆரம்ப சம்பள நிலையிலாகும்.
- ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 8% அறவிடப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்புச் செய்யப்படும்.

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் புகைப்படப் பிரதியை சுய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

(அ) பிறப்பத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்
(இ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்
(ஈ) தேசிய அடையாள அட்டை

தற்போது அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவள்/அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். உறவினரல்லாத உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் முழுமையான விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை தங்களாலேயே சான்றுபடுத்திய சான்றிதழ்களுடன் 2024-03-15ஆம் திகதிக்கு முன் முகாமையாளர், நிர்வாகம் மற்றும் மனிதவளம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், இல. 582, காலி வீதி, கல்கிசை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் நிறுவனம் / நிலையம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

ஆட்சேர்ப்பதற்கு எந்த விதத்திலாவது ஆதரவு தேடுதல் ஆட்சேர்ப்பதற்கான தகைமையீனமாகலாம்.

**பணிப்பாளர் - அதிபர்,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்,**
**இல. 582, காலி வீதி,**
**கல்கிசை.**

## எஸ்எல்டீ விசன்கொம் (பீவீடீ) எல்டீடீ (PV 63007), எஸ்எல்டீ டிஜிட்டல் சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடீ (PV 2600) மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் (சேர்விசஸ்) எல்டீடீ (PB 914) இன் கூட்டிணைவு

எஸ்எல்டீ விசன்கொம் (பீவீடீ) எல்டீடீ (PV 63007), எஸ்எல்டீ டிஜிட்டல் சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடீ (PV 2600) மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் (சேர்விசஸ்) எல்டீடீ (PB 914) ஆகிய மேலுள்ள நிறுவனங்களின் பணிப்பாளர்கள் சபை, அந்தந்த சபைகளின் மூலம் சபைத் தீர்மானங்கள் ஊடாக சட்டத்தின் 242 (2) ஆம் பிரிவின் அடிப்படையில் கூட்டிணைக்கப்படுவதோடு ஸ்ரீலங்கா டெலிகொம் (சேர்விசஸ்) எல்டீடீ கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக அமையும் என்பதை 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 242 (3) (b) பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகிறது.

கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் "ஸ்ரீலங்கா டெலிகொம் (சேர்விசஸ்) எல்டீடீ" என அமைவதோடு இந்த கூட்டிணைவு 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி அமுல்படுத்தப்படும் அல்லது அந்தத் திகதி கம்பனிகள் பதிவாளரினால் தீர்மானிக்கப்படலாம்.

கூட்டிணைவை அங்கீகரிக்கும் தீர்மானம் சட்டத்தின் 242 (4) ஆம் பிரிவுக்கு அமைய கூட்டிணைவு முன்மொழிவுக்கு அமைவாக கருதப்படுவதோடு அவை எந்த ஒரு கூட்டிணைவு நிறுவனத்தின் எந்த ஒரு பங்குதாரர் அல்லது கடன்தருநர் அல்லது சாதாரண வர்த்தக நேரங்களில் கொழும்பு 01, லோடஸ் வீதி, டெலிகொம் தலைமையகம், ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி இன் நிறுவன செயலாளரின் அலுவலகத்தில் கடப்பாடு ஒன்றின் கீழ் கூட்டிணைவு நிறுவனம் ஒன்றின் எந்த ஒரு நபருக்கும் மேற்பார்வைக்காக கிடைக்கப்பெறும்.

சபையின் ஆணைப்படி
நிறுவன செயலாளர்
எஸ்எல்டீ விசன்கொம் (பீவீடீ) எல்டீடீ

சபையின் ஆணைப்படி
நிறுவன செயலாளர்
எஸ்எல்டீ டிஜிட்டல் சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடீ

சபையின் ஆணைப்படி
நிறுவன செயலாளர்
ஸ்ரீலங்கா டெலிகொம் (சேர்விசஸ்) எல்டீடீ

2024 பெப்ரவரி 22

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2022.10.05 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.என்.எஸ். உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.03.01 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 304 இன் பேரில் கெலிஓய, கம்பளை வீதி, இல. 150 மற்றும் 150/2 மற்றும் வெலம்பொட, கண்டி றோட், இல. 184 B, என்னும் முகவரியில் அமைந்த M/S ரோஸ் பெல்ட் பிரைவேற் லிமிற்றெட்டிடமிருந்து 2022.07.25 வரை முதலும் வட்டியும் ரூ. 129,637,966.04 (நூற்று இருபத்து ஒன்பது மில்லியன் அறுநூற்று முப்பத்தேழு ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தாறு ரூபாய் நான்கு சதம்) அத்துடன் ரூ. 92,214,376.44 (தொண்ணூற்றிரண்டு மில்லியன் இருநூற்றுப் பதினான்கு ஆயிரத்து முந்நூற்று எழுபத்தாறு ரூபாய் நாற்பத்து நான்கு சதம்) மீது ஆண்டுக்கு இருபத்து நான்கு தசம் இரண்டு ஏழு (24.27மூ) வீதத்தில் 2022.07.26 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.என்.எஸ். உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.03.01 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 304 இன் பேரில் ரூ.129,637,966.04 (நூற்று இருபத்து ஒன்பது மில்லியன் அறுநூற்று முப்பத்தேழு ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தாறு ரூபாய் நான்கு சதமும்) அத்துடன் 2023.07.26 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கம்பளை மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பட்ட அட்டவணை.**

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் கங்கபலாத்த கோரளை மற்றும் உடுநுவர பிரதேச சபை எல்லைகளுள் தெஹிபாகொட கிராமம் கிராம சேவகர் பிரிவில் அமைந்த "வீய்யாலகும்புரெ அப்புஹாமிகே வத்த" அல்லது "வகலே கும்புரேவத்த" மற்றும் "ஹிட்டினகெதரவத்த" இன் பகுதி என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.எம்.எஸ்.பி. கருணாரத்ன தயாரித்த 2021.05.17இல் உப பிரிவாக்கப்பட்ட 2016.04.27 திகதியிட்ட வரைபடம் இல. 9588 இல் காணித்துண்டு B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு B, வடக்கில் ஹிட்டினகெதரவத்தயின் பகுதியைப் பிரிக்கும் முளை வேலியும், கிழக்கில் கண்டியிலிருந்து கம்பளை வரை செல்லும் சுனுயு பெருந்தெருவும், தெற்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.எம்,எஸ்.பி. கருணாரத்ன தயாரித்த வரைபடம் இல. 9587 இல் காணித்துண்டு A உம். மேற்கில் ஊரங்கஹேனயும் ஷ்ல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் பதின்மூன்று தசம் எட்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.02, பே.13.8) அல்லது ஹெக்டெயார்கள் 0.2372 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

இக்காணி பின்வரும் காணியின் ஒரு பகுதியும் உபபிரிவும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கங்கபலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் உடுநுவர பிரதேச சபை எல்லைகளுள் தெஹிபாகொட் கிழக்கு 37ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் தெஹிபாகொட, கம்பளை வீதியில் அமைந்த வீய்யாலகும்புரெ அப்புஹாமிகே வத்த அல்லது வகல கும்புரேவத்த மற்றும் ஹிட்டினகெதரவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.எம்,எஸ்.பி. கருணாரத்ன தயாரித்த மிகவும் சரியானது 2016.04.27 திகதியிட்ட (எனினும் 2016.04.22 என பதிவு செய்துள்ள) வரைபடம் இல. 8447இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்ட குறித்த காணித்துண்டு 01, வடக்கில் ஹிட்டினகெதரவத்தயின் பகுதியைப் பிரிக்கும் முளை வேலியும், கிழக்கில் கண்டியிலிருந்து கம்பளை வரை செல்லும் பெருந்தெருவும், தெற்கிலும் தென் மேற்கிலும் அருமதெனியவத்தயும் உருவன்கேஹேனயும் மேற்கில் உருவன்கேஹேனயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் முப்பத்து மூன்று தசம் எட்டு பேர்ச்சுகள் (ஏ.1, றூ.0, பே.33.8) அல்லது அல்லது ஹெக்டெயார்கள் 0.49017 விஸ்தீரணமுடைய காணியும் குருதெனிய தேயிலைத் தொழிற்சாலை என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதும் தேயிலை ஆணையாளர் பதிவு இல BF/26ஐக் கொண்ட தேயிலைத் தொழிற்சாலையுடன் ஏனைய கட்டிடங்கள் மற்றும் மேற்கூறிய தொழிற்சாலைக்கு தற்சமயம் அங்கு பொருத்தியுள்ள இயந்திர சாதனங்கள், பொருத்துக்கள், தளபாடங்கள், கருவிகள், உபகரணங்கள், ஆகியவையும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் C 511/129 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வரைபடம் இல. 8447 இல் மேற்கூறிய காணித்துண்டு 01, பின்வரும ஒன்றிணைத்த காணிகளின் ஒரு மீளளவை ஆகும்.

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கங்கபலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் உடுநுவர பிரதேச சபை எல்லைகளுள் தெஹிபாகொட கிழக்கு 37ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் தெஹிபாகொட, கம்பளை வீதியில் அமைந்த வீய்யாலகும்புரெ என கும்புரேவத்த அப்புஹாமிகே வத்த அல்லது அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ.ஏ. ஜயகொட தயாரித்த 1993.03.30 திகதியிட்ட வரைபடம் இல. 3208இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 01, உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ.ஏ. ஜயகொட தயாரித்த வரைபடம் இல. 3208இல எல்லை நிர்ணயித்த மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 1 வடக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 3208 இல் காணித்துண்டு 02 என அடையாளமிட்ட ஹிட்டினகெதரவத்தயின் பகுதியும், கிழக்கில் கண்டியிலிருந்து கம்பளை வரை செல்லும் பெருந்தெருவும், தெற்கிலும் தென் மேற்கிலும் அருமதெனியவத்தயும் உருவன்கேஹேனயும் மேற்கில் உருவன்கேஹேனயும் எல்லைகளாகக் கொண்டு மூன்று றூட் பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.3, பே.13.5) சமமான ஹெக்டெயார்கள் பூச்சியம் தசம் மூன்று ஏழு ஏழு பூச்சியம்( ஹெக். 0.3770) விஸ்தீரணமுடைய காணியும் கெலிஓயா, கம்பளை வீதி, வரி மதிப்பு இல. 150, 150/2 ஐக் கொண்டதும் குருதெனிய தேயிலைத் தொழிற்சாலை என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதும் தேயிலை ஆணையாளர் பதிவு இல. BF/26ஐக் கொண்டதுமான தேயிலைத் தொழிற்சாலையுடன் ஏனைய கட்டிடங்கள் மேற்கூறிய தொழிற்சாலைக்கு தற்சமயம் உபயோகிக்க அங்கு பொருத்தியுள்ள இயந்திர சாதனங்கள், தளபாடங்கள், பொருத்துக்கள், கருவிகள், உபகரணங்கள், ஆகியவையும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள், பயிர்ச்செய்கைகள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் ஊ 437/244இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கங்கபலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் உடுநுவர பிரதேச சபை எல்லைகளுள் தெஹிபாகொட கிழக்கு 37ஆம் இலக்க சேவகர் கிராம கம்பளை பிரிவில் தெஹிபாகொட, அமைந்த வீதியில் ஹிட்டினகெதரவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ.ஏ.யு ஜயகொட தயாரித்த 1993.03.30 திகதியிட்ட வரைபடம் இல. 3208இல் காணித்துண்டு 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 02, வடக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 3208 இல் காணித்துண்டு 02 ஹிட்டினகெதரவத்தயின் மீதிப் பகுதியும், கிழக்கில் கண்டியிலிருந்து கம்பளை வரை செல்லும் பெருந்தெருவும், தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 3208 இல் காணித்துண்டு 02உம் மேற்கில் உருவன்கேஹேனயும் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயார்கள் பூச்சியம் தசம் ஒன்று ஐந்து இரண்டு நான்கு ஏழு (ஹெக். 0.15247) க்குச் சமமான ஒரு றூட் இருபது தசம் மூன்று பேர்ச்சுகள் (ஏ.0, றூா.1, பே.20.3) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் C506/107இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி டீ.ஜீ.வீ.எல். பண்டார**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**கம்பளை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பிஸ்கல் ஏலவிற்பனையில் விற்பனை செய்யும் அறிவித்தல்

### கேகாலை மாவட்ட நீதிமன்றம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த
த.பெ. 2085, கொழும்பு - 02 மற்றும்
இல. 371, பிரதான வீதி, கேகாலை
- முறைப்பாட்டாளர் -

கேகாலை மாவட்ட : 1124/MB
நீதிமன்ற வழக்கு இலக்கம்
ருவன்வெல்ல மாவட்ட
நீதிமன்ற எஸ்கிசி இல: 111/22

- எதிராக -
பொல்கம்பல ரால்லாகே நிலாமணி மெனிகே
பொல்கம்பல
பொல்கம்பல, கொட்டியாகும்புர
- எதிர் மனுதாரர் -

2020ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி உட்படுத்தப்பட்ட தீர்ப்பு வெளியீட்டின் பிரகாரம் எதிர்மனுதாரரால் 2019.05.31ம் திகதிக்கு செலுத்தப்படாது மீதியுள்ள தவணைகளுடன் சம்பந்தப்பட்ட கடன் தொகையின் பகுதியான ரூபா மூன்று இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து முன்னூற்றி நாற்பத்தியெட்டு மற்றும் ஐம்பத்து ஐந்து சதம் - (ரூ.339,348.55) உம் அத்தினத்திற்கு செலுத்தாது தவறியுள்ள தவணையின் அடிப்படையில் ஒன்று சேர்ந்துள்ள நிலுவை வட்டித் தொகையான ரூபா மூன்று இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து மூன்றூற்று ஆறு மற்றும் என்பத்து ஒன்பது சதம் - (ரூ. 364,306.89) உம் அவ்வாறு செலுத்தாது தவறியுள்ள நிலுவை தவணைத் தொகைக்கும் ஒன்று சேர்ந்துள்ள தாமதவட்டியான ரூபா ஒன்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முன்னூற்று முப்பது (ரூ.919,330.00) தொகையும் மற்றும் வங்கியினால் உங்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சார்பாக வங்கிக்கு ஏற்பட்டுள்ள ஏனைய செலவுகளுக்காக ரூபா தொன்னூற்றி ஐயாயிரத்து நூற்றி ஆறு மற்றும் நாற்பது சதம் (ரூ.95,106.40) உடன் மேற்படி தினத்திற்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையான ரூபா பதினேழு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொன்னூற்றி ஒன்று மற்றும் என்பத்து நான்கு சதம் (ரூ.1,718,091.84) ஐயும் எதிர்மனுதாரரால் செலுத்த வேண்டும் என்பதையும், மேலும் அவ்வாறு செலுத்தவில்லையாயின் இது வரை செலுத்தியில்லாத நிலுவை மாதாந்த தவணை தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை மேற்படி தொகையின் மீதி மேற்படி 2019.06.01ம் திகதிக்கு வருடாந்தம் 24% ஆன மேலதிக வட்டி, இவ் வழக்கின் தீர்ப்பு வெளியிட்ட தினம் முதல் முழுமையான தொகையை அறவிட்டுக் கொள்ளும் தினம் வரை மேற்படி முழுமையான தொகையின் அடிப்படையில் நாளாந்த வட்டி, வழக்கு கட்டணம், ஏலவிற்பனை கட்டணம் என்பவற்றை அறவிட்டுக் கொள்வதற்காக மேற்படி பெயர்களை உடைய எதிர்மனுதாரருக்கு சொந்தமான என்னால், தடைக்கு உள்ளாக்கப்பட்டு பெறப்பட்ட இங்கு கீழே அட்டவணையில் விவரமாகத் தரப்பட்டுள்ள சொத்து சம்பந்தமாக அவர்களுக்கு சொந்தமான சகல - உரிமைகள் மற்றும் உரித்துரிமைகள் 2024 மார்ச் 28ம் திகதி அச் சொத்து அமைந்துள்ள இடத்தில் பி.ப. 1.00 இங்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**மேற்படி அட்டவணை**

சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தின், பெலிகல் கோரளே, கிரவெலி பத்துவே, வரக்காபொல பிரதேச சபை எல்லையில், வரக்காபொல பிரதேச செயலாளர் பிரிவில், பொல்கம்பல கிராம அதிகாரி எல்லைக்குள் பொல்கம்பொல கிராமத்தில் வசிக்கும் இஹலவத்தேஹேன எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. T.A. உஸ்மான் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 445 மற்றும் 1996.11.18 ஆகிய தினங்களில் வரைபடத்தின் பிரகாரம், துண்டு இல. 03 எனும் பிரிவிற்கு எல்லையாக, வடக்காக துண்டு இல. 06 (வீதி காப்பரன்) 2ம், கிழக்காக துண்டு இல. 06 (வீதி காப்பரன்) உம், தெற்காக துண்டு இல. 04 மற்றும் மேற்காக தன்தெனிய வத்தவும், ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ளன, முப்பத்து ஆறு பேர்ச் (ஏக் 0, ரூட் 0, பேர்ச் 36) கொண்ட காணி மற்றும் அதற்கு உரித்தான வீடு, கட்டிடம், மரங்கள், பழங்கள் போன்ற சகலதுடன் ஆகும். மேலும் மேற்படி இல. 445 வரைபடத்தின் காணித்துண்டு இல. 06 வீதியின் பயன்பாட்டு உரிமையும் அடங்கும்.

இது கேகாலை காணிப்பதிவு அலுவலகத்தின் E1100/92 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்**
**பதிவாளர்/ பிரதி பிஸ்கல்**
**மாவட்ட நீதிமன்றம்**
**ருவன்வெல்ல**

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.12.04 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி. ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2017.08.30 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3981இன் பேரில் கட்டுகஸ்தோட்டை, யட்டிவாவல, இல. 408/5B, எனும் முகவரியைச் சேர்ந்த திரு. மல்லிகாராச்சி தொன் ரஞ்சன் சுபாசித் மல்லிகாராச்சி மற்றும் திருமதி. பெந்தர ஹெட்டிஆரச்சிகே ஹர்ஷி நளினா எனும் பென்தர ஹெட்டி ஆரச்சிகே ஹர்ஷி நளின் ஆகியோரிடமிருந்து ஆறு மில்லியன் நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.10.12 வரை முதலும் வட்டியும் ரூ. 10,482,731.86 (பத்து மில்லியன் நானூற்று எண்பத்து இரண்டு ஆயிரத்து எழுநூற்று முப்பத்தொரு ரூபாய் எண்பத்தாறு சதமும்) அத்துடன் ரூ. 6,000,000.00 (ஆறு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு 26.25% வீதத்தில் 2023.10.13 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் தொழிற்படு மூலதனக் கடன் வசதி மீது 2023.10.12 வரை முதலும் வட்டியும் ரூ.2,103,331.45 (இரண்டு மில்லியன் நூற்று மூன்று ஆயிரத்து முந்நூற்று முப்பத்தொரு ரூபாய் நாற்பத்தைந்து சதமும்) அத்துடன் ரூ.1,800,000.00 (ஒரு மில்லியன் எண்ணூறு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு 4% வீதத்தில் 2023.10.13 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு திருமதி. ஆர்.வீ அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2017.08.30 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3981இன் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று மீது ரூ.10,482,731.86 (பத்து மில்லியன் நானூற்று எண்பத்து இரண்டு ஆயிரத்து எழு நூற்று முப்பத்தொரு ரூபாய் எண்பத்தாறு சதமும்) தொழிற்படு மூலதனக் கடன் மீது ரூ. 2,103,331.45 (இரண்டு மில்லியன் நூற்று மூன்று ஆயிரத்து முந்நூற்று முப்பத்தொரு ரூபாய் நாற்பத்தைந்து சதமும்) அத்துடன் 2023.10.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கண்டி மேற்தரக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம். ஹாரிஸ்பத்துவ குலுகம்மனசியபற்றுவில் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை எல்லைகளில் மற்றும் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் உடுவாவல கிராம : உத்தியோகத்தர் பிரிவில் உடுவாவலயில் அமைந்த "மொரகிரிகந்தெஹேன (தற்போது வத்த) தலகொலவத்த" யின் பகுதி என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஏக்கநாயக்க தயாரித்த 2015 ஆகஸ்ட் 20 திகதியிட்ட வரைபடம் இல 5109 A இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 1, வடக்கில் மொரகிரிகந்தெஹேன மற்றும் வரைபடம் இல. 4859 இல் தலகொல வத்த காணித் துண்டு 11 உம் பிரதான பாதைக்கான பாதையும் மொரகிரிகந்தெ ஹேனயும் வரைபடம் இல. 4859 இல் தலகொலவத்த காணித்துண்டு 8 உம் கிழக்கில் மொரகிரிகந்தெ ஹேனயும் வரைபடம் இல. 4859 இல் தலகொல வத்த காணித்துண்டு 8 உம் மொரகிரிகந்தெஹேனயும் வரைபடம் இல. 3852 இல் தலகொலவத்த காணித்துண்டு 2 உம் மொரகிரிகந்தெ ஹேனயும் வரைபடம் இல. 3852 இல் தலகொலவத்த காணித்துண்டு 1 உம் தெற்கில் மொரகிரிய அல்லது வீரகொட்டுவ, பிரதான பாதைக்கு பாதை மற்றும் மொரகிரிய அல்லது வீரகொட்டுவயும் மேற்கில் மொரகிரிகந்தெஹேன மற்றும் வரைபடம் வரைபடம் இல. 4006 இல் தலகொலவத்த காணித்துண்டு 01 உம் மொரகிரிகந்தெ ஹேனயும் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4859 இல் தலகொலவத்த காணித்துண்டு 17உம் மொரகிரிகந்தஹேன மற்றும் தலகொலவத்த வரைபடம் இல.4859 இல் காணித்துண்டு 11 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5109 இன் பிரகாரம் முப்பத்தாறு தசம் ஏழு. பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.36.7) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் T 126/46ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி**

**டீ.எம்.டீ.என். ஜயதிலக்க**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி,**
**மேற்தரக்கிளை**
**கண்டி**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பகிரங்க அறிவித்தல்

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள பிட்டகோட்டே 'ஜயராஜ சிட்டி திட்டத்தின்' கடை அறைகளைப் பெற்றுக் கொள்வதற்காக காசு வைப்புச் செய்து மீண்டும் காசு பெற்றுக் கொள்ளாத சகல நபர்களுக்கும் விடுக்கும் அறிவித்தல்**

இந்த செயற்றிட்டம் தற்போது இடை நிறுத்தப் பட்டுள்ளதால் இச்செயற்றிட்டத்தின் கடை அறைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சபையில் காசு வைப்புச் செய்து தற்போது மீண்டும் காசு பெற்றுக் கொள்ளாத சகல நபர்களும் 2024.03.19ம் திகதிக்கு முன்பு உங்களால் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு நிதி வைப்புச் செய்த சிட்டைகளின் மூலப்பிரதிகள் இச்சபைக்கு அலுவலக நேரங்களில் கணக்காளருக்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கிறேன்.

**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

2024.02.29ம் திகதியன்று தலைமையகத்தில்

## நீர்கொழும்பு மாநகர சபை

**2024ம் ஆண்டிற்காக டயர் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் 2024ம் ஆண்டிற்காக டயர் கொள்வனவு செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| டயர் வகை | அளவு |
|---|---|
| 18.4 - 26 டயர் | 02 |
| 12.5 / 80 - 18 டயர் | 02 |
| 600 x 16 டயர் | 20 |
| 600 x 16 டயர் | 20 |
| 750 x 16 டயர் | 20 |
| 750 x 16 டியூப் | 20 |
| 750 x 16 டேப் | 20 |

| டயர் வகை | அளவு |
|---|---|
| 14 x 28 டயர் | 14 |
| 215/75 R 17.5 டயர் | 04 |
| 145 R 12 LT டயர் | 04 |
| 165 - R 14 LT டயர் | 04 |
| 12 x 28 டயர் | 02 |
| 13 x 28 டயர் | 02 |
| 825 x 16 டயர் | 02 |

2. கேள்வி ஆவணம் மற்றும் அறிவுறுத்தல் பத்திரம் ரூ. 3000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024.03.01 முதல் 2024.03.15 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மாநகர கணக்காளர் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைமனுக்கள் கோரல் ஆவணங்களை 2024.03.01 முதல் 2024.03.15 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மாநகர கணக்காளர் திணைக்களத்தில் இருந்து இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2024.03.18 பி.ப. 3.00 இற்கு முன்பு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2024ம் ஆண்டிற்காக டயர் வழங்குதல்' என்று குறிப்பிடுங்கள்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் – மாத்தறை

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 15.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை செய்யப்படும் திகதி 16.03.2024**

| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | மாத்தறை உயன்வத்தை கிளை |
|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | மாத்தறை உயன்வத்தை, மொறவக்க, வலிகம, அக்குரஸ்ஸ, ஹக்மன, தெனியாய, கம்புருபிட்டிய, டிக்வெல்ல, மாத்தறை தர்மபால மாவத்தை, தெவிநுவர, ஊருபொக்க, வலஸ்கல, கந்தர |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | றுகுனு பல்கலைக்கழகம், யட்டியான, கொட்டுவேகொட, பிடபத்தர, ஓபாத, மிரிஸ்ஸ, தெலிஜ்ஜவில, தெய்யந்தர, கிரிந்த பல்லேகம, மாகந்துர, வல்கம, மாவரல, கோட்டகொட, ககனதுர |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல.215 அநகாரிக தர்மபால மாவத்தை**
**மாத்தறை**
**தொலைபேசி இல. 041-2222822, 041-2222781, 041-2226481**

PEOPLE'S BANK
Pride of the Nation

## நீதி அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட சட்டபூர்வ நியமனங்களுக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (MIS) வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், வரிசைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

**ஒப்பந்த இலக்கம் - MOJ/ACT/36/08/2023**

நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட சட்டபூர்வ நியமனங்களுக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (MIS) வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், வரிசைப்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். மேலதிக விபரங்களுக்கு www.moj.gov.lk மற்றும் promise.lk என்பவற்றைப் பார்க்கவும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்**
**அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு,**
**இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**
**011-2438178**

## 2011 இல.40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல.5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு ஜே.ஏ.கே. உதேஷிகா பிரியதர்ஷனி இனால் 2020.09.04ம் திகதி விற்பனை இலக்கம் 268 இன் கீழ் எழுதி உறுதி செய்யப்பட்ட எல்.டி.மொல்லியகொட உத்தரவுபெற்ற நில அளவையாளரினால் 2000.12.22ம் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3057 வரைபடத்தில் காட்டப்படும், லொட் இல. 01 என்ற 10 பேர்ச் விசாலமான காணித்துண்டு, (கேகாலை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் கே 61/23இல் பதிவு செய்யப்பட்டுள்ளது) கேகாலை உயர் நீதிமன்றத்தில் HCSPL 6824/2024 வழக்குடன் சம்பந்தப்பட்ட 2011 இல.40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல.5 நிதிமோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(2) பிரிவின் பிரகாரம் செயற்பாடற்றதாக்கும் கட்டளையை உறுதி செய்து நீடிக்கப்பட்டுள்ளது.

## 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்ளல்

### பாதுகாப்பு அமைச்சு

2024ம் ஆண்டிற்காக வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் கோரல் 2023.11.17ம் திகதி முடிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் கிடைக்கப் பெற்றுள்ள வேண்டுதல் பற்றி கவனத்தில் கொண்டு 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கு 2024.03.01 முதல் 2024.03.15 வரை விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும். அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி காணப்படுவதுடன் மேலதிக விபரங்களை www.defence.lk இணையதளத்திற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ள முடியும். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2024ம் ஆண்டிற்காக பதிவு செய்வதற்கு தற்போது விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் அவசியமில்லை.

**செயலாளர்,**
**பாதுகாப்ப அமைச்சு.**

## விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

### தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை

# பதவி வெற்றிடம்/2024

**தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் மாதிரி தென்னந்தோட்டங்கள் (மா.தெ.தோ) சேவையின் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### பதவி : தகவல் தொழில்நுட்ப அதிகாரி (மா.தெ.தோ) (JM 1-2) IIம் தரம்

**சேவை நிலையம்** : தலைமையகம் - பதவி 01

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கனணியியல் பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டம்

அத்துடன்

அரச/ கூட்டுத்தாபனம் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய ஒரு வருட சேவை அனுபவம்

**சம்பள வகுதி** : JM 1-2

**சம்பள அளவு** : ரூ.43,355-755x10-1135x18-71,335

**வயது** : 22 வயதுக்கு குறையாத மற்றும் 15 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். தற்போது அரச/கூட்டுத்தாபன/சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிக்கு மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

### பதவி : சட்டஅதிகாரி (மா.தெ.தோ) (JM 1 - 2) - IIம் தரம்

**சேவை நிலையம் - தலைமையகம் - பதவி 01**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் பற்றிய பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஒரு வருடத்திற்கு குறையாத செயற்பாட்டு சேவை அனுபவத்தை பெற்றிருத்தல் / உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் ஒரு வருடத்திற்கு குறையாத செயற்பாட்டு சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**சம்பள வகுதி** : JM 1-2

**சம்பள அளவு** : ரூ.43,355/-755x10-1135x18-71,335

**வயது** : 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபைகளின் சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

### பதவி : கணக்கியல் அதிகாரி (மா.தொ.தோ) (JM 1-2) IIம் தரம்

**சேவை நிலையம் - தலைமையகம் - பதவி 01**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** : கணக்கியல் பாடத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்/ அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் கணக்கியல் நிறுவனத்தில் மத்திய பரீட்சையை சித்தியடைந்திருத்தல்/ கணக்கியல் பற்றிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

அரச/ கூட்டுத்தாபன அல்லது அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கு விடயங்கள் பற்றிய ஒரு வருட சேவை அனுபவம்.

**சம்பள வகுதி** : JM 1-2

**சம்பள அளவு** : ரூ.43,355/- 755x10-1135x18-71,335

**வயது** : 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபைகளின் சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

### பதவி : கணக்காய்வு அதிகாரி (மா.தெ.தோ) (JM 1-2) IIம் தரம்

**சேவை நிலையம் - தலைமையகம் - 01 பதவி**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** : நிதி நிர்வாக பாடத்துடன் வர்த்தக முகாமைத்துவம் பற்றிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்/ வணிகமாணி பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் கணக்கியல் நிறுவனத்தில் மத்திய பரீட்டையில் சித்தியடைந்திருத்தல்/ கணக்கியல் பற்றிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

அரச/ கூட்டுத்தாபன அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணக்கு மற்றும் கணக்காய்வு விடயங்கள் பற்றிய ஒரு வருட சேவை அனுபவம்.

**சம்பள அளவு** : ரூ.43,355/- 755x10-1135x18-71,335

**வயது** : 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபைகளின் சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**வெற்றிட எண்ணிக்கை** : 01 பதவி, தலைமையகம், பத்தரமுல்ல

### பதவி: உதவி சந்தைப்படுத்தல் மேம்பாட்டு முகாமையாளர் (தோட்ட) (மா.தெ.தோ) IIம் தரம்.

**சேவை நிலையம் : தலைமையகம் - பதவி 01**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** : சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பாடத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்

அத்துடன்

அரச/ கூட்டுத்தாபன அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ விடங்கள் பற்றிய 04 வருட சேவை அனுபவம்.

**சம்பள வகுதி** : JM 1-2

**சம்பள அளவு** : ரூ.43,355/-755x10-1135x18-71,335

**வயது** : 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். தற்போது அரச/ கூட்டுத்தாபன/சபைகளின் சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**வேறு நிபந்தனைகள்,**

சகல விண்ணப்பதாரிகளும்,

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றக்கூடிய உடல் மற்றும் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல்.

**விண்ணப்பங்கள் :**

- அதன் பிரகாரம் 2024.03.15 திகதிக்கு குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் இணையதளத்தில் உள்ள மாதிரியின் பிரகாரம் அல்லது தம்மால் தயாரித்துக் கொண்ட மாதிரியொன்றைப் பாவித்து விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். அவ்வாறே கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய விபரங்களை அடக்கியதாக அத் தகைமைகளை உறுதிசெய்யக் கூடிய சான்றிதழ்களின் உறதி செய்த பிரதிகளுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தற்போது அரச/கூட்டுத்தாபன/சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைமை மூலம் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு வேண்டும் பதவியை குறிப்பிடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒரு பதவிக்கு ஒன்று வீதமாக விண்ணப்பங்களை வேறு வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- சகல விண்ணப்பங்களையும் 2024.03.15 அல்லது அத்தினத்திற்கு முன் கிடைக்குமாறு "தலைவர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொணடுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது சம்பந்தமாக குறித்த ஆட்சேர்ப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இப்பதவி சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் அதற்கான தகைமையற்றதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**தலைவர்,**
**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல,**

**மேற்படி பதவிக்காக குறித்த விண்ணப்பத்தை கீழ்க்காணும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு அறிவித்துக் கொள்கிறேன்.**

**அவ்வாறே அவ்வாறு பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு ஏதேனும் அசௌகரியம் இருப்பின் தம்மால் தயாரித்துக் கொண்ட மாதிரியைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை அனுப்புமாறு கோட்டுக் கொள்கிறேன்.**

**https://coconutsrilanka.lk/**

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - கொழும்பு கிழக்கு மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி கொழும்பு கிழக்கு பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருட காலத்திற்கு அடகு வைக்கப்பட்ட 15.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை செய்யப்படும் திகதிகள் 16.03.2024 மற்றும் 17.03.2024

| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | பத்தரமுல்ல | கங்கொடவில |
|---|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | அத்துருகிரிய, பத்தரமுல்ல, கொலொன்னாவ கொட்டிகாவத்த. கடுவெல | மஹரகம, கொட்டாவ. நுகேகொட நகரம் கங்கொடவில் நுகேகொட பிடகோட்டே |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | தலவத்துகொட, மாலபே, ஹோகந்தர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வெல்லம்பிட்டிய கொதட்டுவ, முல்லேரியா புதிய நகரம், நவகமுவ, பண்டாரவத்த | பன்னிப்பிட்டிய, பமுனுவ ஹபரக்கட, மத்தேகொட, கொஹுவல தெல்கந்த, ஜயவர்தனபுர அம்புல்தெனிய நாவல, ராஜகிரிய, அதுல்கோட்டே, தலபத்பிடிய |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர்
பிராந்திய தலைமைக் காரியாலயம்
இல.177A, உயர் மட்ட வீதி (High Level Road), நுகேகொட
தொலைபேசி இல. 0112812260/0112854189

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK Pride of the Nation

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை – ராஜகிரிய

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் கடை அறைகளை கேள்வி கோருவதற்காக விலைமனுக் கோரலுக்காக விடுக்கப்படும் பகிரங்க அறிவித்தல்.

அதனடிப்படையில் கீழ்க்காணும் குறைந்தபட்ச மாதாந்த வாடகையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுவதுடன் இதனோடு சம்பந்தப்பட்ட பெறுகைப் பத்திரங்கள் 2024.03.01 முதல் 2024.03.22 பி.ப. 3.00 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வர்த்தக கட்டிடத் தொகுதி | மாடிகள் | கடை இலக்கம் | குறைந்தபட்ச மாதாந்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| வெலிக்கடை பிளாஸா | தரை மாடி | 01 | ரூ.250,000.0 |
| | முதலாம் மாடி | 23<br>38 | ரூ. 12,000.00<br>ரூ. 15,000.00 |
| | இரண்டாம் மாடி | 61<br>62 | ரூ. 6,500.00<br>ரூ. 7,500.00 |
| | மூன்றாம் மாடி | 71 | ரூ. 9,500.00 |
| ஹைலெவல் பிளாஸா | முதலாம் மாடி | 40 | ரூ. 5,000.00 |
| | இரண்டாம் மாடி | 96A | ரூ. 4,750.00 |
| | மூன்றாம் மாடி | 110B | ரூ. 4,000.00 |
| | தரை மாடி | C1 | ரூ. 5,500.00 |

**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

2024 பெப்ரவரி 29ம் திகதியில்

## இலங்கை வங்கி

### ஊறாப்பொலவில் இலங்கை வங்கி வரையறுக்கப்பட்ட புதிய சேவைக் கிளையை நிறுவுவதற்காக இடவசதி தேவைப்படுகின்றது

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.**

- ➢ கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டதாகவும் 10 வருடங்களுக்கு மேற்பட்டதாகவும் இருத்தல் ஆகாது.
- ➢ தரைப்பரப்பானது குறைந்தபட்சம் 3850 சதுர அடி இருத்தல் வேண்டும்.
- ➢ தரைப்பரப்பானது வெளிர் நிற தரை ஓடுகளினால் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் (அளவு 2' x 2' அல்லது சமமானது)
- ➢ குறைந்தபட்ச பிரதான வீதிக்கு முகப்பாக 30 அடி இருத்தல் வேண்டுமென்பதுடன் நகரின் எல்லைகளுக்குள் அமைந்திருந்தல் வேண்டும்.
- ➢ மின்னுற்பத்தி இயந்திரமொன்றின் அறைக்காக 100 சதுர அடி தரைப்பரப்பானது கட்டடத்தின் பின்புறத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அதனை அடைவதற்கான பாதையுமிருத்தல் வேண்டும்.
- ➢ குறைந்தபட்சம் 8 எண்ணிக்கையான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான பொருத்தமான இடவசதி.
- ➢ குறைந்த நிறமுள்ள (வெள்ளை விருப்பத்திற்குரியது) சீலிங் (அகற்றக்கூடிய இனம்)
- ➢ தொலைபேசி (ஸ்ரீலங்கா ரெலிகொம்), 3 வழி 60 Amp மின்சாரம் ஆகியன அலுவலக தேவைப்பாட்டிற்கமைவாக வழங்கப்படல் வேண்டும்.
- ➢ குறைந்தபட்சம் 1000 லீட்டர் கொள்ளளவுள்ள உயர்வான இடத்தில் வைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கியொன்று.
- ➢ குறைந்தபட்சம் 3 எண்ணிக்கையான கழிவறைகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கானதும் தனித்தனியாக பாவிக்கக்கூடியதும் அவற்றுள் ஒரு கழிவறையானது கட்டடத்தின் பின்புறத்தில் இருத்தல் வேண்டும்.
- ➢ தரையானது ஓடு பதித்திருப்பதுடன் கூரை அல்லது சிலப்பானது (Slab) சீலிங் ஒன்றினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.
- ➢ பின்புறத்திலுள்ள கதவு மற்றும் யன்னல்கள் பாதுகாப்பு தடுப்புக்களினால் அமைந்திருத்தல் வேண்டும் இல்லாவிடின் அவைகள் கனரக இரும்பு தடுப்புக்களினால் அமைந்திருத்தல் வேண்டும்.
- ➢ கட்டடத்திற்கான தீ காப்புறுதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம்காட்டும் தரப்பினர் கட்டட வரைபடப் பிரதி, நில அளவை வரைபடம், உரித்துடமை சான்றிதழ், இணக்கச் சான்றிதழ் மற்றும் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை ஆகியன 14 நாட்களுள் பின்வரும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**உதவி பொது முகாமையாளர்,**
**(மேல் மாகாணம் - வடக்கு),**
**இலங்கை வங்கி,**
**2 ஆம் மாடி, இலங்கை வங்கி மேர்சண்ட் கோபுரக் கட்டடம்,**
**கொள்ளுப்பிட்டி.**
**தொலைபேசி:0112575047/011-2381366.**
**தொலைநகல்: 2575047.**
**மின்னஞ்சல்: bocwpn@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# பங்களாதேஷ் டி20: குசல் பெரேராவுக்கு பதில் நிரோஷன் திக்வல்ல அழைக்கப்பட வாய்ப்பு

பங்களாதேஷுக்கு எதிரான டி20 தொடருக்கான இலங்கை அணியில் இருந்து துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா விலகி இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கை அணி நேற்று (29) பங்களாதேஷை நோக்கி புறப்பட்டுச் சென்றபோதும் குசல் பெரேரா இலங்கை அணியுடன் இணையவில்லை. அவர் சுகவீனமுற்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குசல் பெரேராவுக்கு பதில் துடுப்பாட்ட வரிசையில் மூன்றாவது இடத்தில் கமிந்து மெண்டிஸ் களமிறங்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சரித் அசலங்க தனது ஐந்தாவது வரிசையை தக்க வைத்துள்ளார்.



இந்நிலையில் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான குசல் பெரேராவுக்கு பதில் நிரோஷன் திக்வல்ல இலங்கை டி20 குழாத்திற்கு அழைக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர் தம்புள்ளையில் நேற்று இடம்பெற்ற தேசிய சுப்பர் லீக் போட்டியில் 21 பந்துகளில் 50 ஓட்டங்களை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே தடை காரணமாக முதல் இரு டி20 போட்டிகளிலும் இலங்கை டி20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்க ஆடவில்லை என்பதோடு பத்தும் நிசங்கவுக்கு டி20 போட்டிகளில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை அணி பங்களாதேஷுக்கு எதிராக தலா மூன்று டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளிலும் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் ஆடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று டி20 போட்டிகளும் எதிர்வரும் மார்ச் 4, 6 மற்றும் 9 ஆம் திகதிகளில் சில்ஹட்டில் நடைபெறவுள்ளது.

# சாஹிரா நூற்றாண்டு ரக்பி தொடர் நாளை ஆரம்பம்



ருஸைக் பாரூக்

கொழும்பு சாஹிரா கல்லூரி ரக்பி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள பாடசாலைகளுக்கு இடையிலான ரக்பி போட்டி நாளை (2) மற்றும் நாளை மறுதினம் (3) கொழும்பு, குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் நடைப்பெறுள்ளது.

இதில் சாஹிரா கல்லூரியுடன் றோயல் கல்லூரி, புனித பீட்டர்ஸ் கல்லூரி, திரித்துவ கல்லூரி, வெஸ்லி கல்லூரி, இசிபத்தான கல்லூரி, கிங்ஸ்வுட் கல்லூரி, தர்மராஜா கல்லூரி, ஸ்ரீ சுமங்கல கல்லூரி, புனித அலோசியஸ் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி, மகாநாம கல்லூரி, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, மலியாதேவ கல்லூரி மற்றும் லும்பினி கல்லூரி என மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தத் தொடர் ஆசிய ரக்பி, இலங்கை ரக்பி மற்றும் இலங்கை பாடசாலை ரக்பி சம்மேளனத்துடன் இணைந்து நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



வட மாகாண கால்பந்து லீக்:

# மன்னார்–கிளிநொச்சி லீக் இறுதிப் போட்டியில் மோதல்

இலங்கை விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாணத்தில் உள்ள கால்பந்தாட்ட லீக்குகளுக்கு இடையில் நடாத்தப்படும் கால்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு மன்னார் லீக் மற்றும் கிளிநொச்சி லீக் அணிகள் தெரிவாகியுள்ளன.

நொக் அவுட் முறையில் இடம்பெற்ற இந்த தொடரின் முதலாவது போட்டியில் வவுனியா லீக் அணியை வீழ்த்திய கிளிநொச்சி லீக் அணி, காலிறுதியில் வடமராட்சி லீக் அணியை வீழ்த்தி, அரையிறுதியில் முல்லைத்தீவு லீக் அணியை தோற்கடித்தே இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மறுபுறம் மன்னார் லீக் அணி முதல் போட்டியாக காலிறுதியில் பூனகரி லீக் அணியை வென்று அரையிறுதியில் வலிகாமம் லீக் அணியை வீழ்த்தியே இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதன்படி இந்த தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் இடம்பெறவுள்ளது.



இந்த சுற்றுத் தொடருக்கான கிளிநொச்சி லீக் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இலங்கை தேசிய அணியின் முன்னாள் வீரர் ஞானரூபன் வினோத்தும் உதவிப் பயிற்றுவிப்பாளராக மகீபனும் கடமையாற்றுகின்றனர்.

அதேபோன்று, மன்னார் லீக் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சாந்தன் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் உயிரிழப்பு 30,000ஐ தாண்டியது

காசாவில் போர் வெடித்து ஐந்து மாதங்களை தொடும் நிலையில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30,000ஐ தாண்டியுள்ளது.

சில நாட்களில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் ஒன்று பற்றி மத்தியஸ்தர்கள் நம்பிக்கை தெரிவித்து வரும் அதேநேரம், வடக்கு காசாவில் பஞ்சம் சூழ்ந்து வருவது பற்றி உதவி நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

காசா நகரின் அல் ஷிபா மருத்துவமனையில் ஊட்டச்சத்து குறைபாடு, நீரிழப்பு மற்றும் பரந்த அளவிலான பஞ்சத்தினால் சிறுவர்கள் உயிரிழந்து வருவதாக காசா சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா தெரிவித்துள்ளார். இவ்வாறான மேலும் உயிரிழப்புகளை தடுப்பதற்கு சர்வதேச அமைப்புகள் அவசர நடவடிக்கை எடுப்பதற்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

காசாவின் மோசமான சூழலை மேற்கோள் காட்டி இஸ்ரேல் எல்லைக்கடவைகளை மேலும் திறக்க வேண்டும் என்று யுஎஸ்எயிட் தலைவர் சமன்தா பொவர் வலியுறுத்தியுள்ளார். மனிதாபிமான உதவிகள் வேகமாக அதிகரிப்பதற்கு அது தீர்க்கமாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'இது உயிருக்கும் மரணத்துக்கும் இடையிலான விடயம்' என்று எக்ஸ் சமூகதளத்தில் பொவர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இஸ்ரேல் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக நடத்தும் தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் அங்கு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 30,035 ஆக அதிகரித்துள்ளது என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக நேற்றுக் காலை அங்கு தாக்குதல்கள் உக்கிரமைந்திருந்தது. இதில் 104 பேர் கொல்லப்பட்டு மேலும் 760 பேர் காயமடைந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

ஆறு வார போர் நிறுத்தம் ஒன்றுக்கு அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய மத்தியஸ்த நாடுகள் முயற்சித்து வருகின்றன. எனினும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸிடம் இருந்து இன்னும் உறுதியான பதில் கிடைக்கவில்லை.



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து ஆரம்பமான இந்தப் போரில் ஹமாஸை முழுமையாக ஒழிக்கப்போவதாக இஸ்ரேல் சூளுரைத்து வருகிறது.

காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக் கைதிகளை விடுவிப்பது மற்றும் காசாவுக்கு உதவிகள் செல்வது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட போர் நிறுத்தம் ஒன்றை எதிர்வரும் மார்ச் 10 அல்லது 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முஸ்லிம்களின் புனித ரமலான் மாதத்திற்கு முன்னர் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் முழுமையான போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தும் ஹமாஸ் காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் முழுமையாக வாபஸ் பெற கோருகிறது.

எனினும் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்தத்தில் இஸ்ரேலிய துருப்புகள் நகரங்கள் மற்றும் மக்கள் செறிந்த பகுதிகளில் இருந்து வெளியேறவே கோரப்பட்டுள்ளது.

உடன்பாடு ஒன்றின் இறுதிக் கட்டத்தை எட்டுவதற்கு (அமெரிக்க ஜனாதிபதி ஜோ) பைடன் எம் அனைவரையும் தள்ளி வருவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

இதில் எகிப்து எல்லையை ஒட்டி காசாவுக்கு உதவிகள் வரும் வாயிலாக இருக்கும் ராபாவில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் நிலையில் அந்த நகரம் தீர்க்கமானதாக உள்ளது.

மறுபுறம் வடக்கு காசாவுக்கு கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக எந்த ஒரு மனிதாபிமான அமைப்பும் உதவிகளை கொண்டு செல்ல முடியாமல் இருப்பதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேல் உதவிகள் செல்வதை முடக்குவதாக அது குற்றம்சாட்டியுள்ளது.

அண்டை நாடான ஜோர்தான் தெற்கு காசாவுக்கு வானில் இருந்து உதவிகளை போட்டுள்ளது. 'எதுவும் மாற்றமடையாத பட்சத்தில் வடக்கு காசாவில் பஞ்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது' என்று உலக உணவுத் திட்ட பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் கார்ல் சகாவு எச்சரித்திருந்தார்.

மக்கள் நிரம்பி வழியும் ரபா மீது படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியான நிலைப்பாட்டை எடுத்து வருகிறார். போர் நிறுத்தம் ஒன்று அந்த நடவடிக்கையை தாமதப்படுத்த மாத்திரமே செய்யும் என்றும் ஹமாஸுக்கு எதிரான முழு வெற்றிக்கு ரபா நடவடிக்கை அவசியமானது என்றும் அவர் கூறுகிறார்.

ரபாவை எல்லையாகக் கொண்டிருக்கும் எகிப்து, இந்தப் படை நடவடிக்கை பேரழிவை ஏற்படுத்தும் என்று எச்சரித்து வருகிறது.

காசாவின் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் மற்றவர்கள் போர் தமது வீட்டை விட்டு இடம்பெயர்ந்து ரபா பகுதியில் இருக்கும் டால் அல் சுல்தான் மாயனத்தில் நாட்களை கழித்து வரும் அஹமது என்பவர், அந்த மயானத்தில் புதைகுழிகளை வரிசையாகத் தோண்டுவது மற்றும் அடையாளப்படுத்துவதற்கு கற்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

'நான் வெவ்வேறு நபர்களைப் பார்க்கிறேன், ஆனால் ஒரே முகத்துடன், ஒரே துன்பத்துடன். மனவருத்தம் தருகிறது' என்று அவர் குறிப்பிட்டார். 'என்றாலும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த வேலையை நிறுத்த நான் விரும்புகிறேன்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# உதவி பெற கூடியவர்களின் மீது இஸ்ரேல் சரமாரி துப்பாக்கிச் சூடு

## 104 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு

காசா நகரின் அல் ரஷீத் வீதியில் உணவு உதவிக்காக காத்திருந்த பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் நேற்று (29) நடத்திய தாக்குதலில் குறைந்தது 104 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



வடக்கு காசாவுக்கான உதவிகளை இஸ்ரேலிய படை முற்றாக துண்டித்திருக்கும் நிலையில் அங்குள்ள மக்கள் உணவுக்காக காத்து வீதிகளில் திரண்டுள்ளனர். இவ்வாறு கூடியிருந்தவர்கள் மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்தை சென்றபோது பல உடல்கள் சிதறிக் கிடந்ததாக காசா அம்புலன்ஸ் சேவை தலைவர் பாரிஸ் அபானா தெரிவித்துள்ளார். இதில் காயமடைந்த சிலர் போதுமான அம்புலன்ஸ் வண்டிகள் இல்லாததால் கழுதை வண்டியில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அதிகாலை 4 மணி அளவில் உதவி லொறி வந்தபோது அதனை நோக்கி வீதிக்கு வந்த மக்கள் மீதே இஸ்ரேல் படை சூடு நடத்தியதாக 31 வயதான அஹமது என்பவர் 'மிட்டில் ஈஸ்ட் ஐ' செய்தித் தளத்திற்கு குறிப்பிட்டுள்ளார். அஹமதின் கை மற்றும் காலில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்துள்ளன. 'இந்த துப்பாக்கிச் சூடு கண்மூடித்தனமாக இருந்தது. அங்கிருந்தவர்களின் தலை, வயிற்றிலும் குண்டுகள் பாய்ந்தன' என்றும் அவர் கூறினார். கொல்லப்பட்ட ஒருவருக்கு மேலால் டாங்கிகள் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பசியில் இருந்த பலஸ்தீனர்கள் உணவு உதவி வண்டிக்காக காத்திருந்தபோது வன்முறை மிக்க அந்த ஒன்றுகூடலில் படையினர் பாதுகாப்பற்ற நிலையை உணர்ந்தனர் என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை பலஸ்தீன அதிகாரசபை ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், ஹமாஸ் அமைப்பு மற்றும் எகிப்து கடுமையாக கண்டித்துள்ளது.

# இஸ்ரேல் மீது தாக்குதலை தீவிரப்படுத்த ஹிஸ்புல்லாவுக்கு ஈரான் பச்சைக்கொடி

இஸ்ரேல் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்கு லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஈரான் புரட்சிக்காவல் படை பச்சைக்கொடி காண்பித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.



ஈரான் புராட்சிக் காவல் படையின் பிரிவான குத்ஸ் படை தளபதி இஸ்மைல் கானி, ஹிஸ்புல்லா செயலாளர் நாயகம் ஹசன் நஸ்ரல்லாவை பெய்ரூட்டில் இந்த வாரம் சந்தித்தபோது இந்த அறிவுறுத்தலை வழங்கி இருப்பதாக பல தரப்புகளை மேற்கோள் காட்டி துருக்கியின் 'அரபிக் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லெபனானில் இஸ்ரேலின் பரந்த அளவான நடவடிக்கை ஒன்றுக்கு தயாராக வேண்டி இருப்பதை கானி ஒப்புக்கொண்டிப்பதோடு இதற்கு ஹிஸ்புல்லா கடும் பதிலடி கொடுப்பதற்கு வலியுறுத்தப்பட்டிருப்பதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

லெபனானில் இஸ்ரேலின் தரைவழி நடவடிக்கைக்கான சாத்தியம் பற்றி அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகி இருக்கும் நிலையிலேயே ஹிஸ்புல்லாவின் தயார்படுத்தல்களும் தீவிரம் அடைந்துள்ளது,

ரபாவில் தரைவழி நடவடிக்கையை முடித்த பின் இஸ்ரேல் அதன் வடக்கு எல்லையில் தனது தாக்குதலை விரிவுபடுத்தும் என்பது அமெரிக்காவின் கணிப்பாக உள்ளது. இத்தகைய தாக்குதல் வசந்த காலத்தின் பிற்பகுதியில் அல்லது கோடையின் ஆரம்பத்தில் இடம்பெற வாய்ப்பு உள்ளது.

காசா போரை ஒட்டி ஏற்கனவே லெபனான் மற்றும் இஸ்ரேல் எல்லையில் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய படை தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றன. லெபனானின் தெற்கு கிராமமான கப்ராவில் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல் ஒன்றில் ஆடவர் ஒருவரும் அவரது மனைவியும் கொல்லப்பட்டதாக லெபனான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6476(MP) | Two (02) Nos. Prime Movers (Auto Transmission Model) | 600,000.00 | 12,500.00 | 2024.04.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6568 (MP) | 01 No. Safety Device of Alimak Elevators J – 01 STS Crane at JCT | 50,000.00 | 1,000.00 | 2024.04.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6567(EL) | Local Display Units for Wartsila W26 series Engines | 300,000.00 | 3,500.00 | 2024.04.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/04/ PT/6476(MP)A | Two (02) Nos. Prime Movers (Auto Transmission Model) | 600,000.00 | 12,500.00 | 2024.04.18 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/04/001 | Light fitting for proposed Administration Building at ECT | 224,000.00 | 3,500.00 | 2024.03.21 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/13/123(KC) | Rice 600,000 (KGS) (Keeri Samba, Samba, Kekulu (Rathu & Sudu) | 1,250,000.00 | 20,000.00 | 2024.03.21 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

www.adz.lk
it's what you want

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மேல் மாகாண கல்வித் திணைக்களம்

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் சார்பில் அதன் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் நிர்மாண வேலைகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இப்போது அழைக்கப்படுகின்றன.

**1. தொடர்பான வேலைகள்**

| பாடசாலையின் பெயர் மற்றும் வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆகக் குறைந்த தகைமைகள் (உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்களை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்) | மாதிரிப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா | கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆகக் குறைந்த பதிவு | ஒப்பந்தக் காலம் நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 01. ஹாபிடிகம தேசிய கல்விக் கல்லூரி மஹகமசேகர புதிய விடுதிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (ஒப்பந்த இலக்கம்: 2024/10) | ரொக்கப் பணமாக 50,000.00 ரூபா அல்லது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 105 நாட்களுக்குச் செல்லுபடியாகும் 100,000.00 ரூபாவுக்கான வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி | 01. திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் வசதிகள் நிகரமாகக் கிடைக்க வேண்டிய ஒப்பந்தத் தொகை 4 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.<br>02. 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கேள்விதாரராக பதிவு செய்துகொண்ட பதிவுச் சான்றிதழை கேள்விப் படிவங்களுடன் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>03. அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத ஒப்பந்தக்காரராகவிருத்தல் வேண்டும். | ரூபா 3,500.00 | 9,875,459.58 | CIDA 07 & 06 | 90 |
| 02. மஹரகம தேசிய கல்விக் கல்லூரி நூலகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (ஒப்பந்த இலக்கம்: 2024/11) | ரொக்கப் பணமாக 40,000.00 ரூபா அல்லது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 105 நாட்களுக்குச் செல்லுபடியாகும் 80,000.00 ரூபாவுக்கான வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி | 01. துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம்<br>02 பிரதான ஒப்பந்தக்காரராக இதற்குச் சமனான 4.5 மில்லியன் ரூபாவிற்கான (குறையாத) 01 திட்டத்தை நிறைவேற்றியிருத்தல்<br>03. திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் வசதிகள் நிகரமாகக் கிடைக்க வேண்டிய ஒப்பந்தத் தொகை 2.6 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.<br>04. 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கேள்விதாரராக பதிவு செய்துகொண்ட பதிவுச் சான்றிதழை கேள்விப் படிவங்களுடன் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். | ரூபா 3,000.00 | 6,556,395.40 | CIDA 07 & 06 | 120 |
| 03. மஹரகம தேசிய கல்விக் கல்லூரி 08ஆம் இலக்க விடுதியில் நீர் பாதுகாப்பைச் செய்தல் (ஒப்பந்த இலக்கம்: 2024/12) | ரொக்கப் பணமாக 25,000.00 ரூபா அல்லது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும் 50,000.00 ரூபாவுக்கான வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி | 01. திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் வசதிகள் நிகரமாகக் கிடைக்க வேண்டிய ஒப்பந்தத் தொகை 01 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். | ரூபா 2,500.00 | 3,837,260.00 | CIDA 08 & 07 | 120 |

1. கேள்வி கோரலானது மேல் மாகாண பிராந்திய கேள்விதாரர்களுக்கிடையில் தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
2. மேற்கூறிய 03ஆம் இலக்க அட்டவணையில் உள்ள ஒவ்வொரு செயற்றிட்டத்தின் பொருட்டும் கேட்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளை உறுதி செய்வதற்கான ஆவணங்கள், வியாபார பதிவுச் சான்றிதழ், வெட் வரிச் சான்றிதழ், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளினை இணைத்து அனுப்புதல் கட்டாயமாகும் என்பதுடன் பின்னர் கோரப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
3. இயைபுடைய கேள்விதாரர்கள் மேல் மாகாணத்தில், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வம் காட்டும் தகைமை கொண்ட கேள்விதாரர்கள் 011-2875727 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளர் / பெறுகை உத்தியோகத்தரிடம் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் இவ்வலுவலகத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேல் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூல வேண்டுகோளொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்களை, உரிய கட்டணங்களை மாகாண கல்வித் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024 மார்ச் மாதம் 01ஆம் திகதி முதல் 2024 மார்ச் மாதம் 19ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
